
கண்மணி
ஆர்.மணிமாலா
ரூ. 4
பெண்ணல்ல...
நீயொரு பெண்



# பெண்ணல்ல... நீயொரு பொம்மை

அர்விந்தன் காரை ஹைஸ்பீடில் செலுத்திக் கொண்டிருந்தான். அவன் இதயம் முழுக்க சந்தோஷ காற்று அடைத்துக் கொண்டிருந்தது. இன்னும் சில நிமிஷங்களில் அனிதாவை காணப் போகும் சந்தோஷம் உதட்டை குவித்து விசிலடிக்க வைத்தது.

கடற்கரை சாலையில் ஜெட் வேக பரபரப்போடு கார்களும், ஸ்கூட்டர்களும், பஸ்களும் பறந்து கொண்டிருந்தன. எழில்மிகு சென்னை 2000க்காக ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்த புதிய தோற்றம் அர்விந்தனை புருவம் உயர்த்த சொன்னது. சூரியனின் பொன்னிற கதிர்களால், ஜிகினா தூவியது போல் கடல் தகதகத்தது.

நாலைந்து வருடம் கழித்து பார்க்கும்போது சென்னை மட்டுமல்ல, இந்த கடலும் கூட அழகு கூடி தெரிகிறது.

அப்படியானால் அனிதா?

அனிதா எப்படியிருப்பான்?

அவள் இப்போது சாதாரண அனிதா இல்லை. மிஸ். மெட்ராஸ் அனிதா! 'ஹப்பா..' பெருமையில் மூச்சடைத்துக் கொண்டது அவனுக்கு.

தூரத்தில் அனிதா படிக்கும் கல்லூரி கட்டிடம் தாஜ்மகால் போல் வெள்ளைநிற டிஸ்டெம்பரில் பளபளத்தது. சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அது தாஜ்மகால்தான். என் இதய தேவதை கால்படும் இடமெல்லாம் காதலின் நினைவு சின்னமாக எழும்பக் கூடிய தகுதியை பெற்று விடுமே!

கார் அம்பு போல் சர்ரென கல்லூரி வாயிலில் நுழைந்து மூச்சை அடக்கியது.

வாட்ச்மேன் கார் பின்னாலேயே ஓடி வந்தான்.

"யார் வேணும். உங்களுக்கு? இது வகுப்பு நேரம். எதுவாயிருந்தாலும்..."

\- ஆர். மணிமாலா

"ஸ்டாப்மேன்!" என்ற அர்விந்தன் பாக்கெட்டில் இருந்து ஒரு சலவை நோட்டை உருவி அலட்சியமாய் வாட்ச்மேன் கையில் வைத்து அழுத்தினான்.

நூறு ரூபாய் நோட்டு கண்ணில் அறைய பற்கள் அத்தனையும் காட்டினான்.

"யாரை சார் பார்க்கணும்?"

"அனிதா! ஃபைனல் இயர் நியூட்ரிஷியன்.."

"ஓ.. அழகிப் போட்டியில பட்டம் வாங்கினாங்களே.. அவங்களா? அவங்களுக்கு நீங்க என்ன உறவு சார்?"

"ம்.. தாத்தா! டோண்ட் வேஸ்ட் மை டைம். நீ போறியா.. நாவே போகவா?"

"பிரின்ஸிபாலுக்கு தெரிஞ்சதுனா என் வேலையே போயிடும் சார். கிளாஸ் டயத்துல ரொம்ப அவசியமாயிருந்தா ஒழிய யாருமே ஸ்டூடன்ஸை பார்க்க அனுமதியில்லே. உங்களுக்கே நான் எதுனாச்சும் பொய் சொல்லித் தான் அனிதாம்மாவ கூட்டிட்டு வரணும். இப்ப நீங்களே கிளாஸ்க்கு போனீங்கன்னா.. அந்த ஆள் உள்ளே வரவரைக்கும் நீ என்ன பண்ணிட்டிருந்தேன்னு சீட்டை கிழிச்சிடுவாங்க சார்!"

"ஷிட்! இன்னும் எத்தனை காலத்துக்கு இப்படி பேசி பேசியே நேரத்தை போக்கப் போறீங்க? அதான்யா இண்டியா கடனுக்கு மேல கடனா வாங்கிட்டு இருக்கு. உருப்பட மாட்டீங்க!"

வாட்ச்மேன் அவனின் இன்டர்நேஷனல் லெவல் கோபத்துக்கு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

கார் டாஷ்போர்டிலிருந்து டன்ஹில் பாக்கெட்டை எடுத்து ஒரு சிகரெட்டை உருவி உதட்டில் வைத்தான். லைட்டரால் அதன் தலையை சுட்டு புகையை தொண்டை வரைக்கும் இழுத்து வெளியில் விட்டான்.

கீச்கீச் சென்ற பறவைகள் ஒலி. கல்லூரியை பாதி மறைத்துக் கொண்டிருந்த அடர்ந்த மரங்கள். அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்த டீன் ஏஜ்கள் அநியாயத்திற்கு பலப்பம் போல் மெலிந்திருந்தனர். எல்லாம் மாடலிங்கும், அழகிப் போட்டியும் ஏற்படுத்தியிருந்த பாதிப்பு. அர்விந்தன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

'எல்லோரும் என் அனிதா போலாகி விடுமா?'

கார் மீது ஸ்டைலாக சாய்ந்தபடி புகைத்துக் கொண்டிருந்த இவனை திரும்பி திரும்பி பார்த்தபடி சென்றனர்.

"ஹேய்.. சங்கர்"

"நோ.. குமார்தான்"

"உன்னைத்தான் அஜீத்!"

"ஹலோ மகேஷ்"

"இருக்க முடியாது. பர்சனாலிட்டி வச்சு பாக்கறப்ப ஜெய்தான் சூட் ஆகும்"

காலேஜ் காம்பஸின் இடதுபுற கட்டைச் சுவர் மீது உட்கார்ந்து லாட்டிக் கொண்டிருந்த வாலை குமரிகள் இஷ்டத்திற்கு இவனை

சதாய்த்துக் கொண்டிருந்தார்கள்.

சுவாரஸ்யம் ஏற்பட அவர்கள் பக்கம் திரும்பி நின்றான்.

"என் பெயரை கண்டுபிடிப்பதில் அவ்வளவு ஆர்வமா?"

இறுமாப்போடு ஸ்டைலாக புகையை வழிய விட்டான்.

"ஹேவ் ப்ளாக்மேன் யுவர் குட்நேம் ப்ளீஸ்!"

தலையை ஆட்டி மறுத்தவன், 'நீங்களே கண்டுபிடியுங்கள்' என்று சைகை செய்தான்.

"ராஜா"

"ம்ஹூம்"

"விக்னேஷ்?"

"கருப்பசாமி?"

"அ.." என்ற ஆச்சர்யத்தோடு அந்த மிடி பெண்ணின் கேலியை ரசித்தான்.

"ரமேஷ்?"

"அர்விந்தன்?"

"டன்" என்றபடி கட்டை விரலை உயர்த்தினான்.

"ஹோ" வென்ற சந்தோஷ இரைச்சல் அந்த கும்பலிடமிருந்து.

"அர்விந்தன்.. யூ ஆர் வெரி ஹான்ஸம்! அப்ளிகேஷன் போடலாமா?" ஒரு மெழுகு பொம்மை இளமை கேட்டது.

"தாங்க்யூ டியர்! பட், ஐ'ம் ஸோ ஸாரி. ஐ'ம் ஆல்ரெடி எங்கேஜ்ட் மை லேடி.."

"ஓஹ்.." என்று கோரஸாய் சோககீதம் வாசித்தார்கள்.

தூரத்தில் மின்னல் கொடியொன்று ஓடி வந்தது.

"அனிதா...!"

அர்விந்தனின் செல்கள் பரபரத்தது. சிகரெட்டை காலடியில் போட்டு நசுக்கினான்.

அனிதா நெருங்கினாள்.

மூச்சு வாங்கினாள். ஏறி இறங்கிய மார்பு கூட்டை பார்த்து அவனுக்கு மூச்சு நின்று போனது.

அவளை ஏற இறங்க பார்த்தான்.

அவன் முகத்துக்கு அமர்க்களமாய் கவ்வியிருந்த கூலிங்கிளாஸ், இன்னும் வெளுக்காத, மதிப்பில்லாத புத்தம்புது க்ரீன் ஜீன்ஸ், இன் பண்ணாமல் அலட்சியமாய் அணிந்திருந்த வெள்ளை நிற டி ஷர்ட்! காலர் தாண்டி வளராமல் கச்சிதமாய் வெட்டப்பட்ட முடி முன் நெற்றியில் அடிக்கடி விழுந்து தொந்தரவு செய்தது. சத்தியம் செய்தால் கூட யாரும் நம்ப மாட்டார்கள் அவனொரு ஃபாரின் ரிட்டர்ன் என்று!

அந்த இளஞ்சிவப்பு முகத்தில் ஆச்சர்யமும், உற்சாகமும் போட்டி போட "அர்விந்த்" என்றாள் காதல் வழிய!

"ஹவ்.. பி.. யூ மை டியர்?"

"பாக்கறியே- எப்படி தெரியறேன்!"

"கொஞ்சம் மெலிஞ்சிட்டே- காதல் ஏக்கமா?"

"ம்ஹூம்- மிஸ் மெட்ராஸ்க்காக."

"அப்ப- எனக்காக இல்லே."

"வில்லி- உனக்காக ஏன் மெலியணும்?"

"சரி- முதல்ல கார்ல ஏறு!"

கார் புறப்பட்டபோது அந்த கும்பலி
தனிமையாய் ஏறி அமர்ந்தாள்.
ருந்து இரைச்சலுக்கு பதில் பெருமூச்சுதான் வெளிப்பட்டது.

"என்ன திமிர்னு? சொல்லாம, கொள்ளாம- ஜாஃப்னால இருந்து எப்போ வந்தே அர்விந்த்? ஆன்ட்டி கூட எனக்கு போன் பண்ணலி நீ வரப்போறதை சொல்லவே இல்லை. சொல்லியிருந்தா- ரிசீவ் பண்ண ஏர்ப்போர்ட்டுக்கே வந்திருப்பேனே!"

அர்விந்தன் கண்ணடித்து சிரித்தான்.

"அம்மாவுக்கே நான் இண்டியா வர்றது தெரியாது. சொல்லலை. சர்ப்ரைஸா இருக்கட்டுமேன்னு! என்ன அனி? ஒரேயடியா பாப்புலர் ஆய்ட்டே? ஜாஃப்னால ஒரு பத்திரிகையில உன்னோட போட்டோவோட மிஸ். மெட்ராஸ் ஆனதை பத்தி போட்டிருந்தாங்க. அதை பார்த்துதான் எனக்கே விஷயம் தெரியும். என் ஃப்ரண்ட்ஸ்கிட்டேல்லாம் காமிச்சேன்"

"அவங்க என்ன சொன்னாங்க?" ஆர்வம் மின்ன கேட்டாள்.

"யூ- ஆர்- லக்கி அர்விந்த்ன்னாங்க!"

"அது நிஜம்தானே?" என்றாள் பெருமையாக தோள் குலுக்கி.

"சென்ட்பர்ஸெண்ட்! அடுத்து மிஸ். இண்டியாவுக்கு ட்ரை பண்ணு அனி!"

"ப்ச்! மம்மி வேண்டாங்கறாங்க அரவிந்த். அந்த லெவலுக்கு போனா ஸ்விம் சூட்டெல்லாம் போட்டாகணும். டிவியில காட்டுவான். அதெல்லாம் அசிங்கம்னு மம்மி ஸ்ட்ரிக்ட்டா சொல்லிட்டாங்க" குரலில் லேசாய் வருத்தமிருந்தது.

"ஆன்ட்டி இவ்வளவு கர்நாடகமா? கவலைய விடு அனி. நான் பார்த்துக்கறேன். நான் உனக்கு ஃபுல்பர்மிஷன் தர்றேன். மிஸ் இண்டியா, மிஸ் வேர்ல்டுனு ஜமாய்ச்சுடலாம்."

"சரி- இந்தப் பேச்சை விடு. படிப்பு நல்லபடி முடிஞ்சதா?"

"எங்கே ஒழுங்கா படிப்பு வந்தது? பாத்ரூம் போனாலும் உன் ஞாபகம், படுக்க போனாலும் உன் ஞாபகம். அஞ்சு வருஷம் எப்போடா முடியும்னு காத்திருந்தேன் தெரியுமா?"

"அந்தளவு என்னை நேசிக்கிறியா அர்விந்த்?"

"இதிலென்ன சந்தேகம்?" அவன் தோளில் கை போட்டு வலிக்காமல் அழுத்தினான்.

"அங்கே உன்னை எந்த பெண்ணுமே க்ராஸ் பண்ணலியா?" குறும்பாக கேட்டாள்.

"பண்ணாம என்ன? என்னோட படிச்சவங்கள்ல பாதி பேர் லேடீஸ் தான். எத்தனையோ பேர் -ஐ நீட் யூ."

"நீ கம்பெனி குடுக்கலியா?"

"இருக்கறது ஒரு இதயம்தானே அவி!"

"பொய்.. சும்மாவாச்சும் பொய் சொல்லாதே! இந்த மூஞ்சிய எவ லவ் பண்ணுவா! என்னைத் தவிர.."

"என்ன இன்டலா? நான் நினைச்சா பிரேமானந்தா போல.. என்னை சுத்தி பெண்கள் மயமா இருக்க வைப்பேன்!"

"இந்த டாபிக்கிற்கு கொஞ்ச நேரத்துக்கு கமா போடலாம். நேத்து வீட்டுக்கு டைரக்டர் வாசு வந்தார்"

"வாசுவா? யார் அது?"

"இப்போதைய பேமஸ் டைரக்டர்ஸ்ல ஒருத்தர்"

"சரி.. அவர் ஏன் உன்னைத் தேடி வந்தார்?"

"தன்னோட அடுத்த படத்துக்கு கால்ஷீட் கேட்டு"

"வாட்!" சடர்ன் பிரேக் போட்டு அவளை பார்த்தான்.

"சினிமாவா? நடிக்கப் போறியா? அவி.. ப்ளீஸ்.. வேணாம்!"

"ஏன் வேணாங்கறே?"

"நீ எனக்கு முழுசா வேணும் அவி!"

"ச்சீ!" என்று வெட்கப்பட்டவள்.. "எனக்கே இதுல இன்ட்ரஸ்ட் இல்லே அர்விந்த். ஏற்கனவே நாலஞ்சு பேர் வந்து கேட்டாச்சு. பிடிவாதமா மறுத்திட்டேன்!"

"தாங்க்யூ டியர்!" அவிதாவை அருகே இழுத்து நெற்றியில் உதட்டை பதித்தான்.

"ம்.. இது ரோடு!"

"இருந்தா என்ன? ஃபாரின்ல வீடு, ரோடுன்னெல்லாம் பார்க்க மாட்டாங்க. எங்கே தோணுதோ.. அங்கெல்லாம் லிப் டு லிப் வச்சு கிஸ் பண்ணுவாங்க!"

"மினிஸ்டர் சூரியபிரகாசத்தோட ஒரே சன் செல்வன். த பேமஸ் ஆக்டர் விமல், மவுலிகா ஸ்டார் ஹோட்டல் ஓனர் மல்ஹோத்ரா.. இவங்கல்லாம் என்னோட பதிலுக்காக காத்திருக்காங்க யூ நோ?"

"பதிலுக்காகவா? என்ன பதில்? அர்விந்த்தின் முகம் குழப்பமாய் தெரிந்தது.

"நான் அவங்கள கல்யாணம் பண்ணிக்கணுமாம். நேரடியாகவும், போன்லேயும் துளைச்செடுக்கிறாங்க!"

"நீ என்ன சொன்னே?"

"எதுக்கும் உன்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டு சொல்லலாம்னு தான் வெயிட் பண்றேன். என்ன இருந்தாலும் நீ என் அத்தை பையன் விவரம் தெரியறதுக்கு முன்னாடியிருந்தே கன்னாபின்னான்னு லவ் பண்றவன். உன்னை கேக்காம பதில் சொல்றது அவ்வளவா சரியாபடலை?" அவிதாவின் உதட்டோரம் குறும்பு அள்ளி தெறித்தது.

"என்னை கேட்டுத்தான் இதுக்கு பதில் சொல்லணும்னா உன் மனசுல நான் இல்லேன்னு அர்த்தம். பண்ணிக்கோ தாராளமா இவங்க அத்தனை பேரையும் கல்யாணம் பண்ணிக்கோ! நான் ஒருத்தன் பைத்தியக்காரன்..

எத்தனையோ சந்தர்ப்பம் கிடைத்தும் மனசாலேயும்- உடம்பாலேயும் மாக படாம நான் முழுக்க முழுக்க உனக்கு மட்டுமே சொந்தமானவன்னு ச்சே_ ளும் இடியட்- ளும்- பூஃ! "கோபத்தில் மூக்கு நுனி மின்ன- நிலை கொள்ளாமல் தவித்து புலம்பினாள்.

அவனை பார்த்து அடக்க மாட்டாமல் சிரித்தாள் அனிதா.

"மைடியர்' கறுப்பழகனே! கோபமா? இதோ- பார்! இவங்கள் எல்லாம் என்னை கல்யாணம் பண்ணிக்க கேட்டதும் நிஜம். நான் என் அர்விந்துக்காக பிறந்தவன்னு அவங்க முகத்துக்கெதிரே சொல்லி அனுப்பியதும் நிஜம்! என்னப்பா? ஒரு நிமிஷத்திலே உலகமே வெறுத்துப் போய் சாமியாராயிடணும்போல ஆயிடுச்சா? இங்கே பார்! நான் உனக்கு, நீ எனக்கு. இதை யாராலேயும் மாத்த முடியாது. ஆனா எனக்காக நீ ஒரு ஹெல்ப் பண்ணுவியா? இட்டத்தட்ட அது நான் உனக்கு வைக்கிற அக்னி பரீட்சை!"

"சொல்லு அனி! உம்மேல நான் எந்தளவு பைத்தியமா இருக்கேன்னு வார்த்தையால சொல்லி புரிய வைக்க முடியாது. நீ இல்லாத வாழ்க்கைய என்னால நினைக்கக் கூட பார்க்க முடியல அனி! நீ எனக்கு மட்டுமே சொந்தமானவ! உனக்காக எதையும் செய்வேன். சொல்லு டியர்- என்ன செய்யணும்! அந்த சூரியனை தொட்டுட்டு வரச் சொல்றியா? ஐ'ம் ரெடி! சொல்லு! உணர்ச்சிப் பெருக்குடன் அவள் கைகளை பற்றிக் கொண்டான்.

"என் அர்விந்துக்கு அத்தனை கஷ்டத்தை தருவேனா? வெரி சிம்பிள். அதை மட்டும் செய்து காட்டு போதும்!"

"என்ன- சொல்லு சீக்கிரம்?"

"ஒண்ணுமில்லே- ஒரு பொண்ணை நீ லவ் பண்ணணும்- தட்ஸ்- ஆல்!"

## 2

சீப்புக்கு அடங்காமல் சிலும்பி நின்ற காதோர சுருள் முடியை இழுத்து வைத்து ஹேர்பின்னால் கட்டுப்படுத்தினாள். செந்நிற ஸ்டிக்கர் பொட்டுக்கு மேல் சாமி படத்திற்கு அருகிலிருந்த சம்புடத்தை தொட்டு விபூதி கீற்று இட்டாள். கடைசியாய் ஒரு முறை அந்த கையகல கண்ணாடியில் தன்னை இப்படியும் அப்படியுமாய் திருப்பி பார்த்து திருப்தியோடு ஹேண்ட்பேகை தோளில் மாட்டினாள் ரஞ்சனி!.

மரகதம் தன் மகளை உச்சி முதல் பாதம் வரை பயமும், சந்தோஷமுமாய் பார்த்தாள்.

'என் வயிற்றில் பிறக்கக் கூடிய அழகா இது?'

"என்னம்மா அப்படி பாக்கறே? புதுசா பாக்கற மாதிரி!" அரிசி பற்கள் மின்ன கேட்டாள் ரஞ்சனி.

இருபத்திரண்டு வயதை தொட்டிருந்த ரஞ்சனி பார்த்ததும் கும்பிடத் தோன்றும் வசீகரத்தை பெற்றிருந்தாள். மாநிறம்தான். ஆனால் அந்த நிறம் தான் அவளுக்கு ப்ளஸ் பாய்ன்ட் என்பது போல் மஞ்சள் பூசி குளித்ததுப் போன்ற மினுமினுப்பை தந்திருந்தது. நிருதிருவென்ற உயரம். தேவைக்

கேற்ற சடைபிடிப்பு. அடர்ந்து நீண்ட பின்னல். அதில் அடக்கமாய் வீற்றிருந்த குண்டு மல்லி சரம். பெங்காலி காட்டன் சேலையில் ஒரு மச்சகுக்குரிய லுக்! இவள்தான் சமையல்காரி மரகதத்தின் மகள் என்றால்.. சத்தியம் செய்தால் கூட நம்ப மாட்டார்கள்.

ஓடும் தையல் மிஷினை நிறுத்தி விட்டு ராதிகா கூட வைத்த விழி மாறாமல் அக்காவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ரஞ்சனி.. இன்றைக்கு நீ ரொம்பவே அழகா தெரியறே! என்ன விஷயம்?" கண் சிமிட்டியபடி கேட்டாள்.

சிரிப்பை மட்டும் பதிலாக தந்து, வாஞ்சையுடன் அவள் தலையை' தடவி கொடுத்து விட்டு அம்மாவிடம் வந்தாள் ரஞ்சனி.

"கிளம்பறேம்மா!"

"மறந்துட்டேன் பாரு! இந்தா டிபன் பாக்ஸ்! பைக்குள்ள வச்சுக்க. தயிர் சாதமும், மாவடுவும்தான் வச்சிருக்கேன் ரஞ்சனி!"

"இதை விட ருசியான பொருள்.. ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்ல கூட கிடைக்காதும்மா! வருத்தமா சொல்றியே?"

"சம்பாதிச்சி போடற பொண்ணுக்கு என்னால விதவிதமா சமைச்சி போட முடியலியேம்மா! தினத்துக்கும் தயிர் சாதம், ரசம் சாதம்னு.. நாக்கே மரத்து போயிட்டதே!"

"அதில வளர்ந்த உடம்புதானே இது? அழகாயில்லையா? சரி.. நேரமாச்சு. நான் வரட்டுமா? எங்க எம்.டியோட மகன் ஃபாரின்ல படிச்சிட்டு இன்னைக்கு ஆபீசுக்கு வந்து பொறுப்புக்களை ஏத்துக்க போறார். சீக்கிரம் போயாகணும். வர்றேன்ம்மா! வர்றேன் ராதிகா" சொல்லி விட்டு தெருவில் இறங்கி நடந்தாள் ரஞ்சனி.

"மண்ணில் இந்த காதலன்றி யாரும் வாழ்தல் கூடுமோ? விவித பாரதியில் இருந்து எஸ்.பி.பி.யின் குரல் காதில் மோதியது.

'ஆமாம்! யாருமே வாழத்தான் முடியாது. வாழ வைப்பதா காதல்? உயிரை பறித்து, உறவுகளை நடுத்தெருவில் நிறுத்துவதுதானே அதனோட தலையாய கடமை. காதலாம்.. காதல்.. மண்ணாங்கட்டி!' ஆசிட் ஊற்றிய தூப் போல் மனசெல்லாம் எரிந்தது அவளுக்கு.

விடுவிடுவென நடந்து பஸ் ஸ்டாண்டை அடைந்ததும், அவள் கோபத்தை வளர்க்காமல் அவள் போகும் பஸ் உடனே வந்தது.

அலுவலக காம்பவுண்டுக்குள் நுழைந்தபோது அலங்கார அமைப்புகளும், சீரமைக்கப்பட்ட கார்டனும் கண்ணில் அடித்தது. சுற்றிலும் மின்சாரத்தை தொட்ட பரபரப்பு அனைவரிடமும் தெரிந்தது.

தனக்கு முன்னே நடந்துக் கொண்டிருந்த வித்யாவை அழைத்துக் கேட்டாள்.

"எம்.டி. சன் வந்துட்டாரா வித்யா?"

"வீட்டை விட்டு கிளம்பிட்டதாக தகவல்"

"அவர் எப்படியாம்? அப்பாவைப் போலவே எடுத்ததுக்கெல்லாம் முணுக்கென்று கோபம் வர்ற ஆசாமியா?"

"எனக்கெப்படி தெரியும் ரஞ்சனி? மேனேஜர்க்குதான் தெரியும்"

மேனேஜரும், இதர முக்கிய பணியாளர்களும் ஆளுக்கொரு சம்பங்கி மாலையோடு அந்த விஐபிக்காக காத்திருந்தனர்.

பொதுவாய் ஒரு புன்னகையை வீசி விட்டு தன் சீட்டில் போய் அமர்ந்தாள். டைப்ரைட்டிங் மிஷினை போர்த்தி இருந்த போர்வையை உருவி ஒழுங்காய் மடித்து வைத்து பேப்பரை செருகினாள். டேபிளில் தயாராய் வைக்கப்பட்டிருந்த கடிதங்களை டைப்படிக்க ஆரம்பித்தாள். என்றைக்குமில்லாமல் இன்றைக்கென்னவோ, அவள் இதயம் புறாசிறகாய் படபடவென அடித்துக் கொண்டிருந்தது.

ட்டு- மதுமதி கம்பெனி.

டியர் ஸார்-

அவர் ரெப்ரஸெண்டேடிவ் மிஸ்டர் கோகுல்- டப்டப்பென விரல்கள் நர்த்தனமாடின.

சில நிமிடங்கள்தான்!

திடீரென அந்த ஹாலில் பரபரப்பு தொற்றிக் கொண்டது. தேசிய கீதம் பாடுவதற்காக எழுந்து நிற்பவர்களைப் போல் அத்தனை பேரும் நின்றிருந்தனர். ரஞ்சனியும் எழுந்து நின்றாள்.

"ஓ- எம்டி. சன் வந்துட்டாரா?"

மேனேஜர் அவரிடம் ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்திக் கொண்டே வந்தார்.

எம்டியின் மகன் ரகு- நல்ல உயரம். நல்ல சிகப்பு குறும்பு வழியும் கண்கள். அதில் அழைப்பும் (பெண்களை மட்டும்) இருந்தது. சிரித்துக் கொண்டேயிருக்கிறானா எந்நேரமும்- என்று சந்தேகப்பட தூண்டும் உதடுகள். லேசாய் கறுப்படித்திருந்தன. புகைப்பான் போலும். ஃபாரின் ரிட்டர்ன் ரொச்சே- அக்மார்க் முத்திரையோடவா இருப்பான்?

ரகு ஆண் பெண் பேதம் பாராமல் எல்லோரின் கைகளையும் பிடித்து குலுக்கினான். பெண்களின் கைகளை கொஞ்சம் அழுத்தமாகவே.

"இவங்க மிஸ் ரஞ்சனி"

ரகு உதடுகளை சரப்படுத்திக் கொண்டே மனதிற்குள் 80 (எண்பது) என்று அவளுக்கு மார்க் போட்டுக் கொண்டான்.

"க்ளாட்- டு- மீட் யூ" என்று சிரித்தபடியே கை நீட்டினான். ரஞ்சனி வணக்கம்" சொல்லி கை கூப்பினாள்.

"நீட்டின கை ஸ்லோமோஷனில் உள் வாங்கினான். அவளை தீர்க்கமாய் பார்த்து பளீரென சிரித்தான்.

அவளின் நெருப்புத்தனம் இவனை கவர்ந்தது.

"ஸோ- கைப்பட்டாலே கற்பு போயிடும்- அப்படித்தானே?" அவளுக்கு மட்டும் கேட்கும்படி கூறி விட்டு அடுத்த டேபிளுக்கு நகர்ந்தான்.

"இடியட்- எவ்வளவு அசிங்கமாய் கமெண்ட் பண்ணிட்டு போகிறான். இப்படிப்பட்டவனிடமா நான் வேலை செய்ய போகிறேன்?' பயம் அடிவயிற்றில் சுருக்கு போட்டு இழுத்தது. ஏனோ, ரகுவை அவளுக்கு அந்த நிமிடத்தில் இருந்தே பிடிக்காமல் போயிற்று. அவன் தன்னறைக்கு சென்ற பிறகும், அவனின் உயர்ரக செண்ட் வாசனை அந்த டேபிளை சுற்றி வந்தது.



ரகுவின் கார் ஹோட்டலின் உள்ளே நுழைந்தது. ஹோட்டல் மாளவா! நட்சத்திர அந்தஸ்து பெற்ற உயர் ரகம்! சாதாரணமான வர்க்கம் காபி குடிக்கக் கூட இதனுள்ளே நுழைய முடியாத மேல் தட்டு வர்க்கம். ஏழெட்டு மாடிகளால் உயர்ந்து நின்ற அந்த ஹோட்டலின் பல பகுதிகளில், ப்யூட்டி பார்லர், ஐஸ்க்ரீம் பார்லர், பார், நீச்சல் குளம் என்று இயங்கின. கார்கள் பல நிறங்களில் பல வகைகளில் பெட்டி பெட்டியாய் அடுக்கி வைக்கப்பட்டதைப் போல், நிறுத்தப்பட்டிருக்கும் அழகே தனி.

ரகு ரிசப்ஷனில் நுழைந்து ஏற்கனவே ரிசர்வ் செய்யப்பட்டிருந்த அறைக்கான சாவியை பெற்றுக் கொள்ளும் முன் ரிசப்ஷனிஸ்ட்டின் டாப்ஸின் விளிம்பு மீறி தெரிந்த கவர்ச்சியை கண்களால் அள்ளி பருகி எச்சில் விழுங்கினான்.

'இவளை பற்றி விசாரிக்க வேண்டும்' மனதில் குறித்துக் கொண்டே லிஃப்ட்டில் பயணித்து 703-ம் எண் அறையை அடைந்தான்.

பத்து நிமிடம் கழித்து- அவள் நுழைந்தாள். பாப் தலையுடன் படு நாகரீகமாய், படுகஞ்சத்தனமாய் உடுத்தியிருந்தவள் ரகுவை பார்த்து 'ஹாய்' என்றபடி அருகில் வந்தமர்ந்தாள்.

அவளை பார்த்ததும் முதலிரவு கணவனாய் அவசர அவசரமாய் அவளை அணைத்து எச்சில் படுத்தியவன்-

"உனக்கொரு சிஸ்டர் இருக்காளா?" என்றான்.

"அட- உங்களுக்கெப்படி தெரியும் சார்?"

"சாரா? இந்த இடத்தில் இந்த சூழ்நிலைல அப்படி கூப்ட்றது நல்லாவா இருக்கு?"

"பின்னே? உங்க பேர் கூட எனக்குத் தெரியாதே?"

"உன் பேர் மட்டும் எனக்கு தெரியுமா என்ன? அதெல்லாம் அவசியமும் இல்லே. டியர்னு சொல்லு. இல்லே... டார்லிங்னு கூப்பிடு, வாங்கறதுக்கு கொஞ்சமாவது நடிக்கவாவது செய்யுங்கடி!"

"சரி- என்னமோ கேட்டீங்களே- என் சிஸ்டர் பத்தி... அவளை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியுமாவா? அவ பேர் வில்விதானே?"

"அட- ஆமா! பார்த்திருக்கீங்களா?"

"முட்டாள்தனமான கேள்வி. அவளுக்கு முதல் பூஜையை போட்டதே நான்தானே? சும்மா சொல்லக் கூடாது. சூப்பர் ஸ்ட்ரக்ச்சர்! இப்ப என்ன பண்ணிட்டிருக்கா?" என்றான் அவளின் வெற்று முதுகை தடவியபடி.

"இதே ஃபீல்டுலதான் இருக்கா- நாளைக்கு அனுப்பி வைக்கட்டுமா?"

"கண்டிப்பா- பார்த்து அஞ்சு வருஷமாயிடுச்சே! அவசியம் பார்க்கறோம். இதென்ன பரம்பரை தொழிலா? உன்னையும் இதில இறக்கி விட்டுட்டா- வில்வி! உனக்கு அடுத்து தங்கச்சி யாருமில்லையா?" என்றவன் விளக்கை அணைத்தான்- பிறகு அவளையும்!

"ரஞ்சனிம்மா- எம்டி. கூப்பிடறார்" பியூன் வந்து அழைக்க... பேடும்,

பென்சிலுமாய் நுழைந்தாள்.

ரகு அந்த அலுவலகத்தில் பொறுப்பேற்று இரண்டு மாதம் ஓடிவிட்டது. இதுவரை அவளிடம் நாகரீகமாகத்தான் நடந்துக் கொண்டான். ஆனாலும் அவனைப் பார்க்கும் போதெல்லாம் அவளுள் நண்டு ஊர்ந்தது.

"ரெடி சார்..!" பென்சிலை பேப்பரில் ஓட விட தயாராய் வைத்திருந்தாள்.

மெலிதாய் நகைத்துக் கொண்ட ரகு அவளைப் பார்த்தான்.

"நான் லெட்டர் டிக்டேட் பண்ண கூப்பிடலை மிஸ். ரஞ்சனி. சிட்டவுன்"

"ப.. பரவாயில்லை!"

'வேற எதுக்காக கூப்பிட்டார்?' சந்தேகம் மனதை பிறாண்டியது.

"மிஸ். ரஞ்சனி. உங்க பர்சனாலிட்டிக்கும், நீங்க பாக்கற வேலைக்கும் பொருத்தமேயில்லை. அதனால..?"

"அதனால..?" குரலே எழும்பவில்லை.

'வேலையை விட்டே துரத்தப் போகிறானா? கடவுளே.. இந்த வேலையை பெற நாயாய் அலைந்த அலைச்சல் எனக்குத் தானே தெரியும்? இந்த வேலையும் போய் விட்டால்..? எங்கே போய் தேடுவேன்? அதுவும் இந்த காலத்தில்? குடும்பத்திற்கு என் வருமானம் தானே பிரதானம்! இந்த வருமானமும் போய் விட்டால்? என்ன செய்து விட்டேன்? என்ன குறை கண்டானென்று நீக்கப் பார்க்கிறான்? ரஞ்சனி கலங்கிப் போனாள்.

"நோ.. நோ.. மிஸ்' ரஞ்சனி! அடையார்ல ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் ஓபன் பண்ணப் போறோம். அதுக்கு அழகான ரிசப்ஷனிஸ்ட் தேவை. அந்த வேலைக்கு உங்களை போடலாம்னு இருக்கேன். இப்ப வாங்கறதை விட இன்னும் ஒரு மடங்கு ஸாலரி இன்க்ரீஸ் பண்றேன்!"

"சா..ர்!" மூச்சு விடவும் மறந்தாள்.

உங்களுக்கு டூ-வீலர் ஓட்டத் தெரியுமா? தெரியாதுன்னா.. சீக்கிரம் ஓட்டக்கத்துக்குங்க. கம்பெனி உங்களுக்கு டூ-வீலர் வாங்க உடனடியா லோன் சாங்ஷன் பண்ணும். இப்பவே அப்ளை பண்ணிக்குடுங்க. சைன் பண்ணிடறேன். தென், வித விதமான மாடர்ன் டிரஸ்ஸை கம்பெனி செலவுல எடுத்துக்கலாம் அப்புறம், இவ்வளவு நீள கூந்தல் மாடர்ன் சொஸைட்டிக்கு ஒத்து வராது. தோள் வரைக்கும் கட் பண்ணிடுங்க"

"சா..ர்!" உச்சபட்சமாய் அதிர்ந்து போனாள்.

"எ.. என்ன சொல்றீங்க சார்?"

"என்னங்க ரஞ்சனி திகைச்சு போயிட்டீங்களா? அதது இருக்க வேண்டிய இடத்தில் இருந்தாதான் மதிப்பு. இல்லையா? பெஸ்ட்.. ஆஃப்.. லக்!"

"நோ.. சாரி சார்! ஐ... கான்ட்... என்னால முடியாது. எனக்கு அந்த வேலை வேணாம் சார்!"

"வாட்?" நிஜமாகவே இதை எதிர்பாராத ரகுவின் கண்கள் விரிந்தன. அவன் விரித்த வலையில் மான் சிக்காதோ? என்கிற தவிப்பு தெரிந்தது.

"முடியாது சார்! அந்த மாதிரி என்னை மாத்திக்க என்னால முடியாது. எனக்கு அதிலே விருப்பமும் இல்லே. நான் வளர்ந்த சூழ்நிலைகளே

வேறு. அதை தாண்டி என்னால வர முடியாது. என்னை தயவு பண்ணி மன்னிச்சிடுங்க சார்! உங்க உத்தரவை மீற வேண்டிய நிலைல இருக்கேன்'' தீர்மானமாய் பேசிய ரஞ்சனியை வியப்பாய் பார்த்தவன் சுதாரித்துக் கொண்டான். தன் ஏமாற்றத்தை வெளிக் காட்டாமல், அவனுக்கு உரிய இலகுவான புன்னகையுடன், பேப்பர் வெயிட்டை சுற்றியபடி'' வெல்டன். ரஞ்சனி! உங்களோட கட்டுப்பாடோடு கூடிய தன்னம்பிக்கைய நான் மதிக்கிறேன். இந்த போஸ்ட்டை கொடுக்க நான் முன்வந்ததுக்கு உங்க அழகு ஒரு காரணமாயிருந்தாலும், முதல் காரணம் உங்க ஃபேமிலி பேக்ரவுண்ட்! உங்க குடும்பத்தைப் பத்தி மேனேஜர் சொன்னார். ஃபேமிலிக்காக நீங்க கடுமையா உழைக்கறதை பாராட்டறேன். உங்க சுமைய குறைக்க என்னால முடிஞ்ச சிறு உதவியா— இதை செய்ய நினைச்சேன். இட்ஸ் ஒக்கே மிஸ் ரஞ்சனி! பணம் அதிகமா கிடைக்குதே என்று கூட பார்க்காமல் உங்கள் வட்டத்தை விட்டு வெளியே வர மறுக்கும் உறுதியை பார்க்கும் போது— உங்க மேல உள்ள மதிப்பு கூடுது. எனிஹவ், என் ஹோட்டல், ஒரு அழகான ரிசப்ஷனிஸ்ட்டை பெற அதிர்ஷ்டம் பண்ணலையேன்னு ஒரு புறம் வருத்தம் இருக்கவே செய்யுது'' ரகு குள்ளநரித்தனமாக குரலில் ஏற்ற இறக்க பாவங்களுடன், தோளை குலுக்கியபடி முகத்தில் மிக லேசான வருத்தத்தை படர விட்டபடி கூறினான்.

அவன் கவலையெல்லாம் ரஞ்சனியை பணத்தாலும் பதவியாலும் கூட வீழ்த்த முடியவில்லையே என்பதுதான்.

ஆனால், அப்பாவி ரஞ்சனி, இந்தளவு பண்போடும், மனிதாபிமானத்தோடும் ரகு பேசுவான் என்பதை அவளால் இன்னும் கூட நம்ப முடியவில்லை. முதன் முறையாய்— அவனைப் பார்த்து சிநேகமாய் முறுவலித்தாள்.

## 3

"என்ன— என்ன— என்ன சொன்னே?'' நம்ப முடியாத திகைப்போடு அர்விந்தன் கேட்க, அனிதா சற்றும் அலட்டிக் கொள்ளாமல் வெகு சாதாரணமாக மறுபடியும் சொன்னாள்.

"நீ ஒரு பொண்ணை லவ் பண்ணணும்"

"ஆர்-யூ மேட்?"

"நிச்சயமா இல்லே"

"இல்லாமலா, இப்படியொரு வார்த்தைய சொல்லுவே?''

"ஐ'ம் சீரியஸ் அர்விந்த்"

"நான்சென்ஸ்— சொல்லு அனி, சும்மா விளையாட்டுக்குத் தானே சொன்னே?''

"நோ... நோ... நான் சீரியசாதான் சொல்றேன்''

முதன் முறையாய் அனிதா மேல் எரிச்சலாய் வந்தது. அஞ்சு வருஷம் கழித்து ஆசை ஆசையாய், காதலை தேக்கி வைத்து எடுத்து வந்து அபிஷேகம் செய்ய வந்தவனிடம் போய், 'நீ ஒரு பொண்ணை லவ் பண்ணணும்' என்றால் ஏன்தான் கோபம் வராது?

"நீ என்னதான் நினைச்சிட்டிருக்கே உன் மனசுல?"

"இந்த நிமிஷம் வரைக்கும் உன்னைத்தான் ! அர்விந்த் உன்னை புரிஞ்சுக்க நீ எப்போ வருவே வருவேன்னு நான் இருக்கனக்ஷனும் காத்திருந்தேன் தெரியுமா? நான் நினைச்சதை சாதிக்க கூடிய தருணம் உன் மூலமா எனக்கு கிடைக்கப் போகுது. உன் அன்புக்காக இதைக் கூட செய்யமாட்டியா?" அனிதாவின் குரலில் மெல்லிய உருக்கம் இழையோடியது.

"உனக்காக எதைதான் செய்யமுடியாதுன்னு நினைக்கிறே நீ இல்லையா?"

"எனக்கு நீ இதை மட்டும் செய்.. போதும்!"

அர்விந்தின் முகத்தில் எந்தவித உணர்ச்சியுமின்றி காரை திருப்பினான்.

"ஏய்.. ஏன் காரை வந்தவழியே திருப்புறே? இப்ப நாம எங்கே போறோம்?"

பதிலேதும் பேசவில்லை. சர்ரென வேகத்தை அதிகப்படுத்தியவன் மீண்டும் அவள் கல்லூரி வாசலில் வந்து நிறுத்தினான். கையை நீட்டி கதவை திறந்தான். அவனின் செய்கை அவளுக்கு முகத்தில் அறைந்தது போல் இருந்தது. திகைப்போடு அவனை பார்த்தாள்.

"அ..ர்..வி..த்"

"..."

சர்ரென கோபம் உச்சந்தலையை தொட்டது அனிதாவுக்கு. இறங்கிக் கொண்டு காரின் கதவை அறைந்து சாத்தினாள். திரும்பி பாராமல் நடந்தாள்.

வலுக் கட்டாயமாய் தன் பார்வையை அவளிடம் இருந்து பிரித்து பாதையில் போட்டு காரை செலுத்தினான். அவன் உள்ளம் பாளம் பாளமாய் வெடித்து சிதறிக் கொண்டிருந்தது.

"தட்டைப் பார்த்து சாப்பிடுப்பா.. எண்ணி எண்ணி சாப்பிடறே! இன்னும் கொஞ்சம் சாம்பாரை எடுத்து அந்த வெள்ளித்தட்டுக்குள் வழிய விட்டாள் வேணி. அர்விந்தனின் விதவை தாய்.

கண்ணாடி அணிந்த கண்களுக்குள் கருணையை சூடி கொண்டிருந்தது. நரை அவளுக்கு கம்பீரத்தை தந்திருந்தது. விபூதி நிறைந்த நெற்றியிலும் ஒரு தெய்வீகக் களை கட்டுப்பட்டிருந்தது.

"என்ன அர்விந்த்.. ஏன் ஒரு மாதிரியா இருக்கே? ஊருக்கு வந்து ஒரு வாரமாகுது. வீடு எப்படி, எப்படியோ அமர்க்களப்படும்னு நினைச்சிட்டிருந்தேன். இங்க என்னடான்னா.. குண்டூசி விழுந்தாக் கூட இடி போல சத்தம் கேக்குற அமைதி. என்னப்பா ஆச்சு? அனிதாவை போய் பார்த்தியா? நீ எப்போ வருவே.. வருவேன்னு துடிச்சிட்டிருந்தா? நீ இல்லாதப்பவே ரெண்டு நாளைக்கு ஒரு முறையாவது இங்க வந்து தலையை காட்டாம இருக்க மாட்டா! அவளுக்கு என்ன ஆச்சு? அவளும் அங்கே மூஞ்சை தூக்கி வச்சிட்டு இருக்காளாம். தம்பி போன் பண்ணி சொல்றான். என்னதான் நடந்துச்சி உங்களுக்குள்ளே? ஒண்ணுமே புரியலேப்பா. மரகதம்.. தயிர் வைக்க மறந்திட்டே பாரு.. எடுத்துட்டு வா!"

சமையலறையில் இருந்து வெளிப்பட்ட மரகதம் விறுவிறுவென தயிரை

கொண்டு வந்து வைத்தான்.

அர்விந்தன் அம்மாவை சின்ன சிரிப்போடு பார்த்தான்.

“என்ன மம்மி நீங்க! தேவையில்லாம.. அனாவசியமா கவலைப்பட்டுக்கிட்டு. அந்த வாலுக்கூட.. எனக்கு எந்த பிரச்சினையும்மில்லை. எனக்கு நிறைய வேலை இருக்கும்மா! வந்ததும், வராததுமா.. ஆபீஸ்ல பொறுப்பேத்துக்கிட்டேன், பிறகேது நேரம்? கிடைக்கிற சில மணி நேரங்கள்ல என் கிளையன்ட்ஸையெல்லாம் பார்த்துட்டு வரவே சரியா இருக்கு. டைம் கிடைக்கட்டும் மம்மி. அவளை போய் பார்க்கறேன்” சமாளித்தான்.

“சரி.. உனக்குத்தான் நேரமில்ல. போய் பார்க்க முடியல. அவளுக்கென்ன வெட்டி முறிக்கிற வேலை? வந்துக் கூட எட்டிப் பாக்கல. அதுவும் நீ வந்திருக்கிறது தெரிஞ்சும். காரணம் இல்லாமலா?”

“எல்லாம் பிஸியா இருப்பாம்மா.. இதுக்கெல்லாம்..”

“ம்ஹூம்.. என் மனசு சமாதானப்படாது. நீ இன்னைக்கு சாயந்திரமே போய் பாக்கறே. சின்னப் பொண்ணு அர்விந்த்! அசட்டுத்தனமா, எதையாவது செஞ்சிருந்தா.. நீ அதையெல்லாம் பெரிசா எடுத்துக்காதேப்பா.. என்ன காதில விழுந்துச்சா? நீ இன்னைக்கு அவளை போய் பாக்கறே!” உறுதியாய் கட்டளையிட்டான்.

‘தன் முகம் லேசாய் வாடிக்கிடப்பதையே பொறுக்காத அம்மா..!’ அர்விந்தனுக்கு அம்மாவை பார்க்க.. பார்க்க.. பரவசம் உண்டானது.

“சரி.. மம்மி!”

“இப்பத்தாம்ப்பா.. மனசுக்கு நிம்மதியா இருக்கு. காலாகாலத்துல உனக்கொரு கால்கட்டு போட்டுட்டா.. என் கடமை முடிஞ்ச நிம்மதியில, கால்நீட்டி படுப்பேன். மரகதம்.. வந்து இந்த டேபிளை க்ளீன் பண்ணு”

மரகதம் சுத்தப் படுத்தினாள்.

அர்விந்தன் கைகளை துடைத்துக் கொண்டே, “உங்களுக்கொரு மக இருக்காயில்லே?”

“ரெண்டு பொண்ணுங்க இருக்கு தம்பி”

“ஏதோ டிகிரி படிக்கிறதா அம்மா சொன்னாங்க”

“ஆமாங்க.. படிச்சி முடிச்சிட்டா”

“இனி.. உங்க பொண்ணை நாளைக்கு எங்க ஆபீஸ்ல வந்து என்னை பார்க்கச் சொல்லுங்க. ஒரு வேகன்ஸி இருக்கு. போட்டுடலாம்”

மரகதம் பூரித்துப் போனாள்.

“உங்க நல்ல மனசுக்கு ஆயிரம் வருஷம் சீரோடும், சிறப்போடும் இருப்பீங்க தம்பி. என் பொண்ணுக்கு வேற கம்பெனியில வேலை கிடைச்சி.. ஒரு வருஷமா போய்க்கிட்டிருக்கா”

“ஓ.. வெரிகுட்.. நான் இன்னும் அன்எம்ப்ளாய்டுன்னு நினைச்சிட்டிருந்தேன். வேற எந்த உதவி வேணும்னாலும் தயங்காம கேளுங்க. ஐ'ல்.. ஹெல்ப் யூ”

“ரொம்ப சந்தோஷம் தம்பி” சந்தோஷப் பெருக்கில் கண்ணீர் கொப்பளித்தது மரகதத்திற்கு.

‘வெளிநாடு சென்று படித்து வந்தாலும், அப்பாவைப் போலவே வறி

யவர்க்கு வலிய போய் உதவி செய்யும் குணம் மட்டும் மாறவேயில்லை. இதை விட வேறென்ன வேண்டும் ஒரு தாய்க்கு? இப்படியொரு மகன், பிறக்க நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும்'. நாலைந்து குழந்தைகள் பிறந்து அள்ள அள்ள குறையாத செல்வத்தில் புரண்டு வளர- இல்லையே என்ற ஏக்கம் வேணிக்கு என்றுமே வந்ததில்லை. அப்படிப்பட்ட அர்விந்த விடம் போய் அனிதா முரண்பட்ட கருத்தைச் சொன்னால்- எப்படி ஏற் றுக் கொள்வான்?

அம்மாவிற்காக மட்டுமல்ல- அவனுக்கும் அவளை பார்க்க வேண் டும் போலிருந்தது. தன் இதயத்தில் ஏற்றி வைத்தவளை பார்க்க முடியாமல் ஐந்து வருடம், பல ஆயிரம் மைல்களுக்கப்பால் இருந்தபோது அவன் பிரி வால் வாடி வதங்கியவன், அருகில் இருந்தும் ஐந்து நாட்களாய் வீம்புக்காக பார்க்காமல் இருந்ததுதான் அவனை சுருங்கிப் போக செய்தது.

'என்ன முட்டாள்தனமான கோரிக்கை அது? ஏன் அப்படி சொன் னான்? என்னைப் பற்றி முழுக்கத் தெரிந்தும் எதற்காக அப்படி சொன் னான்? அதனால் பாதிக்கப்படுவது நான் மட்டுமில்லையே.. அவனும் தானே? பைத்தியக்காரி"

பலவும் யோசித்தபடியே அனிதாவின் பங்களாவினுள் காரை நிறுத்தி இறங்கினான். மாடியறையில் குப்புற படுத்து கொண்டிருந்த அனி தாவின் உணர்வுகள் மொத்தமும் கார் ஹாரன் சப்தம் கேட்டு விசுக்கென எழுந்தன.

'அர்விந்த்- வந்துவிட்டாயா?' சந்தோஷத்தில் உடம்பு ஒரு முறை தூக்கி போட்டது. ஆனாலும் கட்டிலை விட்டு இறங்கவில்லை.

'வரட்டும், அவனே தேடி வரட்டும்'

"அட- அர்விந்த்- வா- வா! இப்போதான் மாமா வீட்டுக்கு வழி தெரிஞ்சிதா?" முருகேசன் அவனை கட்டித் தழுவிக் கொண்டார்.

"டைம் கிடைக்கல- அங்கிள்!" கண்கள் அனிதாவை தேடியது.

"ஒரு வாரமாகவா டைம் கிடைக்கலே? என்னமோ- போ. விஜயா- விஜயா- சீக்கிரம் வா! யார் வந்திருக்கான்னு வந்து பாரு" முருகேசன் மனைவியை அழைத்தார்.

கனமான உடம்பு ணங்கு, ணங்கென ஆட- நகை காய்ச்சி மரமாய் ஓட்டமும், நடையுமாய் வந்தாள் விஜயா.

"அர்விந்தா- வந்துட்டியாப்பா? நல்லாருக்கியா? வந்து இத்தனை நாள் ஆய்டுத்து. அத்தையும், மாமாவும் எப்படி இருக்காங்கன்னு வந்து எட்டி பார்த்தியா?"

இதையே நான் திருப்பிக் கேக்கலாமே ஆன்ட்டி? அதென்ன ஃபார் மாலிட்டி நமக்குள்ளே? நீங்க வந்து பார்த்திருக்கலாமே"

"நானா வரமாட்டேன்னே? இருக்காளே ஒருத்தி- ஒன்னே ஒண்ணு, கண்ணே கண்ணுன்னு பெத்து போட்டு வச்சிருக்கனே- உன் வருங்கால பொண்டாட்டி- அவதான் ஸ்ட்ரிக்ட்டா ஆர்டர் போட்டுட்டா! யாரும் அர்விந்த் வீட்டு வாசப்படிய மிதிச்சீங்கனோ- என்னை உயிரோட பார்க்க முடியாதுன்னு. என்னப்பா ஆச்சு உங்களுக்குள்ள? வந்ததும் நீ அவ படிக் கிற காலேஜுக்கு போயிருப்பேன்னு எனக்குத் தெரியும். உன்னைப் பத்தி

எனக்குத் தெரியாதா? என்னப்பா பிரச்சினை? அஞ்சு நானா அவளும் காலேஜுக்கே போகல. தபாரு... அர்விந்த்... உனக்குத்தான் தெரியுமே. அவ பிடிக்கிற முயலுக்கு மூனுகால்தான். நீயும் பேசாம ஆமாம்னு தலையாட்டிடு. வேற வழியில்லே. ஆயுசு முழுக்க நீ அவகிட்ட படணும்னு உன் தலையில எழுதி வச்சிருக்கே" விஜயா நீட்டி முழக்கி, எல்லாவற்றையும் ஞானக்கண் கொண்டு அறிந்தவன் போல் குரலில் கிண்டல் தொனிக்க பேசினான்.

"அ... அதெல்லாமில்லே ஆன்ட்டி! நீங்க நினைக்கிறாப் போல எங்களுக்குள்ளே எந்த பிரச்சினையுமில்லை. என்ன அங்கிள் ஒண்ணுமே பேச மாட்டேங்கறீங்க. உங்களுக்கு எம்மேல கோபமா?"

"சேச்சே... நான் ரெண்டு வார்த்தைக்குமேலே பேசறதில்லேன்னு உனக்குத் தெரியாதா? எல்லாத்துக்கும் சேர்த்து வச்சி எம் பொண்டாட்டி பேசிடுவா. இருபது வருஷமா நடக்கறதுதானே? அதனாலே கோர்வையா பேசறதே மறந்து போச்சுப்பா... அர்விந்த்" முருகேசன் கண்சிமிட்டியபடி பேசினார்.

"என்னை சீண்டிப் பாக்கலேன்னா உங்களுக்கு தூக்கமே வராதே"

"பாரேன்... வாய் நிறைய பொய்ய பாரேன். எனக்கும் உனக்கும் ஆறடி தூரம் இருக்கு நான் எப்படி சீண்டினேன்? ஆனாலும் கிழவிக்கு ஆசை விடலை"

வெட்கத்தில் முகம் சிவந்து போனது விஜயாவிற்கு.

"சே... வாய மூடுங்க... அர்விந்த்தை எதிரே வச்சுக்கிட்டு என்ன பேச்சு இதெல்லாம்?"

"அதுவும் சரிதான். நீ போ... மாப்ளே... மாடியிலதான் அனிதா இருக்கா... போய் பாரு! நைட்டுக்கு இங்கேதான்சாப்பாடு. எந்த சாக்கு போக்கும் சொல்லி நழுவிடாதே... போப்பா"

அவன் போகாவிட்டாலும், கையை பிடித்து தரதரவென இழுத்துப் போய் அனிதாவின் ரூமில் விட்டு விட்டு வருவார் போல் தோன்றியது.

'ஆமாம்... அவன் ஏன் கீழே வந்து என்னை பார்க்கவில்லை? என் வருகையை தெரியபடுத்தத்தான் மூன்று முறை ஹார்ன் அடித்தேனே... அப்படியென்ன கோபம்? தவறு அவனுடையது. பிறகேன்... நான் சமாதானப் படுத்த வேண்டும்? பேசாமல் திரும்பி போய் விட்டால் என்ன?' லேசாய் ஈகோ எட்டிப் பார்க்க முயல முருகேசன் அதை முளையிலேயே கிள்ளிப் போட்டார்.

"போ... மாப்ளே... எங்கள கொஞ்சம் தனியா விடு. இப்படி வந்து உக்காரு விஜயா"

"வெக்கங்கெட்ட மனுஷா. உங்களை அப்புறம் கவனிச்சிக்கறேன்" விஜயா வெட்கமும், கோபமுமாய் எழுந்தோடினாள்.

அர்விந்த் சிரித்தபடி மாடியேறினான்.

அனிதாவின் அறைக்கதவு திறந்தே இருந்தது.

மெல்ல உள்ளே நுழைந்தான். கண்ணை கூச செய்யாத மெல்லிய வெளிச்சத்தை துப்பிக் கொண்டிருந்த விளக்கொளியில் முதுகு காட்டி ஒருக்களித்து படுத்திருந்த அனிதா தெரிந்தாள்.

ஏறி இறங்கும் கொடைக்கானல் மலைத் தொடர் போன்ற நெ-களிவுகளுடன் பிரம்மன் படைத்த பிரம்மாண்ட அழகு- முகம் கருங்கி படுத்து கிடப்பதைக் கண்டதும் மனம் கசிந்தது. அத்தனை கோபமும், ஈகோவும் எங்கேதான் பறந்து போனதோ- அவள் அருகில் வந்து உட்கார்ந்து தோளைத் தொட்டான்.

"அனி-"

"- -"

"ஏய்- இப்படி திரும்பி என்னைப்பார். எந்திரி அனி"

"டோன்ட் டிஸ்டர்ப் மீ! எனக்காக யாரும் மெனக்கெட வேண்டாம்"

"அட- இவ்வளவு கோபமா? இப்ப எந்திரிக்க போறியா இல்லையா?" அர்விந்த் வலுக்கட்டாயமாய் அந்த மூங்கில் தோளை இறுக பற்றி தூக்கினான்.

எந்த ஒப்பனையுமின்றி வெளிறி போயிருந்தது முகம். அதில் அதீத சோகத்தை வெளிப்படுத்தினாள் அனிதா. எப்போதும் கலகலவென சிரித்துக் கொண்டிருப்பவளை அந்த கோலத்தில் காண பொறுக்க முடியாமல் இழுத்து அணைத்துக் கொண்டான். காதல் மிருதுவோடு அவள் கன்னத்தை சரப்படுத்தினான். அனிதாவும் அவன் அணைப்பில் கிறங்கித்தான் போனாள்.

"ஏன்டா, இப்படி உன்னையும் வதைச்சுக்கிட்டு, என்னையும் கொல்றே. எத்தனை ஆசை, ஆசையாய் பறந்து வந்தேன்? ஏழு நாட்களை வீணடிச்சிட்டியே கண்ணம்மா!

"நானா உன்கிட்ட சண்டை போட்டேன்? நீதானே என்னை தேர்ட் பர்ஸன் மாதிரி கார்ல இருந்து கழுத்தைப் பிடிச்சி தள்ளாத குறையா-" குரல் உடைந்து போனது.

"ஓ- சாரி- வெரி சாரி- மை டியர்" நிஜமான வருத்தத்துடன் அர்விந்தன் அவள் தலையை கோதினான்.

"செய்யறதையும் செஞ்சுட்டு- இப்ப என்ன பாசம் பிச்சிக்கிட்டு வந்துச்சாம்?"

"நீ பைத்தியக்காரிமாதிரி அப்படி பேசலேன்னா- ஏன் நான் அப்படி நடந்துக்கறேன்? சரி- பாஸ்ட் இஸ் பாஸ்ட். மறப்போம்- மன்னிப்போம். வேற எதையாவது பேசு"

அவளை பற்றியிருந்த அவன் கைகளை தன்னிடம் இருந்து விலக்கினாள்.

மறக்கறதா? நெவர்! நீ என்னமோ- நான் சொன்னதுக்கு ஒத்துக்கிட்டு வந்தேன்னுல்ல நினைச்சிட்டிருந்தேன்?"

"அ-னி-தா!" அதிர்ந்தான்.

"நீ இன்னும் அதை மறக்கலியா?"

"என்ன ஏதுன்னு முழுசா தெரிஞ்சுக்காம, மறந்துடு மறந்துடுன்னா- என்ன அர்த்தம்?

"கண்ணை கட்டி கிணற்றில் தள்ளறதா அர்த்தம்"

"இதோ பார் அர்விந்த்! டு யூ லவ் மீ? உண்மைய சொல்லணும்"

"இதை நான் சொல்லித்தான் தெரியுமா?" இடுப்பை நிமிண்டினாள்.

"எனக்கு ஒரு கஷ்டம்னா- உன்னை பாதிக்குமா, பாதிக்காதா?"

"பாதிக்கும் டி- ஆர்- மை பெட்டர் ஹாஃப்- யூ நோ"

"நான் மிஸ் மெட்ராஸ் ஆனதிலே உனக்கு சந்தோஷம்தானே?"

"சர்வ நிச்சயமாய்-"

"அப்படிப்பட்ட என்னை நாலஞ்சு பொறுக்கிங்கள ஏவி விட்டு நடு ரோட்ல நிறுத்தி வச்சு கேவலமா பேசினா- நீ எப்படி ஃபீல் பண்ணுவே?"

"நோ- நீ சொல்றது நிஜமா? யாரது? எந்த ராஸ்கல் உன்னை அப்படி பேசினது? இப்பவே பல்லு அத்தனையும் கழட்டி எடுத்துட்டு வர்றேன்"

"பல்லு வேணாம். காதல் பண்ணு போதும்"

"நீ என்ன சொல்றே அனி?"

"அந்த பொறுக்கிங்கள ஏவி விட்டு என்னை அவமானப்படுத்தினவ அஞ்சுக்கும், பத்துக்கும் அல்லாடற பராரி கும்பலை சேர்ந்தவ அர்விந்த். கார் மேல கண்ணுமண்ணு தெரியாம ஒரு கழுதை வந்து விழுந்தா- நான் என்ன பண்ண முடியும்? நான்தான் வேணுமின்னே ஏத்திட்டேன்னு- கூட்டத்தை கூட்டிட்டா! ஆளாளுக்கு என்னை என்னவெல்லாம் பேசினாங்க தெரியுமா? அவமானத்திலே கூனிக்குறுகிப் போயிட்டேன். அதை இப்ப நினைச்சாக்கூட, நான் புழுவை விட கேவலமா ஆயிட்ட மாதிரி ஒரு உணர்வு. அனுபவப்பட்டாதான் தெரியும் அதனோட வலி"

"ஐ- ஸீ!" அர்விந்தன் மோவாயை தேய்த்துக் கொண்டான்.

"சொல்லு அர்விந்த். அப்படிப்பட்ட அவளை நான் பழி தீர்த்துக்க வேணாமா?"

"செய்- பதிலுக்கு நீயும் ஒரு நாலு அடி அடிச்சிட்டு வா"

"நோ- அவ கன்னத்தில அறையறத விட அவ இதயத்தில் அடிக்கணும். அந்த அடியில அவ எழுவேக் கூடாது. அதுக்குத்தான் சொல்றேன். நீ அவளை லவ் பண்ணனும்"

"சம்பந்தமேயில்லாம உளராதே. அவளை பழிவாங்கறதுக்கு நான் ஏன் லவ் பண்ணனும்?"

"ஐ- மீன்- லவ் பண்ற மாதிரி நடிச்சி ஏமாத்தணும்"

"சேச்சே- அது கொலை பண்றதுக்கு சமம். வேணாம் அனி- இந்த ஐடியா சரியில்லே- இது பாவம்"

"நோ- நான் தீர்மானமா சொல்லிட்டேன். நான் சொல்றபடி நீ கேக்கலேன்னா- இதோ இப்ப நாம சந்திக்கறதுதான் கடைசியா இருக்கும். என் வலி உனக்குபுரியலேன்னா- புரிஞ்சிக்க முயற்சிக்கலேன்னா- நீ கூட எனக்கு தேவையில்லே அர்விந்த். அது மட்டுமில்லே பணத்தால ஆட்களை விலைக்கு வாங்க எனக்கும் தெரியும். அந்த திமிர் பிடிச்ச சனியனை- ரேப் பண்ண சொல்லுவேன்"

"அனிதா!" அதட்டினான் அர்விந்தன்.

"வெல்- நீங்க என் திட்டத்துக்கு ஒத்து வரலேன்னா நான் அந்த வழியிலே இறங்கவும் தயங்க மாட்டேன்" அவளின் முரட்டு பிடிவாதம் அவனுள் பயத்தை உண்டாக்கியது. 'வேறு வழியேயில்லையா?' திகைத்

தான்.

"யோசிக்க ஸ்டெப் எடுத்து வை. இதெல்லாம் நம்ம வீட்டுக்கு தெரிஞ்சா என்ன ஆகும் தெரியுமா!"

"தெரியாமதானே காலை நகர்த்தப் போறோம்! அதெல்லாம் நான் பார்த்துக்கறேன்"

"ஆவி.. சப்போஸ் நான் அவளை நிஜமாகவே காதலிச்சா என்ன பண்ணுவே!" இப்படி சொல்லியாவது வழிக்கு வரமாட்டானா? என்கிற நப்பாசை அவளுக்கு.

"ம்ஹூம்.. இம்பாஸிபிள். நான் இந்த பந்தை சுவத்திலதானே எறியப் போறேன். கடல்ல தூக்கி வீசலியே. இது திரும்ப என்கிட்டேதான் வந்து சேரும்" பயமதையோடு சொன்னான்.

தொய்ந்து போன அர்விந்தன் "நான் யோசிக்கணும்" என்றாள்.

"தாராளமா.. ரெண்டு நாள் எடுத்துக்கோ. ஆனா, ரிசல்ட் சாதகமா இருக்கட்டும். என் எண்ணம் நிறைவேறிய பிறகுதான் நம்ம கல்யாணம். அதையும் மனசுல வச்சு யோசி. அதுக்கு முன்னே.." என்றவன் அவளை இழுத்து தன் நெஞ்சின் மீது சாய்த்து முகம் நோக்கி குனிந்தான்.

## 4

மழை நின்று விட்டிருந்தது. சொட்டு சொட்டாய் வழிந்து ஓட்டு மேலிருந்து விழுந்த தண்ணீர் துளிகள் 'லொட்.. லொட்டென' தாள லயத்தோடு ஓசை எழுப்பியது. கம்பி கம்பியாய் வானில் மின்சாரம் பாய்ந்த சில நொடிகளில் கடமுடாவென்ற இடி சத்தம்.

தூக்கம் வராமல் புரண்டு படுத்த ரஞ்சனி தண்ணீர் குடிக்க சமையலறை போனாள். கால்களை குறுக்கி, லேசாய் வாய்பிளந்து ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அம்மாவை பார்க்கையில் மனதை பிசைந்தது. கால் விரல்களின் இடுக்கில் செக்க செவேர் என்று குங்குமம் அப்பி வைத்தது போல் சேற்று புண் இருந்தது. தாகம் மறந்த ரஞ்சனி அப்படியே அம்மாவின் அருகில் அமர்ந்தாள்.

'அம்மா.. மாடாய் உழைத்து, ஓடாய் தேய்ந்து போகிறாயேம்மா' ஓய்வெடுத்துக் கொள். நான் உன்னை உள்ளங்கையில் தாங்குகிறேன் என்றாலும் வீண் பிடிவாதம் ஏன் உனக்கு?'

ஸ்டாண்டில் இருந்த மருந்தை எடுத்து கால்களில் தடவினாள். எந்த உணர்வும் இன்றி மரகதம் உறங்கிக் கொண்டுதானிருந்தாள்.

'பாவம்.. வேலை செய்த அசதி' லேசாய் உடலை குறுக்கின அம்மாவைப் பார்த்த ரஞ்சனி தன்னறைக்கு வந்து போர்வையை எடுத்து அம்மா மீது போர்த்தினாள். திரும்பி தண்ணீர் குடித்து விட்டு வந்து படுத்தாள்.

"என்ன ரஞ்சனி? மணி பன்னெண்டாகுது. இன்னும் தூங்கலியா?" பக்கத்தில் படுத்திருந்த ராதிகா கேட்டாள்.

"நீயும் முழிச்சிட்டுத்தான் இருக்கியா?"

"ம்.. தூக்கமே வரலே. உங்க புது எம்.டி. எப்படி இருக்கார் ரஞ்சனி?

பேரென்ன சொன்னே? ரகுவா?”

“அவருக்கென்ன- ஜம்முனுதான் இருக்கார்”

“வழியற ஜொள்ளோட அளவு ஏறி இருக்கா- இறங்கி இருக்கா?”

“சேச்சே- அப்படி சொல்லாதே- அவர் நல்லவர்”

“அட!” ஆச்சர்யம் தாளாமல் எழுந்தமர்ந்தாள் ராதிகா.

“நீயா சொல்றே? அந்த ஆள் அப்படி இப்படின்னு திட்டிக்கிட்டு இருந்தே! இப்ப என்னடான்னா- பிளேட்டையே மாத்திப் போடறே. அதுவும் மொத மொதலா உன் வாயால ஒரு ஆம்பிளையை நல்லவர்னு சொல்லி இருக்கே என்ன ரஞ்சனி- உண்மையை சொல்லிடு நீ அவரை லவ் பண்றியா?” ஆர்வமும், ஆச்சர்யமும் மேலிட கேட்டாள் ராதிகா.

“நான்சொல்லல- என்ன இப்படியெல்லாம் பேசறே? என்னை பத்தி நல்லா தெரிஞ்சிருந்தும்-”

“பெண்கள் மனசு கற்பூரம் மாதிரி ரஞ்சனி. காத்துல கூட கரைஞ்சு போறது கட்டிதான். காதல்ல கரைய முடியாதா என்ன? அப்படியொரு பணக்கார மாப்பிள்ளை உனக்கு அமைஞ்சா- ஐயையோ- எவ்வளோ ஜாலியா இருக்கும்? பெரிய வீட்டுக்குப் போயிடலாம். கார்லேயே போகலாம். விதவிதமா சாப்பிடலாம். ஏன்- எப்பாடுபட்டாவது வெளியூருக்கு கூட்டிப் போய் என் காலை குணப்படுத்தி நடக்க வச்சிட மாட்டியா? சொல்லு ரஞ்சனி- நீ ரகுவை லவ் பண்றியா?”

ராதிகா எப்பவும் இப்படித்தான். அவள் உலகமே ரஞ்சனிதான். கால் ஊனம் காரணமாய் வெளி உலகோடு அதிகமாய் பரிச்சயமில்லாத ராதிகாவுக்கு ஆல் இன் ஆல் ரஞ்சனிதான். அன்றைய நிகழ்ச்சிகளை அன்றைக்கே ராதிகாவோடு பகிர்ந்து கொண்டாக வேண்டும். ராதிகாவுக்கு ஆசைகள் அதிகம். தன்னால் இயலாதவற்றை பேசி தீர்த்துக் கொள்ளுவாள். தையல் இயந்திரத்துடன் ஓடி களைக்கும் நேரம் போக தன் கனவுலகில் சஞ்சரித்து விடுவாள்.

கொள்ளை அழகுடன் செக்க செவேர் என்று கம்பீரத்துடன் இளைஞன். வெளிநாட்டு காரில் அவன் பக்கத்தில் பூவோடு தேவதையாக ராதிகா கையோடு கைசேர்த்து அமர்ந்திருப்பாள். கனவுக்கு என்ன பூட்டா, சாவியா? தாராளமாய் அவனோடு ஓடியாடுவாள். நிஜத்தில் நடக்க கூடியதா என்ன? ஒரு சமையல்காரியின் மகளை, அதுவும் நொண்டியை எந்த பணக்கார வாலிபன் கைப்பிடித்து அக்னியை வலம் வந்து தாலி கட்டப் போகிறான்? பதினெட்டு வயதில் ஆசைகளை எல்லாம் தன் சின்ன இதயத்தில் அழுத்தி புதைத்துக் கொள்வதோடு சரி. அந்த வாழ்க்கை ரஞ்சனிக்காவது அமைய வேண்டுமே என்பதுதான் அவள் பிரார்த்தனை எல்லாம்.

ஆனால் ரஞ்சனி நினைப்பதோ- வேறு! ஆண் துணை இல்லாத வீட்டில் தான் ஆண் போல் நின்று தூணாக இந்த குடும்பத்தை தாங்க வேண்டும். அம்மாவை கடைசி வரை கண்கலங்காமல் காப்பாற்ற வேண்டும். தங்கை ராதிகாவை நல்ல இதயமுள்ள ஆண் மகனுக்கு மண முடிக்க வேண்டும். அதற்காகத்தான் கொஞ்சம், கொஞ்சமாக சேமித்துக் கொண்டிருக்கிறாள். இந்த கடமைகளை முடித்த பிறகே தன்னைப் பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதுவரை எந்த ஆணும் அவளை வசீகரித்தது இல்லை. அப்படி இனிமேல் யாரேனும் தன்னை மீறி இதயத்தில் நுழைந்து விட்

டாய்- அதை பிறகு முடிவு செய்து கொள்ளலாம்.

"என்ன ரஞ்சனி! உன் ஹீரோவப் பத்தி ஒன்னுமே சொல்ல மாட்டேங்கறே?" ராதிகா ரஞ்சனியின் இடுப்பில் கைபோட்டு அணைத்தாள்.

"நோ- இனி ஆபீஸ் மேட்டர் பத்தி உன்கிட்டே எதுவும் சொல்லப் போறதில்லை. நீ தப்பு தப்பா பேசறே!"

"சரி- தப்பு- தப்பு- கன்னத்தில் போட்டாச்சு. இன்னைக்கு ஆபீஸ்ல என்ன நடந்தது-? சொல்லு"

"நானே எதிர்பார்க்காத ஒரு இன்சிடன்ட். எம்டி. என்னை அழைச்சார்னு- போனேன்"

"ம்- அப்புறம்?"

"சொன்னார். தன்னை ஹோட்டலில் ரிசப்ஷனிஸ்ட் வேலைக்கு மாற்ற எத்தனித்தது முதல்- எல்லாமே-

"முட்டாள்தனமான காரியம் பண்ணிட்டியே ரஞ்சனி. ராதிகா மனசு பொறுக்காமல் கைகளை உதறினாள்.

"என்னடி சொல்றே?"

"வலிய வந்த சிதேவிய இப்படி எட்டி உதைப்பாங்களா? அதிக சம்பளம், கவுரவமான வேலை போதாதுக்கு விதவிதமான மாடர்ன் டிரஸ்- ஐயோ- ஐயோ- நானா இருந்தா பூம்பூம்மாடு மாதிரி ஜோராய் தலையாட்டிட்டு வந்திருப்பனே?"

"போடி! பணம் வர்றது பெரிசில்லே. அது எந்த வழியில வர்றதுன்னு தான் பார்க்கணும். சகஜமா எல்லோர்கிட்டேயும் வலிய போய் சிரிச்சி பேசறதுதான் உத்யோகம்னா- அது கவுரவமானதா எனக்கு தோணலை. என் நேச்சருக்கு அது பொருத்தமுமில்லே. எம்டி. எனக்கு உதவற நோக்கத்தோட இந்த வேலைய கொடுக்க நினைச்சாலும், அந்த பரிதாப உணர்வு என்மேல் ஏற்பட வழிவகுக்க நான் இடங்கொடுக்க மாட்டேன். அவரோட உதவிக்கு நான் நன்றி கடன் படணும். ஆம்பிளைய பத்தி எப்பவுமே நல்ல விதமா சொல்லிக்க முடியாது. எல்லோருக்குமே வீக்னஸ் பாய்ண்ட்டுன்னு ஒன்னு இருக்கு. லேடீஸ்க்கு நகை, பணம், அன்புன்னு வித்தியாசப்படலாம். ஆனா, ஆம்பிளைய பொறுத்தவரைக்கும் லேடீஸ் மட்டும்தான் பலவீனப்படுத்தும் பாய்ண்ட். அவர் உதவிய ஏத்துக்கிட்டா- அவர் என்கிட்டயிருந்து எதையாவது எதிர்ப்பார்க்கலாமல்லவா? அதுவும் ரிச்மேன்..."

"மோசமான அபிப்ராயம் ரஞ்சனி உன்னோடது. எனக்கென்னவோ, அவர் ரொம்ப நல்ல மாதிரிதான் தெரியுது. அப்படிப்பட்டவர் என் அக்காவுக்கு புருஷனா வந்தா எப்படி இருக்கும்?"

"ம்- கண்றாவியா இருக்கும். மணி ஒன்னாகுது. உன் திருவாயை கொஞ்சம் மூடிக்கறீங்களா? நான் காலையில எழுந்து ஆபீஸ்க்கு போகணும்"

அவசர அவசரமாய் தலைவாரி சுற்றி வளைத்து கொண்டைப் போட்டுக் கொண்டாள் மரகதம்.

"ராதிகா- அடுப்பில் ரசம் வச்சிருக்கேன். கொதிச்சிடப் போகுது. பார்த்து இறக்கிடும்மா"

"இன்னும் நேரமிருக்கே எம்மா.. சீக்கிரமா கிளம்பறே?"

"வீட்டுக்காரம்மா பையன் வெளிநாட்லேர்ந்து வந்துட்டாரில்லே. அவருக்கு எல்லாம் நேரத்துக்கு நடந்தாகணும். இல்லன்னா கோபம் வந்துடும்"

"அதுக்காக காபிக்கூட முடிக்காம போகணுமா? அப்படி.. என்ன அந்தாளு தலையா சீவிடுவார்?"

"அரவிந்தன் தம்பிய பத்தி அப்படியெல்லாம் சொல்லாதேம்மா. உன்னைக் கூட விசாரிச்சார் தெரியுமா! ரொம்ப நல்லவர்"

"அதுயாரு அரவிந்தன் தம்பி? எனக்கே தெரியாம உனக்கொரு தம்பி?"

"வீட்டுக்காரம்மா பையனைத்தான் சொல்றேன்"

"அது சரி"

"நல்லவங்கள பத்தி எம்மா இவகிட்டே பேசறே? பணக்காரங்கள்ளா, இவளைப் பொறுத்தவரை மனுஷங்கள்ல சேர்த்தியே இல்லே. இந்தா பிடி. இந்த ப்ளவுஸ் சரியா இருக்கான்னு போட்டுப்பார்" தான் தைத்த ஜாக்கெட்டை ரஞ்சனியின் கையில் திணித்தாள் ராதிகா.

"நேரமாச்சு. நான் கிளம்பறேன். ரஞ்சனி. சாப்பாட்டை கலந்து எடுத்துக்க மறக்காதே. ராதிகா.. கதவை நல்லா தாழ்போட்டுக்கிட்டு இரு. ஆங்.. சொல்ல மறந்துட்டேன். ரஞ்சனிம்மா.. நேத்து வேலை முடிஞ்சு வர்றப்ப பஸ் ஸ்டாண்ட்ல தரகரை பார்த்தேன்.

"ஒரு வரன் இருக்கு. ரஞ்சனிக்கு முடிச்சிடலாம். அடிச்சி புடிச்சி பத்து பவுன் போட்டா போதும். கையில அஞ்சு குடுத்துடுங்க. நான் சொல்லி சமாளிச்சிக்கறேன்னு சொல்லியிருப்பாரே?"

"ர..ஞ்..ச..னி?" அதிர்வோடு பார்த்தாள் மரகதம்.

"நீயும் சளைக்காம கேக்கறே. நானும் சளைக்காம பதில் சொல்றேன். அப்ப சொன்னதுதான் இப்பவும். எனக்கு இப்போதைக்கு கல்யாணம் வேண்டாம்மா. எனக்கு வேணும்னு தோணறப்ப.. நானே சொல்றேன். அதுக்கு முன்னே ராதிகாவுக்கு முடிச்சிடலாம். ஏன் இந்த வரனையே கூட ராதிகாவுக்கு கேட்டுப் பாரேம்மா"

"அசட்டுத்தனமா உளராதே. அவ சின்னவ".

"சின்னவ, பெரியவன்ற வித்தியாசமெல்லாம் நம்ம வீட்ல இருக்கக் கூடாதும்மா. பெரிய சுமையதாம்மா முதல்ல இறக்கி வைக்கணும். நான் கல்யாணம் பண்ணிக்கிட்டு போய்ட்டா.. வர்றவன் எப்படி இருப்பானோ? என் சம்பாத்யத்தை நம்ம குடும்பத்துக்கு கொடுக்க சம்மதிப்பானா? உன்னோட வருமானத்தை வச்சுக்கிட்டு ரெண்டு வயத்த கழுவ பார்ப்பியா? அவளை கரையேத்த பார்ப்பியா? புரியாம பேசாதேம்மா. நீ என்னை பத்தி நினைச்சுப் பாக்கறே. நான் நம்மை பத்தி நினைக்கறேன். ராதிகாவுக்கு வரன் பார்க்கச் சொல்லி அந்த தரகர்கிட்டே சொல்லிடு" தீர்மானமாய் சொன்னாள்.

மரகதம் மட்டுமல்ல.. ராதிகாவின் இதயம் கூட ஒரு முறை விம்மி தணிந்தது.

# 5

"முதமுதலா லவ் பண்ண, ஐ மீன் அவளை– போறே– இப்படியா முகத்தில டன்டன்னா சோகத்தை வழிய விடுவே! சிரிப்பா– கொஞ்சமாவது ரொமான்ட்டிக் லுக் வரவேணாமா?"

"எவளை பார்த்தாலும் ரொமான்ட்டிக் லுக் விட்றதுக்கு நான் ஒண்ணும் அத்தனை சீப்பில்லே. நீ என்னை ரொம்ப சீப்பாக்கிட்டே– ஒரு பிஸினஸ் மேக்னட்ட எவளோ ஒருத்தி பின்னால நாயை போல விரட்ட நினைக்கிறே"

"ஓக்கே– ஓக்கே– ரிலாக்ஸ். பழைய பேச்சே வேணாம். ஏன் இப்படி நெர்வஸ்ஸா இருக்கே? எனக்கே தெரியாம பண்ணாதான் தப்பு– துரோகம். நான்தானே அனுப்பறேன்? எத்தனை லவர் இப்படி தன் காதலனையே வேற பொண்ணை போய் லவ் பண்ணுன்னு சொல்லுவா? அப்படி சொல்றேன்னா நான் எந்தளவு பாதிக்கப்பட்டிருப்பேன்னு புரிஞ்சுக்க அர்விந்த்!" மிக மிக மென்மையாய் ஸாட்டின் துணி நெகிழ்வோடு குரலில் ஏற்ற இறக்கம் காட்டி பேசினாள் அனிதா.

"இது அந்த பொண்ணுக்கு துரோகம் செய்றாப்பலதானே? பாவம் ஏழைன்னு வேற சொல்றே?"

"ஏழைக்கு அவ்வளவு திமிர் தேவையா? ரொம்ப தப்பில்லே?"

"எனக்கென்னவோ மனசுக்கு கஷ்டமாயிருக்கு அனி. நீ வேற ஆளை–"

"நோ– நோ! என் திட்டமே வேற. உன்னைத் தவிர வேற யாரும் நடிக்க முடியாது. நடிக்கவும் கூடாது. சரி, இதையே பேசிட்டிருக்க வேணாம். காரை எடு– காலேஜ் ரோடுக்கு விடு"

"அவ காலேஜ் ஸ்டுடன்ட்டா?"

"அலையாதே– எங்கேயோ வேலை செய்றா. அந்த பஸ் ஸ்டான்ட்ல அடிக்கடி பார்த்திருக்கேன். இதோ பார் அர்விந்த் தினமும் நீ அவளை மீட் பண்றே. நிச்சயம் உன் பர்ஸனாலிட்டிக்கு அவ சரண்டர் ஆயிடுவா. உங்க லவ் எந்த அளவுக்கு டெவலப் ஆகுதுன்னு ஒரு நாள் விடாம போன்லேயோ– நேர்லயோ என்கிட்டே சொல்றே. நான் எப்ப கட் பண்ண சொல்றேனோ, அப்ப அவளோட ஃப்ரன்ட்ஷிப்பை கட் பண்ணிடறே– சரியா?"


"– –"

"என்ன அர்விந்த். ஒண்ணுமே பேச மாட்டேங்கறே?"

"நான் பொம்மை. நீ கீ! தட்ஸ் ஆல். பொம்மை பேசாது. விறைப்பாய் சொன்னான்.

'தன்னைப் பற்றி மட்டும்தானே நினைக்கிறாள்? என்னை பற்றி நினைத்துப் பார்த்தாளா? இவள் மீது நான் கொண்டு உள்ள அளவிட முடியாத காதலை பகடை காயாக்கி, இப்போது என்னை தலையாட்டி பொம்மையை போல் ஆக்கி விட்டாளே" இதயம் வலித்தது.

"ஸ்ஸ்– இந்த சென்டிமென்ட் டயலாக்கெல்லாம் வேணாம். அப்பப்ப



இந்த பொம்மைக்கு சார்ஜ்ஜூம் உண்டு" அவன் தோள் மீது சாய்ந்து இறக்கம் வழியும் கண்களோடு பார்த்தாள். ஆளை அப்படியே பாதாளாத்துக்கு இழுத்துச் சென்று விடும் பார்வை. அவன் தன்னை அவள் மீது அழுத்திக் கொண்டான். அந்த உஷ்ணம் அவன் இறுக்கத்தை உருக்கியது.

பஸ் ஸ்டாண்ட் எதிர்புறம் காரின் கண்ணாடிகளை ஏற்றி விட்டு காத்திருந்தனர். அனிதாவின் கையில் சாக்கோபார் இருந்தது. கொஞ்சமும் பதட்டமின்றி நுனி நாக்கால் சுவைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்த அழகு.. அர்விந்தன் நார்மலாக இருந்திருந்தால்.. அந்த உதட்டை கவ்வி சுவைத் திருப்பான். ஆனால் பதட்டமும், குழப்பமும், இனம்புரியா பயமுமாய் அவன் அவளுக்காக காத்திருந்ததில் கொஞ்சமும் அவளை கொஞ்ச தோன்றவில்லை.

நேரம் ஐந்தரையைத் தொட்டுக் கொண்டிருந்தது.

"அதோ.. அர்விந்த்.. அதோ வந்திட்டிருக்கா பார்" சட்டென கூவினாள் அனிதா.

அவள் சுட்டிக்காட்டிய திசையில் வந்து கொண்டிருந்தவளை பார்த்து அசந்து போனான்.

சற்றே உயரமாய்.. அதற்கான சதை பிடிப்போடு. காட்டன் புடவையில், நீளக் கூந்தல் குழந்தையின் தொட்டிலாய் ஆட... இவளா? இவளையா காதலித்து ஏமாற்றப் போகிறேன்? ஏழ்மையில் இப்படியொரு அழகு குவியலா? இருபதடி தூரத்தில் இருந்து பார்க்கும் போதே அசத்துகிறாள். அருகே சென்று பார்த்தால்?"

"நல்லா பார்த்துக்க அர்விந்த் உன் காதலியை. தினமும் ஷார்ப்பா.. இந்த டைமுக்குதான் வர்றா. எப்படியாவது அவளோட ஃப்ரண்ட்ஷிப்பை ஏற்படுத்திக்க. தப்பித் தவறிக் கூட எந்த சந்தர்ப்பத்திலேயும் என்னை தெரிஞ்சதா காட்டிக்காதே. உஷாராயிடுவா. ஆனாலும் விடப் போறதில்லெங்கறது வேற விஷயம்"

"சரி.. போகலாமா?"

"என்னப்பா எதுவுமே சொல்லலை. உன் லவர் எப்படி? பிடிச்சிருக்கா?" கண் சிமிட்டி கேட்டாள்.

அவளை முறைத்துப் பார்த்தவன் காரை ரிவர்ஸில் எடுக்கும்போது ரியர்வியூ மிர்ரரில் தெரிந்த அவள் உருவத்தை தவிர்க்க முடியாமல் பார்த்தன அவன் கண்கள்.

"அவ பேரு என்ன சொன்னே?"

"இன்னும் நான் சொல்லவே இல்லையே.."

"இப்ப சொல்லு"

"யாருக்குத் தெரியும்? நீதான் கண்டுபிடிக்கணும்"

"ச்சட்.. என்னை நீ வம்புலதான் மாட்டி விட போறே.. பாரேன்"

"எந்த வம்பும் வராம நான் பார்த்துக்கறேன். ஆமா 'இப்ப எங்கே போறோம்?"

"உன் வீட்டுக்கு"

"வேணாம். என் ப்ளாக்கி இப்ப ரொம்ப சூடா இருக்கு. குளிர வைக்க

வேணாமா? பிக்சர் போலாமா!" கேட்டபடி அவன் இடது கையோடு தன் கையை கோர்த்துக் கொண்டு நெருங்கி உட்கார்ந்தான்.

அவனிடம் இருந்து எழுந்த சென்ட் வாசனை, அவன் உடம்புக்கே உரிய பிரத்யேக மணம், ஸ்பாஞ்ச் உடம்பு எல்லாமுமாக சேர்ந்து- இது நேரம் வரை அவனை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த துரோக உணர்வு காற்றோடு காற்றாய் எங்கோ பறந்து போனது.

ஒரு கையால் ஸ்டியரிங்கை பற்றி, இன்னொரு கையால் இவள் தோளை பற்றி இருக்கினான் அர்விந்தன்.

ஒரு ஆள் மூலம் அவளைப் பற்றி தான் சேகரித்த விபரங்களை படித்தான்.

பெயர் ரஞ்சனி. வயது இருபத்திரெண்டு. பி.எஸ்ஸி. டிகிரி ஹோல்டர். தனியார் கம்பெனியில் வேலை. உடன் அம்மாவும், தங்கையும் மட்டுமே. நடுத்தர குடும்பம். பணக்காரர்களை கண்டாலே எட்டடி தூரம் எட்டிப் போகும் வெறுப்பு.

'அதுசரி. என்னைக் கண்டு பத்தடி தூரம் ஓடிப் போனால் எப்படி காதலிப்பதாம்?'

யோசித்தான். அர்விந்தனுக்கு முன்பிருந்த உறுத்தல் இப்போது இல்லை. ஏனோ, அவளைப் பார்த்ததும் அவளிடம் பேச வேண்டும் போல் தோன்றியது. அனிதாவுக்காகத்தான் இதெல்லாம் என்பது கூட இரண்டாம் பட்சமானது. எப்படியோ- பொழுதுபோக்க இது ஒரு என்டர்டெய்ன் மெண்ட். வித்தியாசமான பொழுதுபோக்கு.

முதலில் தான் பெரும் பணக்காரன் என்பதை மறைக்க வேண்டும். அதற்காக தினமும் சில மணி நேரங்கள் ஒரு சில வசதிகளை மறக்க வேண்டும். காரில் போவதை தவிர்க்க வேண்டும்.

முதல் சந்திப்பை எப்படி ஏற்படுத்திக் கொள்வது? சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தான்.

அன்று-

பஸ்ஸில் ஏக கூட்டம். பை நிறைய சாத்துக்குடி வாங்கி கொண்டு ஏறினால்- சொம்பு நிறைய ஜூஸ் பிழியலாம் போல் ஒருவர் மேல் ஒருவர் அமிழ்ந்து கிடந்தனர். பழக்கமில்லாத அர்விந்தனுக்கு அந்த பஸ்ஸில் மூச்சு முட்டுவது போல் இருந்தது.

'அதோ- அவள்! ஒரு கையில் பஸ் கம்பியை தலைக்கு மேல் பிடித்த படி. மறு கையில் டிக்கட் வாங்க சில்லறையை வைத்துக் கொண்டு. இதெல் லாம் பழகிப் போய் இருந்தாலும் சங்கடத்தில் நெளிந்த அவள் முகம்: காரணம்- அவள் பின்னே நிற்கும் அவன்.

முப்பது முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க, நெற்றியிலும் கன்னத்தி லும் தழும்புகளோடு- நேரே ஜெயிலிலிருந்து வந்தவன் போலிருந்தான். ரேக் போடுமுன்பே சாய்வதும், அவள் கழுத்தில் தெரியாமல் எதேச்சை ாக படுவது போல் முகத்தை வைத்து அழுத்துவதும்- முகம் சிவந்து பாயிருந்தது ரஞ்சனிக்கு. பளாரென்று அவனை அறைய வேண்டும் பாலிருந்தாலும் மற்றவர்களின் கேலிப் பார்வைக்கு இரையாக வேண் மே என்கிற சங்கடம் உறைக்க, பல்லை கடித்து பொறுத்துக் கொண்டான்.

"நான் டிக்கெட் எடுக்கட்டுமா?" பின்னாலிருந்து ரோமியோ கரிசன மாய் கேட்க, 'இடியட்' என்று பற்களுக்கிடையில் பொருமினாள்.

அவன் என்னவோ சொல்லவும், அவள் முகம் கோபத்தில் சிவந்து போவதையும், தொடர்ந்து அவன் அவளை எங்கெங்கோ சீண்டுவதும், உராய்வதுமாக சில்மிஷங்கள் செய்து கொண்டிருந்ததை பார்த்ததும் அர் விந்தன் கூட்டத்தில் நீந்தி முன்னேறி வந்தான்.

அவன் எங்கே தொட்டானோ தெரியவில்லை. கொதித்து வெடித் தாள் ரஞ்சனி.

"ராஸ்கல். பல்லெல்லாம் சிதறிப்போயிடும். தள்ளிப்போய் நில்லுடா"

"என்னடி 'டா' போட்டு பேசறே? பஸ்ஸுன்னா இடிபடும், அடிபடும், காத்துபடாம வரணும்னா... கார்ல போறது தானே?"

"மரியாதையா பேசு!"

"என்ன... கால்ல விழ சொல்றியா? என்னமோ கொஞ்சம் தெரியாம என் கை உன் தலைல பட்டதுக்கே இந்த குதி குதிக்கறியே... வேறெங்கன்னா பட்டிருந்தா என்ன பண்ணுவியோ?" அமர்த்தலாய் சிரித்தான் அந்த பொறுக்கி.

பஸ்ஸில் இருந்த அத்தனை கண்களும் அவளை மொய்த்தது. ஒருத்தர் என்றால் ஒருத்தர் கூட அவனை எதிர்த்து வாயை திறக்கவில்லை. கண்டக் டர் இந்த உலகில் அவதாரம் எடுத்ததே எச்சில் தொட்டு டிக்கெட் கிழித்துக் கொடுக்கத்தான் என்பது போல் கண்டு கொள்ளவே இல்லை. கண்டக்ட ருக்கு தெரியாதா? அராஜகம் செய்து கொண்டிருப்பவன் பேட்டை ரவுடி வைரவன் என்று.

'இந்தப் பெண்ணுக்காக வாயை திறக்கப் போய் நாம் ஏன் புத்தூர் கட்டு கட்டிக்கணும்?' என்கிற நல்ல எண்ணம் நிறையவே இருந்தது.

"அம்மணிக்கு பேரு என்னவோ?" தைரியமாய், குரலை உயர்த்தியே கேட்டான்.

"பொறுக்கி" பொறியில் அகப்பட்ட எலி போல் நெளிந்தாள் ரஞ்சனி. தன்னையும் மீறி கசிந்தன கண்கள்.

"அட... இந்த பேரை பொம்பளைங்களுக்குக் கூட வைக்க ஆரம்பிச் சிட்டாங்களா? உனக்கு பொருத்தமா இல்லியே கண்ணு. உனக்கு வீடு எங்கே?" அவன் திறந்த வாயை மூடுமுன் தோளில் ஒரு கை வந்து விழுந்தது.

"யார்ரா அவன்?"

"என்ன மிஸ்டர்? நானும் அப்போதிருந்தே கவனிச்சிட்டுதான் இருக் கேன். நீ பாட்டுக்கு என்னென்னமோ பண்ணிக்கிட்டு வர்றே! யாரும் கேக்க மாட்டாங்கன்ற திமிரா?"

"அட... இது யார் ஆம்பிளை? நம்ம ரூட்டுக்கு புதுசா? பார்த்தா கொயந்த பய மாதிரி இருக்கே. வேணாந்தம்பி இதுல நீ தலையிட்டா... உனக்கு தலையே இருக்காது"

"என்ன மிரட்டிறியா? என் மேல கைய வச்சு பாரு... பார்க்கலாம்? ஏண்டா அலையறே? பொம்பளைய தொட்டு பார்க்கணும்னா உன் பொண்டாட்டிய போய் தொடு. இல்லியா... உன் கூட பொறந்தவளை போய் தொடு. அப்படியும் யாரும் இல்லேன்னா... உன்னை பெத்தவளையே

போய் தொட்டுப் பாரேன்டா"

தாடைகள் இறுக அந்த ரவுடியிடம் எகிறிய புதியவனை பிரமிப்பும், பயமுமாய் பார்த்தாள் ரஞ்சனி.

பஸ் ஒரு ஓரமாய் ஒதுங்கி நின்றது. சளசளவென்ற பேச்சுக் குரல்கள்.

வைரவனுக்கு ஆச்சர்யமும், ஆத்திரமும் தாளவில்லை.

'யாரை பார்த்து இந்த கேள்வியை கேட்கிறான்? எவ்வளவு தைரியம் வேண்டும் இந்த வைரவனை எதிர்க்க?'' ரத்தம் தலைக்குள் பாய ரப்பென்று அர்விந்தனை அறைந்தான். முஷ்டியால் ஓங்கி ஒரு குத்து. அர்விந்தனால் அலறக் கூட முடியவில்லை.

அடியா அது? அவன் பிறப்பில் இப்படியொரு அடியை வாங்கியதே இல்லை. சுகமாய் வளர்ந்த உடம்பு அது. குஷனில் உட்கார்ந்தால் கூட முதுகு வலிக்கிற பணக்கார தேகம். வாட்டர் பெட்டில் படுத்தால் மட்டுமே உறக்கம் தரக் கூடிய வசதியை ருசி பார்த்த உடம்பில் ஒவ்வொரு அடியும் இடியாய் இறங்கியது.

'அடிப்பாவி அவிதா.. எல்லாம் உன்னால் தானே?' மனம் கதறியது.

உதடு கிழிந்து ரத்தம் துளிர்த்தது.

"அடிக்காதே.. அவரை அடிக்காதே!" ரஞ்சனி அர்விந்தனை மறைத்த படி குறுக்கே நின்று மறைத்தாள்.

"பார்டி இவன்? நைட்டுக்கு வர்றதுக்கு அட்வான்ஸ் குடுத்திருக் கானா?" வைரவன் நக்கலாய் கேட்டான்.

அவமானத்தில் குறுகிப் போனாள் ரஞ்சனி.

அர்விந்தனுக்கு கோபம் தாளவில்லை.

'என்னை அடிப்பதா? இப்பேர்ப்பட்ட.. நான் ஒரு ரவுடியிடம் அடி வாங்குவதா?' எங்கிருந்துதான் அவ்வளவு வீரம் வந்ததோ?

வைரவன் மீது தாவி விழுந்து அவனை அசைய விடாதபடி அமுக்கி லெஃப்ட் அண்ட் ரைட் வாங்கினான். இடைவெளி விடாமல் தொடர்ந்து விழுந்த அடியில் தொய்ந்து போனான் வைரவன். அவன் அசைய கூட சான்ஸ் தரவில்லை. அவன் சட்டையை கிழித்து கைகளை கட்டினான் அர்விந்தன்.

"என்ன கண்டக்டர்.. வண்டிய எடுக்கப் போறீங்களா.. இல்லையா?"

"நாங்க நேரத்துக்கு வீடு போய் சேர வேணாமா?"

"ஆறுமணி ட்ரெய்னை தவற விட்டா அதோட எட்டு மணிக்குத் தான். நான் பல்லாவரம் போகணும். சீக்கிரம் வண்டிய எடுங்க"

"போலீஸ் ஸ்டேஷன்ல அவங்களை இறக்கி விட்டுட்டு நீங்க எடுங்க டிரைவர்"

ஆளாளுக்கு பறக்க..

'சுயநல பிசாசுகள்' என்று வெறுத்துப் போனான் அர்விந்தன்.

போலீஸ் ஸ்டேஷனில் அவர்களை இறக்கி விட்டு போய் விட்டது பல்லவன்.

சேலை தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்ட ரஞ்சனிக்கு லேசாய் உதறல் எடுத்தது.

'போலீஸ் ஸ்டேஷனுக்கு வர்ற அளவுக்கு எனக்கு அசம்பாவிதம் ஏற்படணுமா? யாராவது தெரிந்தவர்கள் கண்ணில் அகப்பட்டால் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? அதுவும் இப்படியொரு சூழ்நிலையில். விபரீதமாய் கற்பனை செய்துகொள்வார்களே! தெரு விளக்கு வெளிச்சத்தில் அவன் கண்கள் கலங்குவதை கண்டு மனம் இளகியது அர்விந்தனுக்கு.

"மிஸ்..."

"ம்..." ஏறிட்டான். பயத்தில் ஓரிடத்தில் நிற்காமல் அலைபாய்ந்தன கருமணிகள். விழிகள் நனைந்தன.

"நீங்க ஏதாவது ஆட்டோ பிடிச்சு வீட்டுக்கு போய்டுங்க"

"நீங்க இவனை?"

"நான்பார்த்துக்கறேன். ஒரு குடும்ப பெண் இங்கே நிற்க வேண்டாம். சீக்கிரம் போங்க!"

"ரொ... ரொம்ப நன்றிங்க! "உதடுகள் துடிக்க கையெடுத்து கும்பிட்டான். எதிர்வந்த ஆட்டோவை நிறுத்தி ஏற்றி அனுப்பிய அர்விந்தனின் உதடுகள் வெற்றிப் புன்னகை சிந்தின.

வைரவனின் சட்டையை கொத்தாக பற்றி ஸ்டேஷனில் நுழைந்தான்.

இன்ஸ்பெக்டர் சுந்தர் அர்விந்தனை பார்த்ததும் முகத்தில் வியப்பு காட்டினார்.

"வாங்க மிஸ்டர் அர்விந்தன். நீங்க எங்கே இங்கே?"

"வாட் எ ஸர்ப்ரைஸ்? நீ இந்த ஸ்டேஷனில் இருப்பேன்னு நான் எதிர்பார்க்கவே இல்லே சுந்தர்!" அர்விந்தனுக்கும் ஆச்சர்யம்.

"நானும் உங்களை எதிர்பார்க்கலே!"

"ஏய்... இதென்ன புது மரியாதை?"

"நீங்கள்லாம் பெரிய இடம்!"

"அதெல்லாம் மத்தவங்களுக்கு"நீ என் ப்ரண்ட் அல்லவா? க்ளாஸ்ல பக்கத்து பக்கத்துல உட்கார்ந்து பிட் பாஸ்பண்ணிக் கிட்டதை எல்லாம் நான் மறக்கலேப்பா"

"மறக்ககூடிய நாட்களா அது?" சரி... என்ன சொல்லு அர்விந்தன்?"

நடந்ததை சொன்னான்.

வைரவன் அவர்களுக்குள்ள சிநேகம் கண்டு உள்ளுக்குள் பயந்தான். எல்லாம் அவளால்தானே? விடமாட்டேன்டி... என்னை இந்த நிலைமைக்கு கொண்டு வர காரணமாயிருந்த உன்னை விடவே மாட்டேன்" ரஞ்சனி மேல் வன்மம் வளர்ந்தது.

"என் ரத்தத்தோட கலரை இன்னைக்கு என்னை பார்க்க வச்சிட்டான்டா இந்த ராஸ்கல்"

"உனக்கு ஏன்டா இந்த வேண்டாத வேலை? ஏழெட்டு கார் இருக்க பஸ்ல போகணும்னு உனக்கென்ன தலையெழுத்து? எவனோ எவளையோ கிண்டல் பண்ணா உனக்கென்ன பொத்துக்கிட்டு வருது?" சுந்தர் உண்மையான பரிவோடும், ஆதங்கத்தோடும் கேட்டான்.

"நிஜமாகவே நீ போலீஸ்காரன்தானா? சந்தேகமா இருக்கு"

"இந்த மாதிரி தினசரி ஏழெட்டு கேஸ் வந்தா... மனுஷன் வெறுத்துப்

போக மாட்டானா? சரி.. இவனை என்ன பண்ண சொல்றே? பஞ்சா கட்டுகட்டவா?" சுந்தர் அர்விந்தனின் தோளை தட்டிக்கேட்டான்.

"அது மட்டும் போதாது. கஞ்சா, பிரவுன் சுகர்னு ஏதாவது கேஸ் போட்டு ஆறேழு வருஷம் உள்ளே தள்ளணும்"

"சொல்லிட்டே இல்லே.. கவலைப்படாம இரு. கான்ஸ்டபிள் இவனை லாக்கப்ல போட்டு பூட்டு. ஏட்டு, ஒரு எப்ஐஆர். ரெடி பண்ணுங்க. அர்விந்த் என்ன சாப்பிடறே? காபி ஆர் கூல்ட்ரிங்ஸ்?"

"நோ.. தாங்க்ஸ் சுந்தர்! நீ நாளைக்கு மார்னிங் 'அவசியம் என்னை' ஆபீஸ்ல வந்து பாரு. ஒக்கே?" அர்விந்தன் அவன் கையை குலுக்கி விட்டு புறப்பட்டான்.

எங்கோ ஒரு குழந்தையின் அழுகுரல் அந்த இரவின் நிசப்தத்தை கிழித்துக் கொண்டு கேட்டது.

ராதிகா சுகமான உறக்கத்தில் இருந்தாள். ஏதோ கனவு கண்டிருப்பாள் போலும். யாராவது வாட்டசாட்டமான வாலிபன் இவள் கையை பற்றி காரில் ஏற்றிக் கொண்டிருந்திருப்பான். அவள் உதட்டோரம் மந்தகாசமான புன்னகை நெளிந்தது.

ரஞ்சனியின் மூடிய கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் காதுக்குள் இறங்கியது.

"சே! இந்த ஆண்கள் ஏனிப்படி மோசமாய் வக்கிரம் பிடித்து அலைகிறார்கள்? வயிற்றுப் பாட்டிற்காக படிதாண்டி வேலைக்குப் போகும் பெண்களுக்கு மட்டும் ஏன் இத்தனை சிரமங்கள்? இந்த மாதிரியான கஷ்டங்கள் ஆண்களுக்கு ஏற்படுவதில்லையே. இப்படி அல்லல்பட்டு அலுவலகம் சென்று இன்று பலர் பேர் முன்னிலையில் காட்சி பொருளாய் அசிங்கபட யார் காரணம்? பெற்றவனும், உடன் பிறந்தவனும் ஒரு கணம் எங்களை நினைத்துப் பார்த்திருந்தால்.. இப்படியா அவஸ்தைப்படுவோம்? கோழைகள். தன் சுகமே பெரிது, தன் சோகமே பெரிதென நினைத்து எங்களை நட்டாற்றில் விட்டு விட்டு போனவர்களை நினைப்பது கூட பாவம்"

அந்த பொறுக்கி.. இன்று நேற்றல்ல.. பல மாதங்களாகவே அவளிடம் சேட்டைகள் செய்து கொண்டிருந்தான். அடிக்கடி இவள் போகும் பஸ்சில் ஏறி காமம் வழியும் கண்களோடு சாராயநாற்றத்தோடும் இவளை சீண்டிக் கொண்டிருந்தான். என்னதான் ரஞ்சனி படித்த, தைரியமான, சொந்தக் காலில் நிற்கும் பெண் என்றாலும், உண்மையில் அவள் இதயம் அனிச்ச மலர் போன்றது. இது போன்ற ரவுடியிடம் தன் தைரியத்தை காட்ட முனையவில்லை. அதனால் அவனின் வக்கிர உணர்வுகள் இன்னும் அதிகமாகும் என்ற மன இயலை அவள் அறிந்திருந்தாள்.

'ஆனால், இன்று யாரோ ஒரு இதயம் உள்ள மனிதன் அவளுக்காக ரத்தம் கசிய எதிர்த்திருக்கிறான். அவனை காவலில் அடைத்து வைத்தாலும் என்றாவது ஒரு நாள் வெளியே வரத்தானே போகிறான்? அப்போது அவனால் ஆபத்து ஏற்படாதா?'

'சே! நானும் எப்போது சுயநலக்காரியாக மாறினேன்? அவனால் எனக்கு மட்டுமா ஆபத்து? என்னை இக்கட்டில் இருந்து காப்பாற்றிய அந்த

வாலிபனுக்கும் அல்லவா சேர்த்தே ஆபத்து காத்திருக்கிறது!"

'ஆமாம்.. யார் அவன்? பெயர் என்ன? அவசரத்தில் எதையும் கேட்டுக் கொள்ளாமல் வந்து விட்டேனே. பஸ்ஸில் நூற்றுக்கணக்கான பேர்கள் பயணம் செய்தார்கள். அவர்கள் யாருக்கும் இல்லாத அக்கறை அவனுக்கு மட்டும் ஏன்? பெண்கள் மீது அந்தளவு மதிப்பு கொண்டவனா? இப்படியும் ஒரு ஆண் மகனா? இத்தனை நாட்களாக அதே ரூட்டில், அதே பஸ்ஸில் பயணம் செய்திருக்கிறேன். இதுவரை அவனை நான் பார்த்ததே இல்லையே'

அந்த களேபரத்தில் அவனை நிமிர்ந்து பார்த்தது ஓரிருமுறைதான் என்றாலும், டி.வி.யில் பார்ப்பதுப் போல் இப்போது கூட பசுமையாய் நினைவிற்கு வந்தான்.

நல்ல உயரம். ஆகிருதியான உடம்பு. கறுப்பு நிறம். ஆனாலும் தேக்கு மரம் போன்ற பளபளப்பு. வட்ட முகம். அதில் கோல்ட் பிரேமிட்ட ஸ்பெக்ஸ். பவருக்காகவா? பந்தாவுக்காகவா? அவனுக்கு கூடுதல் கம்பீரத்தை தந்தது நிஜம். பாவம் அந்த கண்ணாடி, கைகலப்பில் உடைந்து சிதறி விட்டது.

தலைகொள்ளா முடி. அலட்சியமாய் முன் நெற்றியில் அடிக்கடி விழுவதும், அதை அவன் ஒதுக்கி விடும் லாவகமும், நிஜமாகவே அழகு மூக்கின் இடது பக்கம் மச்சம் இருந்தது போல் கூட நினைவு.

ரஞ்சனி சிரித்துக் கொண்டாள். 'மச்சத்தை நினைவு கொள்கிற அளவுக்கா நான் முப்பாய் அவனை பார்த்தேன்?' வெட்கமாய் இருந்தது அவளுக்கு.

'மீண்டும் அவனை பார்ப்போனா?' இரவு முழுக்க அந்த கேள்வியே விஸ்வரூபம் எடுத்துக் கொண்டிருந்ததில் விடியலில்தான் இமைகள் ஒன்று சேர்ந்தன.

## 6

"ஹலோ.. அர்விந்த் ஹியர்"

"ஹேய்.. மணி அஞ்சாகுது. இன்னுமா ஆபீஸை விட்டு புறப்படலை?" அனிதா பதட்டமாய் கேட்டாள்.

"இல்லை. ஆபீஸ்ல ஒரு முக்கியமான மீட்டிங் இருக்கு. அட்டெண்ட் பண்ணியாகணும். தென், ஒரு வாரத்துக்கு நான் போகவேணாம்னு தோணுது"

"ஏன்.. ஏன்..?"

"கண்ணே.. உனக்கு பழிவாங்க மட்டும்தான் தெரியும். யோசிக்க தெரியாது. ஒரு பெண்ணை வீழ்த்தறது, ஏங்க வைக்கறது இதெல்லாம் ஆம்பளைங்களுக்கு கை வந்த கலை. நான் பத்த வச்சிட்டேன். புகைஞ்சுகிட்டிருக்கு. தினமும் தரிசனம் பண்ணினா, சப்புனு போய்டும். அவ என்னை அவளறியாமலேயே எதிர்பார்க்க தொடங்கிடுவா. திடீர்னு போய் எதிர்ல நிக்கப் போறேன். அந்த அதிர்ச்சி பளிச்சினு முகத்தில் தெரியும்"

"படவா.. ரொம்ப எக்ஸ்பீரியன்ஸோ?"

"எல்லாம் உன்கிட்ட படிச்ச பாடம்தான் கண்ணே''

"ஓக்கே.. வச்சிடவா?"

"ஏய்.. ஏய்.. இரு ஒன்னும் குடுக்காம வச்சா எப்படி? நான் உனக்காக ரத்தமெல்லாம் சிந்தியிருக்கேன். வெறும் பாலும், நெய்யுமா சேர்த்த ரத்தம் போச்சே"

"அதுக்குத்தான் வட்டியும் முதலுமா.. நேத்து உன்னை முந்த மழையிலேயே குளிப்பாட்டினேனே"

"இப்பவும் அடிப்பட்ட இடமெல்லாம் வலிக்குதே"

"ஏழு மணிக்கு வீட்டுக்கு வா.. ஒத்தடம் தர்றேன்"

"ஹோய்யா.. தாங்க்யூ டார்லிங்.. ஸீ யூ"

ரிசீவரை அதன் தலையில் வைத்து விட்டு கண்களை மூடி சிரித்தான்.

ஆபீஸ், ஆபீஸ் என்ற மெக்கானிக்கல் லைஃப் அவனுக்கே கொஞ்சம் போர் அடித்தது. நல்லவேளை அனிதா ஒரு நல்ல பொழுது போக்கிற்கு வழிகாட்டி விட்டாள். டென்னிஸ் விளையாடுவது போல், பாருக்கு போவது போல், சீட்டாடுவது போல், ரஞ்சனியை காதலிப்பது போல் நடிப்பதும் ஒரு டைம் பாஸிங்தானே? அர்விந்தனின் பணக்கார இதயம் அப்படித்தான் எண்ணியது.

மழை விசிறி விசிறி அடித்துக் கொண்டு இருந்தது. தொப் தொப் பென்று கல்லெறிவது போல் கன மழை. காற்றும் சுழன்றடித்துக் கொண்டிருந்தது. காலையில் வரும்போதே அடித்த காற்றில் குடை மேலே மடங்கி எலும்பு கூடாகி விட்டிருந்தது. மழை நிற்கட்டும் என்று ஆபீஸ் வாசலிலேயே அரை மணி நேரமாய் காத்துக் கொண்டிருந்தாயிற்று. 'ராதிகா வேறு பாவம்.. தனியாக இருப்பாள். பேசாமல் மழையை பொருட்படுத்தாது இறங்கி நடந்து விடலாமா? இங்கிருந்து பத்து நிமிட தொலைவில் தான் பஸ் ஸ்டாண்ட். அதற்குள் தெப்பலாய் நனைந்து விடுவேனே! இன்றைக்குப் பார்த்து மெல்லிய ஷிபான் சேலை கட்டி வந்திருக்கேன். என்ன செய்யலாம்? கிட்டத்தட்ட ஆபீசிலிருந்து எல்லோரும் போய் விட்டார்கள். வேறு வழியில்லை. இறங்கி நட!' மனம் கட்டளையிட இறங்கினாள். ஒரே கணம்தான் சேலை உடம்போடு ஒட்டிக் கொண்டது. விறுவிறுவென நடக்க ஆரம்பித்தாள்.

"சர்ரக்.." உரசிக் கொண்டு வந்து நின்றது டாடா சியரா! முன் கதவை திறந்து வைத்தபடி உதடில் சிரிப்பை தவழ விட்டான் ரகு.

"மிஸ்.. ரஞ்சனி.. கெட் இன்"

"நோ.. நோ தாங்க்ஸ் சார். நான் நடந்தே போய்டுவேன். பஸ் ஸ்டாண்ட் பக்கத்திலேதான்"

"இந்த மழையில பஸ் கிடைக்கிறதே கஷ்டம். ரோடெல்லாம் தண்ணீர் வெள்ளம் போல ஓடிக்கிட்டிருக்கு. யோசிக்க நேரமில்லே. ரொம்ப நனைஞ்சிட்டீங்க பாருங்க.. ஏறுங்க முதல்ல.."

"இல்ல சார்.. நான் வந்து.."

"எதுவாயிருந்தாலும் காருக்குள்ளே ஏறிட்டு பேசுங்க ப்ளீஸ்.."

எம்.டி. ஸ்தானத்தில் இருப்பவன், கெஞ்ச அதற்கு மேல் மறுக்க முடி

யாமல் ஏறி அமர்ந்தாள். கோழி குஞ்சாய் சுருண்டு. ஒதுங்கி கதவோரம்
ஒண்டிக் கொண்டாள்.

ரகு ஓரக்கண்ணால் அவளை அளந்தான். அவளின் பொங்கும்
இளமை, நனைந்து விட்டிருந்ததில் பளிச்சென்று கண்களை அறைந்தது
ரகுவுக்குள் சூடேறியது.

ரஞ்சனிக்கு அவனின் பார்வை பயத்தை உற்பத்தி செய்தது.

"சார்.. என்னை பஸ் ஸ்டாண்ட்லயே இறக்கி விட்ருங்க"

"நோ.. நோ.. இன்னைக்கு நீங்க பஸ்ல போக வேணாம். நானே உங்க
வீட்ல ட்ராப் பண்ணிடறேன்"

"வீட்டுக்கா?" திகைப்பாய் அவனை பார்த்தாள். அவளின் மருண்ட
விழிகளும் ஈர உதடுகளும் பளபளவென மின்னின. ரகுவுக்குள் தகித்தது.

"ஏன் வரக் கூடாதா? அதுக்கு முன்னே.. பக்கத்திலேதான் என்னோட
பங்களா ஒன்னு இருக்கு. ப்ரண்ட்ஸ்ங்க யாரும் வந்தா அங்கேதான் தங்க
வப்பேன். ரொம்ப நனைஞ்சிட்டீங்க.. துவட்டிக்கிட்டு போய்டலாம்"

"ச.. சார்.. பங்களாவுக்கா? வே.. வேணாம் சார்! என் தங்கச்சி வீட்ல
தனியா.. நான் இன்னும் வரலியேன்னு காத்துக்கிட்டு இருப்பா.. நான்
உடனே போயாகணும்" படபடத்தாள்.

"போகலாம்.. போகலாம்.." அவன் சொல்லிக் கொண்டிருக்கும்
போதே கார் ஒரு மினி பங்களா முன் உறுமிவிட்டு நின்றது.

'எதற்காக இங்கு அழைத்து வருகிறான்? ஏதாவது உள்நோக்கத்
தோடு..' அவளை யோசிக்க கூட விடாமல் இறங்கி காரின் கதவை திறந்து
பிடித்தான்.

"இறங்குங்க ரஞ்சனி"

'இவன் பார்வையே சரியில்லையே.. இதென்ன புது வம்பு?'

"பாருங்க.. உங்களால நானும் எப்படி நனைஞ்சுக்கிட்டிருக்கேன்?"
கவர்ச்சியாய் சிரித்தபடி கேட்டான். ஜுரமே வரும்போல் பயத்தில் கிடு
கிடுத்தது ரஞ்சனிக்கு. ரகு பின்னே ஆட்டுக்குட்டியாய் தொடர்ந்தாள்.
லாக்கை விடுவித்து கதவை திறந்து ஸ்விட்ச்சை போட்டதும் இருள் ஓடி
ஒளிந்து கொண்டு.. அழகான நாகரீகப் பெண்ணாய் மின்னியது வீடு.
ஸோபா.. கார்ப்பெட், ப்ரிட்ஜ், டி.வி., டெக், இரண்டு பெட்ரூம், மாடியிலும்
அறைகள் இருக்குமோ? ஏதோ ஒருவித லாவண்டர் மணம் காற்றில் மிதந்து
வந்தது. சுவர்களில் மாடர்ன் ஆர்ட் ஓவியங்கள். நட்ட நடு ஹாலில் பளிங்
கில் நிர்வாணப் பெண். பார்க்கவே கூசியது ரஞ்சனிக்கு.

கப்போர்ட்டை திறந்து ஒரு டவலை எடுத்து அவளிடம் நீட்டிய
வனின் கண்கள் அவள் வனப்பு பகுதியை இமைக்காமல் பார்த்தது.

"துவட்டிக்க ரஞ்சனி" என்று விட்டு ஒரு அறையில் நுழைந்தான்.

கோபம் ஒரு பக்கமும், பயம் ஒரு பக்கமுமாய் டவலால் துடைக்க கூட
பிடிக்காமல் சோபாவில் அமர்ந்தாள்.

'வந்தது தப்பு. அவன் கெஞ்சினான் என்று காரில் ஏறியது பெரிய
தப்பு. எதற்காக ட்ராப்பண்ணுகிறேன் என்று இங்கு அழைத்து வந்தான்?
கதவு திறந்தேதான் இருக்கிறது ஓடி விடலாமா?'

"என்ன அப்படியே உக்கார்ந்திருக்கே ரஞ்சனி? ஈரத்தோட இருந்தா..

ஃபீவர் வந்துடாதா? அந்த ரூம் கப்போர்ட்ல சாரீஸ் இருக்கு– டிரஸ் சேஞ்சு பண்ணிக்க..." ரகுவின் குரலில் இருந்த கரகரப்பு. அழைப்பில் ஒருவகை. மார்பு சட்டையின்றி பளீரென்று தெரிய, பொசு பொசுவென்ற ரோமங்களின் நாயகியாய் விரல் தடிமனுக்கு தங்க சங்கிலி புரண்டுக் கொண்டிருந்தது. லுங்கியில் இருந்தான். கண்களில் சிகப்பு. பசியின் தவிப்பு. சுவாசத்தில் ஆல்கஹால்.

ரஞ்சனிக்கு அந்த மழையிலும் வியர்த்தது.

"சார்– எனக்கு நேரமாகுது– நான் போகணும்"

"போகலாம்... என்ன அவசரம் ரஞ்சனி? நான் எதுக்காக உன்னை இங்கே கூட்டிட்டு வந்தேன் தெரியுமா? உன்கிட்ட பர்ஸனலா பேசணும். நீ எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா? ஃபாரின்ல எத்தனையோ பொண்ணுங்கள பார்த்திருக்கேன். வெள்ளை வெளேர்னு திறந்து போட்டுக்கிட்டு திரிவாளுங்க. ஆனா மூடிவச்சே என்னை நீ கொல்றே ரஞ்சனி... ஐ– லைக் யூ. கமான் ரஞ்சனி.. கிட்டே வா!"

"சா... ர்!" வெருண்டுப் போனாள் ரஞ்சனி.

அவளை நெருங்கி வந்தான்.

"பதட்டத்துல உன் லிப்ஸ் துடிக்கிற அழகு இருக்கே... ஃபென்டாஸ்டிக்... நீ ஏன் ஏழையா பிறந்து தொலைச்சே ரஞ்சனி?"

"சா...ர்!" பின்வாங்கினாள்.

"பணக்காரியா பிறந்திருந்தா... உன்னை என் பத்தினியா ஆக்கியிருப்பேன். ஆனாலும் உன்னை என்னால அவாய்ட் பண்ண முடியல. எனக்கு நீ வேணும். நான் ஆசைப்பட்டது கிடைச்சாகணும். எங்கப்பன் ஒரு பணக்கார பொண்ணை பார்த்து வச்சிருக்கான். இன்னும் ஏழெட்டு மாசத்துல கல்யாணமாம். என்னைப் பொறுத்தவரைக்கும் அது ஒரு சம்பிரதாய சடங்கு என் மனசுல நீதான் இருக்கே ரஞ்சனி. எனக்கு நீ வேணும். கன்டிப்பா வேணும். இந்த வீட்டை உன் பேர்ல எழுதி வச்சுடறேன். பாங்க்ல இருபது லட்சம்... ட்வென்ட்டி லாக்ஸ்... போட்டுர்றேன்... நீ எப்பவும், நிரந்தரமா என் கூடவே இரு. உன்னை ராணி மாதிரி வச்சுக்கறேன் ரஞ்சனி"

திகைத்துப் போய் சொல்ல வாய் வராமல், நின்றவளை பார்க்க பார்க்க வெறி கூடியது ரகுவுக்கு. சற்றும் எதிர்பாராத ஒரு கணத்தில் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

ரஞ்சனியின் பெண்மை விழித்துக் கொண்டது. ஆவேசமாய் அவனை தன் பலத்தையெல்லாம் திரட்டி தள்ளி விட்டாள்.

"த்தூ! நீயெல்லாம் ஒரு ஆம்பிளையா? ஏதேதோ பேசி இங்கே கூட்டிட்டு வந்து வியாக்கியானமா பேசறே? ஏழைன்னா... அவ்வளவு இளப்பமா போய்டுச்சா உனக்கு? பணக்கார ரத்தம். ஆணுங்கற திமிர். என்ன வேணா லும் பண்ணுவீங்க. நாங்களும் இழுத்த இழுப்புக்கெல்லாம் வரணும். அப்படித்தானே? ஒன்னை மட்டும் புரிஞ்சுக்க. நாங்க ஏழைங்கதான். ஆனா, பணத்துக்காக மானத்தை இழக்கிற வேசியில்லே. எங்க ரத்தத்துல தன்மானமும், பண்பும் சேர்ந்தேதான் ஓடுது. பணம் காட்டி மயக்க பார்த்தியா? பணம்தான் பெரிசுன்னா... அன்னைக்கு சம்பளம் உயர்த்தி ஓட்டல்ல வேலைய மாத்தினப்பவே ஒத்துக்கிட்டிருப்பனே... அதுல இருந்தாவது புரிஞ்சுக்க வேணாம்... நான் இரும்புனு? எங்களுக்கு தாலி இருந்தா போதும்.

பங்களா வேணாம். புருஷன் மனசுல பாசமிருந்தா போதும். [illegible] பணம் வேணாம். எல்லா பொண்ணுங்களையும் ஒரே மாதிரி எடை போடாதே! அது அதுக்குன்னு இருக்கிற பரிதாபப் பிறவிங்ககிட்ட பணத்தை கொட்டி அழு பழிக்கவேண்டா! எதுக்காக என்னை மாதிரி குடும்ப பொண்ணுங்க கிட்டே வாலாட்றே! பார்க்க ஊமையாட்டம் இருக்கா.. தொட்டா.. வெளில சொல்ல மாட்டாங்கற தைரியமா? என் உடம்பை நெருப்புக்கு தர்றதுக்கு முன்னாடி உன்னை நாறடிச்சிட்டுத்தான் போவேன். சாப்பிடவும், உடுத்தவும் வக்கில்லாம போனா.. ஒரு முழ கயிறோட போவோமே தவிர. இப்படி வப்பாட்டியா உன் ஆசை தீயை அணைக்க கட்டில்ல வந்து படுத்துக்க மாட்டோம். பணமாம் பணம். அதை ஒழிச்சி இன்னு பசியாத்திக்க முடியுமா உன்னால? ச்சே! என்கிட்டே என்ன இருக்கோ.. அதுதான் உன்னை கட்டிக்க போறவ கிட்டேயும் இருக்கு. அவளுக்கு விசுவாசமா இரு. இல்லன்னா.. அவளும் இப்படி வேற ஆம்பளைகிட்டே, வீடு எழுதி வைக்கிறேன். பணம் தர்றேன் வந்து படுத்துக்கன்னு பேச சந்தர்ப்பம் கொடுத்திடாதே. இப்பல்லாம் கண்ணுக்கு முன்னால.. முற்பகல் செஞ்சா, முற்பகலிலேயே விளையுது"

ஒவ்வொரு வார்த்தையும் ஆணியில் வைத்து அடித்தது போல் இதயத்தில் இறங்கியது ரகுவுக்கு. வெளியே சீறும் புயலுக்கு சமமாய் ரஞ்சனியும் கிளம்பி போய் விட்டாள். போதை இருந்த இடம் தெரியவில்லை. இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்ட ரகுவினுள்ளிருந்த காம பிசாசு கொஞ்சம், கொஞ்சமாய் செத்துக் கொண்டிருந்தது.

ஏன் ரஞ்சனி இப்படி நனைஞ்சிருக்கே? குடை எடுத்துட்டுப் போனியே?"

"மழையை எதிர்க்க குடைக்கு பலமில்லாம போயிடுச்சு" அர்த்த பாவனையுடன் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

"வரும் போது கத்தரிக்காயும், கேரட்டும் வாங்கிட்டு வரச் சொன்னேனே.. மறந்துட்டியா?" சூடான டம்ளரை அவளிடம் நீட்டினாள் ராதிகா.

"ஸ்ஸ்.. மறந்துட்டேனே! வரும்போது ஆட்டோவுலதான் வந்தேன். பஸ்ல வந்திருந்தா பஸ் ஸ்டாண்ட் பக்கத்திலேயே மார்க்கெட், ஞாபகம் வந்து வாங்கியிருப்பேன்"

"அப்புறம்.. வந்து.. தரகர் வந்துட்டுப் போனார்"

"அட... எப்ப? என்ன சொன்னார்?"

"பகல்ல வந்தார். ஏதோ ஒரு வரன் வந்திருக்காம். ரெயில்வேல [illegible]னார்க்காம். என்னைப் பத்தி தெரிஞ்சும். போட்டோவ பார்த்தே சம்ம[illegible]ம்னு சொல்லிட்டாங்களாம். பத்து பவுனாவது செய்யணும்னு அவங்[illegible]ம்மா கண்டிஷனா சொல்லிட்டாங்களாம். இது ஆடி மாசம்ங்கறதனால ஆவணியில வந்து பேசிக்கறாங்களாம்" முகம் நிலம் நோக்க.. டம்ளர் [illegible]கயில் உருள.. மெதுவாய் அந்த விஷயத்தை சொல்லி முடிப்பதற்குள் [illegible]ாதிகாவின் முகத்தில்தான் எவ்வளவு நாணம்!"

"அடேயப்பா! டீச்சர் நடத்தற பாடம் மண்டையில ஏறலைன்னு [illegible]ன்பதாவதிலேயே கோட் அடிச்சவ.. கல்யாண விஷயம்னதும்.. என்ன [illegible]ழகா அட்சரம் பிசகாம ஒப்பிக்கறே.. ஏய் திருடி.. வெக்கத்தைப்

பாரேன்!"

"ச்சீ- போடி- நான் ஒண்ணும் கல்யாணத்துக்கு அலையலே.."

"யாரு- நீ! நம்ப சொல்றியா? என்னை ஏமாத்தாதே உன் கற்பனை ஹீரோ போல கார்ல ஏத்திக்கிட்டு போகாவிட்டாலும் அதை விட பெரிய வண்டியில ஏத்திக்கிட்டு போவாராக்கும். தெரியுமில்லே. ரெயில்வேல ஒர்க் பண்றவரோட குடும்பம். ஃப்ரீயா ட்ரெய்னல ஜர்னி பண்ணலாம். ஹனிமூனுக்கு தனி கூபேதான்"

"பாரு- இப்படியெல்லாம் கிண்டல் பண்ணிட்டிருந்தே- நான் நைட்டுக்கு சமைக்கவே போறதில்லே.."

"இப்பவே கல்யாண களை வந்தாச்சு உனக்கு".

"ஐயோ.. பாரேன் இவளை?" சிணுங்கினாள் ராதிகா.

"யார்கிட்டே சொல்றே? அம்மா இன்னும் வரலை. அவர் வந்து எங்கேயாவது ஒளிஞ்சிட்டிருக்காரா?"

"உன்னை.." மூலையில் சார்த்தி வைத்திருந்த பிரம்பை கையில் எடுத்துக் கொண்டு- ரஞ்சனியை அந்த சின்ன அறையில் விந்தி விந்தி ஓடிஓடி விரட்டினாள் ராதிகா. இரண்டு நிமிடங்கள்தான். கண்களில் நீர் கோர்க்க நின்று விட்டாள்.

"என்னடி?"

"என்- என் காலை பார்த்துட்டு வேணாம்னு சொல்லிடுவாங்களா ரஞ்சனி?"

"ச்சே- ச்சே- உனக்கென்னடி குறைச்சல்? ராஜாத்தி மாதிரி இருக்கே! தெரிஞ்சுதானே ஒத்துக்கிட்டாங்க. என்ன கொஞ்சம் கூடுதலா நகை, நட்டு போடுங்கன்னு கழுத்தை இறுக்குவாங்க. நான் இல்லையா ராதிகா. என் தலைய அடகுவச்சாவது உனக்கு நான் செய்றேண்டி." அவளை குழந்தையாய் தன் மார்பில் வைத்து அணைத்து அன்பாய் அவள் தலையை கோதி விட்டாள் ரஞ்சனி.

ரகு தன்னிடம் அப்படி முறைகேடாய் நடந்து கொண்ட விஷயத்தை பற்றி வாயே திறக்கவில்லை. அப்படிப்பட்ட காமுகனிடம் வேலை செய்வதே தவறு. நாளையே ரிசைன் பண்ணிவிட்டு வேறு வேலையை தேட வேண்டும் என்று நினைத்தவள். அந்த நினைப்பை இப்போது கைவிட்டாள். ராதிகாவுக்கு நல்லதொரு வாழ்க்கை தேடி வந்திருக்கிறது. இந்த நேரத்தில் வேலையை விடுவது முட்டாள்தனம். அப்படியே ரிசைன் பண்ணி விட்டு அம்மா வேலை பார்க்கும் அந்த முதலாளி மூலம் எப்படியாவது ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்து விடலாம்தான். ஆனால் அவனும் பணக்காரன். ரகுவிடம் உள்ள குணங்கள் அவனிடமும் இருக்காது என்பது என்ன நிச்சயம்? அதிலும் அவன் ரகுவுக்கு நண்பன் என்றும் பிஸினஸ் பார்ட்னர் என்றும் காதில் செய்தி விழுந்திருக்கிறது. வேறு வழியில்லை. ராதிகாவுக்காகவாவது நான் ரகுவிடம் வேலை செய்துதான் ஆக வேண்டும்.

ஒருவேளை- அவன் ஆசைக்கு இணங்கவில்லை என்று என்னை டிஸ்மிஸ் செய்வானோ? இருக்காது. கம்பெனி ரூல்ஸ்படி எந்தவித தவறும் செய்யாத என்னை ரகுவால் தூக்கியெறிய முடியாது. நானாக விலகினால்

தான் உண்டு.

ராதிகா திருமணத்திற்காக ஆபீஸில் லோன்போட வேண்டிவரும். அம்மா பத்தாயிரத்திற்கு மாத ஏல சீட்டு போட்டு வைத்திருக்கிறாள். அப்படி இப்படி என்று பார்த்தாலும் கொஞ்சம் கடன் வாங்க வேண்டி வரும். அவன் மனம் கல்யாண கணக்குப் போட்டுக் கொண்டிருக்க, மாலையில் நடந்த அந்த நிகழ்ச்சியின் தாக்கத்தை இந்த மகிழ்ச்சி அமிழ்த்தி விட்டிருந்தது.

"உங்களை எம்டி. கூப்பிட்றார் மேடம்"

இப்படியொரு அழைப்பை எதிர்பார்த்தவளாய் ரஞ்சனி அலட்டிக் கொள்ளாமல் சென்றாள்.

"மே.. ஐ.. கமின் சார்"

"ப்ளீஸ்.. கம்"

ரகுவின் முகம் இறுகிக் கிடந்தது. அவளை நிமிர்ந்தே பார்க்காமல் பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டிருந்தான். அவனே பேசட்டும் என்று.ரஞ்சனியும் அமைதி காத்தாள்.

"நா.. நான் ரொம்ப வெக்கப்படறேன் ரஞ்சனி"

"– –"

"நா.. அப்படி நடந்துக்கிட்டது எவ்வளவு கேவலமான செயல்னு புரிஞ்சிக்கிட்டேன்.."

"– –"

"நீங்க சொன்னது போலவே.. ஏழைகளை மிக எளிதாக பணத்தால் விலைக்கு வாங்கிட முடியும்னுதான் நான் தப்பான அபிப்ராயம் வச்சிருந்தேன். இன்ஃபாக்ட் அப்படி வாங்கியுமிருக்கேன். ஆனா, அஞ்சு விரலும் ஒரே மாதிரி இல்லேன்னு புரிய வச்சிட்டீங்க"

"– –"

"பணம், பணம், பணம்! இதைத்தவிர, வேற எதுவும் பெரிசா தெரியல. சின்ன வயசிலேயே தாயோட அன்பை இழந்தவம் நான். என்னுடைய வெறுமையை, ஏக்கங்களை அப்பா பணத்தாலேயே நிரப்பிட்டார். பணத்தாலே இந்த உலகத்தையே விலைக்கு வாங்கிட முடியும்ங்கற இறுமாப்பு கூடவே வளர்ந்தது. நான் தொட நினைச்ச பொண்ணுங்களை, எளிதாக என்னால தொட முடிஞ்சது. காரணம் பணம்தான். நீ பேசிய வார்த்தைகள் என் இதயத்தை கிழிச்சிட்டது ரஞ்சினி. நிஜமாகவே என் அம்மா உயிரோடிருந்திருந்தா, அவ என்னை ஒரு ஒழுக்கமுள்ள பிள்ளையாதான் வளர்த்திருப்பா. ஐ'ம் ஸாரி ரஞ்சனி. ரியல்லி ஐ'பீல் வெரி ஸாரி. இந்த சம்பவத்தை நான் உடனடியா மறந்தாகணும்.. அதுக்கு நீங்க எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணனும்" முற்றிலும் புதிய ரகுவாய், செய்த தவறுக்கு வருந்தி, சோகம் இழையோடும் குரலுமாய் பார்க்க ரஞ்சனிக்குள் அவனைப் பற்றிய நம்பிக்கை நீரூற்று பீறிட்டு அடித்தது.

'அப்பர்.. மாறி விட்டான். அது போதும்'

"சொல்லுங்க சார்"

"உங்களைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குள் உறுத்தும் ரஞ்சனி.

ஷோ, உங்களை ப்ரொடக்ஷன் டிபார்ட்மெண்ட்ல சூப்ரின்டெண்ட்டா மாத்தியிருக்கேன். யூ நோ– அது இதே பில்டிங்ல தேர்ட்– ஃப்ளோர்ல இருக்கு"

"ஐ- நோ– சார்! பட், எதுக்காக இந்த ப்ரமோஷன்?"

"அதான் சொல்லலேனே அந்த காரணம்தான். அது மட்டுமில்லே என்னை ஒரு மனுஷனா மாத்தினதுக்கும்தான். வேற எந்த தப்பான அர்த்தத்திலேயோ, எதிர்பார்ப்புலேயோ, இல்லை– பிளீஸ் பீ!"

"ஓக்கே சார்! தாங்க்யூ ஸோ மச்! நடந்ததை நான் மறந்துட்டேன். நீங்களும் மறந்துடுங்க"

"தாங்க்யூ மிஸ் ரஞ்சனி" ரகுவின் முகத்தில் நிம்மதி பரவியது.

அன்று மாலை அந்த சந்தோஷத்துடனே பஸ் ஸ்டாண்டுக்கு வந்தவளின் விழிகள் ஆச்சர்யத்தில் காதளவு விரிந்தது.

## 7

பஸ் ஸ்டாண்டில் கூட்டத்தோடு கூட்டமாக கைகளை மார்புக்கு குறுக்காக கட்டிக் கொண்டு நின்றிருந்தான் அர்விந்தன். ரஞ்சனி வருவதை தூரத்தில் இருந்தே பார்த்து விட்டான் என்றாலும், அவளை பார்க்காதவன் போல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

'அவன்தானா? வேற யாரோவா? முகத்தை அந்த பக்கம் திருப்பியிருக்கிறான். அந்த உயரமும், தலைமுடியும் அவன் போலவே இருக்கிறது. எப்படியாவது அவனிடம் நாலுவார்த்தை பேசி நன்றி சொல்ல வேண்டும்.

"எக்ஸ்க்யூஸ்மீ– சார்"

"அ–என்– மேடம்" புதிதாய் பார்ப்பவன் போல் திரும்பி அவளைப் பார்த்தான்.

'என்னைத் தெரியவில்லையா? பத்து நாட்களில் மறந்து விடுமா? மறக்கக்கூடிய வகையிலா சந்திப்பு நிகழ்ந்தது?' லேசாய் ஏமாற்றம் மனதை கவ்வ– மெலிதான புன்னகையை முகத்தில் படரவிட்டாள்.

"டு- யூ- ரிமெம்பர் மீ?"

"ம்–" யோசிப்பதுப் போல் நடித்தவன் பளீரென சிரித்தான்.

"ஓ– நீங்களா? ஐ'ம் சாரி– சட்டுன்னு நினைவுக்கு வரலை"

"அப்படியா? அப்புறம் அந்த ரவுடி என்ன ஆனான்?"

"கம்பி எண்ணிட்டிருக்கான்–"

"தாங்க்யூ சார். அன்னைக்கு நீங்க மட்டும் இல்லேன்னா அவனோட தொந்தரவு இன்னும் நீடிச்சிருக்கும்"

"பயப்படாதீங்க. அவனால இனிமே உங்களுக்கு எந்த தொந்தரவும் இருக்காது"

"அடிபலமா பட்டுருச்சா? காயமெல்லாம் ஆறிட்டதா?"

"ம்– சரியா போய்டுச்சுங்க"

"எல்லாமே என்னால்தானே?"

"நீங்களா அடிச்சீங்க?" என்றவன் கடகடவென சிரித்தான். பளீரிடும் பற்கள். அடர்ந்த மீசை. சிரிக்கும் போது இடது கன்னத்தில் லேசாய் குழி விழுந்தது. கருவண்ண மேகத்தில் இருந்து எட்டிப் பார்க்கும் நிலவின் ஞாபகம்தான் வந்தது ரஞ்சனிக்கு.

"என் ஆயுசுல.. நான் கால் தடுக்கிக் கூட கீழே விழுந்ததில்லே..அன்னைக்குதான் முதமுதலா என் ரத்தத்தை என் கண்ணால பார்த்தேன்"

கஷ்டமாகி விட்டது ரஞ்சனிக்கு.

"நினைக்கவே வருத்தமா இருக்கு நீங்க ஏன் சார் அவனோட சண்டைக்குப் போனீங்க? வயித்து பாட்டுக்குன்னு சம்பாதிக்க படிதாண்டி காலெடுத்து வச்சிட்ட பிறகு இந்த மாதிரி பிரச்சினைகளை சந்திச்சிதானே ஆகணும்? பல மாதங்களாகவே அவனால எனக்கு தொந்தரவுதான். சகிச்சிகிட்டிருந்தேன். அப்படியே நாட்களை கடத்திட்டு இருப்பேன். நீங்க ஏன் அவனோட மல்லுக்குப் போனீங்க? பாருங்க உங்களுக்கும் கஷ்டம். எனக்கும் கஷ்டம்"

"சேச்சே.. நான் சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னேன். ஆமா, நீங்க எங்கே ஒர்க் பண்றீங்க?" அர்விந்தன் கேட்டான்.

"பஸ் ஸ்டாண்ட்ல வேணாம். பக்கத்திலே ஒரு ஹோட்டல் இருக்கு ஒரு காபி சாப்பிடலாமா?" ரஞ்சனிதான் கேட்டாள். அவளுக்கே ஆச்சரியம் தாளவில்லை. எப்படி வந்தது இந்தளவு தைரியம்? அதிகம் அறிமுகமில்லாத ஒரு வாலிபனை காபி சாப்பிட ஹோட்டலுக்கு அழைக்கிறேனே. என்னைப் பற்றி அவன் என்ன நினைப்பான்?"

'வார்ரே.. வா! பட்சிமாட்டிக்கிட்டது!' அர்விந்தன் மனது கும்மாளம் போட்டது.

"வாங்க..!" அவளோடு இணையாக நடந்தான்.

"என் பேரு ரஞ்சனி"

"ஐ'ம் கோபி!"

"நான் இங்கேதான் பக்கத்திலே செலக்டிவ் இன்டர்நேஷனல்ல சூப்ரின்டென்ட்டா வொர்க் பண்றேன்"

'அட.. நம்ம பார்ட்னர் ரகு கம்பெனியிலேதானா?'

"வெரிகுட்! நான்.. நான் ஆட்டோமொபைல் வொர்க்ஷாப் வச்சு நடத்திட்டிருக்கேன்"

"எங்கே, இதே ஏரியாவிலேயா?" என்றாள் ஆர்வமாய்.

"இ- இல்லே. தேனாம்பேட்டையில!" சரளமாய் ரீல் விட்டான்.

"குடும்பம்?"

"அம்மா மட்டுந்தான். கள்ளக்குறிச்சி கேள்விப்பட்டிருக்கீங்க இல்ல. அதுதான் எங்க கிராமம். அம்மா அங்கதான் இருக்காங்க. நான் இங்கே லாட்ஜிலதான் தங்கியிருக்கேன்"

"ஹோட்டல் சாப்பாடு கஷ்டமாயில்லையா?"

"அதை ஏன் கேக்கறீங்க? பயங்கர வேதனைங்க. அம்மா கூட வாரத்துக்கு மூணு லெட்டர் எழுதுவாங்க. சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கோடா.. ஓட்டல் சாப்பாடை சாப்பிட்டு உடம்பை கெடுத்துக்காதே

டான்னு.."

"அம்மா.. நல்லதுக்குதானே சொல்றாங்க"

"அது சரிதாங்க.. என் டேஸ்ட்டுக்கு ஒத்துவர்ற பொண்ணா கிடைக் கணுமில்லையா?"

"இதுவரைக்கும் அப்படி யாரும் உங்களை கவரலியா?"

"ஒரே ஒருத்தி எனக்குள்ளே புகுந்து ஆட்டி படைச்சிட்டிருக்கா. ஆனா அவளுக்கும் என்னை பிடிக்கணுமே"

'இவன் யாரையோ காதலிக்கிறான்' அந்த எண்ணமே அவளை துவண்டு போக செய்து விட்டது. சடுதியில் கருதி குறைந்து போன அவள் முகத்தை அவன் காணத் தவறவில்லை.

"நீங்கதான். ரொம்ப தைரியசாலியாயிற்றே. கேட்டுப் பார்த்துடுங்க"

"என்னங்க நீங்க? வீரத்துல தைரியம் இருக்கலாம். ஒரு பொண்ணுக் கிட்ட மனசை திறந்துக் காட்ட தைரியம் வரணுமே! அப்புறம் அவ பிடிக் கலைன்னு சொல்லிட்டா.. அதை தாங்கிக்கற சக்தி எனக்கில்லைங்க"

'இவனைக்கூட பிடிக்கலைன்னு ஒரு பெண்ணால சொல்ல முடியுமா என்ன? யாரந்த அதிர்ஷ்டகாரப் பெண்?" கேட்டாள்.

"இப்ப கேக்காதீங்க. அவகிட்டே கேட்ட பிறகு நானே சொல்றேன்"

பேச்சை மாற்ற எண்ணி, "காபி சாப்பிடுங்க.. ஆறிப் போகுது" ரஞ் சனி காபி டம்ளரை கையில் எடுத்தாள்.

அர்விந்தனுக்கு அந்த ஹோட்டலின் அட்மாஸ்பியரே பிடிக்க வில்லை. சுவர் முழுக்க எண்ணெய் பிசுபிசுப்பு. சரியாய் துடைக்கப்படாத டேபிளின் மேல் கை வைக்கவே அருவருப்பாய் இருந்தது. டம்ளரில் 'இது கிருஷ்ணா கபேயில் திருடப்பட்டது' என்று பொறிக்கப்பட்டிருந்தது. ரஞ் சனி எந்த அருவருப்பும் இல்லாமல் குடித்துக் கொண்டிருந்தது அவனுக்கு ஆச்சர்யமாய் இருந்தது.

"என்ன சார், குடிக்கலியா? காபி அப்படியே இருக்கு.

"எ.. எனக்கு காபி பழக்கமில்லே.. பால்தான் குடிப்பேன்"

"குட் ஹாபிட்! ஏன் சார் முன்னாடியே சொல்லலை? சர்வர் இங்கே வாப்பா! ஒரு பால்.."

"நோ.. நோ.. வேண்டாங்க.." சர்வரின் அழுக்கான உடையைப் பார்த்துக் கொண்டே கூவினான்.

"கிளம்பலாம்.. இங்கே என் ஃப்ரண்ட் ஒருத்தரைப் பார்க்க வந்தேன். அடிக்கடி வருவேன். சந்தர்ப்பம் கிடைக்கும் போது சந்திப்போம்" என்றபடி காபிக்கு பணம் தர நூறு ரூபாயை எடுத்தான்.

"ஐயோ.. என்ன சார் நீங்க? காபி சாப்பிடக் கூப்பிட்டதே நான்தான். அதுவும் நீங்க காபி கூட சாப்பிடலை. நீங்க பணம் குடுத்தா, என்ன அர்த் தம்?"

"நமக்குள்ளே எந்த ஃபார்மாலிட்டியும் வேண்டாம்னு அர்த்தம்" புன் னகை பூக்க, அர்த்தமுள்ள பார்வையை வீசினான்.

ரஞ்சனியால் அவனை புரிந்துக் கொள்ளவே முடியவில்லை. 'அந்த பார்வை நெருங்கி வருவது போலவும் இருக்கிறது. விலகி நிற்பது போலவும்

இருக்கிறது. அவன் பேச்சை வைத்தும் எதையும் புரிந்துக் கொள்ள முடிய வில்லை. தன்னைப் பற்றிச் சொன்னவன், என்னைப் பற்றி குடும்பத்தைப் பற்றி கேட்டு தெரிந்துக் கொள்ளக் கூட ஆர்வம் காட்டவில்லை என்றால் என்ன அர்த்தம்?"

'இதென்ன, இதற்குப் போய் நான் இப்படி கவலைப்படுகிறேன். அவன் சரிவர என் முகத்தைப் பார்த்துக் கூட பேசவில்லை. நானோ அவன் முகத்தை விட்டு பார்வையை இப்படி அப்படி திருப்பவில்லையே. என்ன காரணம்? என்னையறியாமல் என் மனம் இவனை நாடுகிறதா? இவன் அன்பிற்காக ஏங்குகிறதா? இது தப்பில்லையா? காதலா? எனக்குள்ளா?

ஏன்.. என்ன தப்பு? இவன் உன் மானத்தை காத்தவன். நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவன். உன்னைப் போன்ற பெண்களின் கஷ்ட நஷ்டங்களை புரிந்தவன்.

'அது சரி.. ஆனால் இவனுக்கு என்னை பிடித்திருக்கிறதா?'

'அதுதான் எனக்கும் சந்தேகம்' மனசாட்சியும் விடை தெரியாமல் ஓரங்கட்டி உட்கார்ந்து விட்டது.

"அப்புறம்?" அனிதா சுவராஸ்யமாய் இரண்டு கைகளையும் கன்னத்தில் தாங்கிக் கொண்டு கேட்டாள்.

"அப்புறமென்ன.. காபி சாப்பிட ஹோட்டலுக்கு கூட்டிக்கிட்டு போனா.."

"வெரிகுட்...! ஸோ, நம்ம வழிக்கு வந்துட்டாள்னு சொல்லு"

"ஐ திங்.. ஷ்யூர்! ஆனா அனிதா, நீ அந்த ஹோட்டலைப் பார்க்கணுமே! ரொம்ப மோசம் சுத்தமே இல்ல! அப்படிப்பட்ட ஹோட்டல்ல.. கொஞ்சம் கூட அருவருப்பில்லாம அவ காபி குடிச்சா தெரியுமா?"

"ஐ.. லவ்.. யூ னு எப்ப சொல்லப் போறே அர்விந்த்?"

"ஏழு வருஷத்துக்கு முன்னாடியே சொல்லிட்டனே அனி"

"ச்சி நாட்டி! அவகிட்டே எப்ப சொல்லப்போறேன்னு கேக்கறேன்"

"கூடிய சீக்கிரமே! ஆனா, இந்த வார்த்தை உனக்கு மட்டுமே சொந்தமானவை. விளையாட்டுக்குன்னாக்கூட இதை அவகிட்டே சொல்ல ஏனோ பிடிக்கல்லை அனி"

அனிதா கர்வம் பொங்க அவன் மார்பில் சாய்ந்துக் கொண்டாள்.

"ஐ.. நீட்.. யூ அர்விந்த்! பாதி கிணறை தாண்டிட்டோம். பல்லை கடிச்சிட்டு சொல்லிடுப்பா"

"அர்விந்த்" குரல் கொடுத்துக் கொண்டே படியேறி வந்தார், கதிரேசன்.

சடக்கென்று அனிதாவின் மடியிலிருந்து எழுந்து நல்லபிள்ளையாய் தள்ளி உட்கார்ந்துக் கொண்டான்.

"வாங்க அங்கிள்"

"என்னப்பா இது உனக்கு கஷ்டமா இல்லையா?"

"என்ன சொல்றீங்க?"

"அனிதாவுக்கும் படிப்பு முடியப் போவுது. சட்டுபுட்டுன்னு கல்யா

ணத்தை முடிச்சிடலாம். எவ்ளோ நாளைக்குத்தான் நீங்க இப்படி வந்து வந்து பார்த்துக்கிட்டு போவீங்க?"

அர்விந்தன் ஓரக்கண்ணால் அனிதாவைப், பார்த்துக் கொண்டே, "நான் இப்பக் கூட ரெடிதான். உங்க பொண்ணைதான் நீங்க கேக்கணும்"

"ஏம்மா... உனக்கென்ன பிரச்சினை?"

"ந... நத்திங் டாடி! ஒரு ஆறுமாசம் போகட்டுமே"

"அதென்ன ஆறுமாசக் கணக்கு?"

"அதெல்லாம் சொன்னா உங்களுக்கு புரியாது. அர்விந்த்தான் உங்க மாப்பிள்ளை போதுமா? இன்னும் ரெண்டு மாசத்தில பெமினா அழகு போட்டி நடத்தறாங்க. அதுக்கு நான் பார்ட்டிஸிபேட் பண்ணணும். நிறைய மாடலிங் சான்ஸ் வருது. வர்ற வாய்ப்பை மிஸ் பண்ணக் கூடாது டாட்!"

"ஏம்மா... இப்படியெல்லாம் சம்பாதிச்சிதான் ஆகணும்னு கட்டாயமா இங்கே?"

"பணமா டாடி பெரிசு? நான் எவ்ளோ பேமஸ் ஆகறேன். டெய்லி என்னை டிவி விளம்பரத்துல காட்டும் போது சந்தோஷமா இல்லியா? உங்களுக்கு அதனால பெருமை இல்லையா?"

"ஆமா... அங்கிள்! இதிலென்ன தப்பு?"

"என்னமோப்பா! நம்ம பரம்பரையில இப்படியெல்லாம் யாருமில்லே. உங்கம்மாவுக்குக் கூட இதெல்லாம் புடிக்கலை அரவிந்தா"

"அம்மாவை நான் சரிப்படுத்திடறேன். இது மாடர்ன் வேர்ல்ட்! நீங்க இப்படி கட்டுப் பெட்டித்தனமா பேசறது ஆச்சர்யமா இருக்கு அங்கிள்"

"கட்டுப்பெட்டி வேற, கட்டுப்பாடு வேற! அவ்வளவுதான் என்னால சொல்ல முடியும்?"

கதிரேசன் பெருமூச்சோடு சொல்லி விட்டு கீழே இறங்கி விட்டார்.

"டாடி கிடக்கார்... விடு அரவிந்த்! நீ... சொல்லு, அவகிட்ட எப்ப சொல்லப் போறே?"

"வேற எதையாவது பேசுவோமே ப்ளீஸ்"

## 8

அடுப்படியில் வேலையாய் இருந்த அம்மாவை ஆச்சர்யத்தோடு பார்த்தான் ரஞ்சனி.

நேரம் எட்டு- பத்து!

'ஏழு மணிக்கே அரக்க பரக்க வீட்டை விட்டு கிளம்பி விடுவாளே... இன்றைக்கென்ன?'

"ஏம்மா... உனக்கு நேரமாகல?"

"இல்ல ரஞ்சனி. இன்னைக்கு நான் போகல..."

"ஏன்? உடம்புக்கு சுகமில்லையா?"

"இன்னைக்கு பிப்ரவரி ரெண்டு ஞாபகமில்லையா?"

"ஓ...!" சட்டென முகத்தில் படிந்திருந்த சந்தோஷம் காணாமல்

போனது.

பூஜையறையை எட்டிப் பார்த்தாள். விஸ்வம் இரண்டு முழம் கதம்ப பூக்களின் நடுவில் போட்டோவில் சிரித்துக் கொண்டிருந்தான். ஒவ்வொரு வருஷமும் விஸ்வம் இறந்த நாளில் படையலிட்டு வணங்குவாள் மரகதம்.

'சாகக் கூடிய வயதா அவனுக்கு?'

துளிர்க்க நினைத்த கண்களை இறுக மூடிக் கொண்டாள். கடந்து போன கசப்பான காட்சிகள் கண்ணுக்குள் தோன்றின.

மரகதத்தினுள் நெருடல் இல்லாமல் இல்லை. இந்த நெருடல் இன்று நேற்றல்ல. கல்யாணமானதிலிருந்தே ஊசி போல குத்திக் கொண்டுதானிருந்தது.

'தன் கணவர் இயல்பாய் இல்லை. தன்னிடம் பேசுவது, சிரிப்பது, படுப்பது எல்லாமே யாரோ சொல்லிக் கொடுத்து, கடமையே என்று செய்வதுப் போல்தான் இருந்தது அவர் நடவடிக்கை. என்னவோ அவர் நெஞ்சில் விழுங்கவும், முடியாமல் துப்பவும் முடியாமல் அடைத்துக் கொண்டிருக்கிறது. அது அவராகச் சொன்னால்தான் உண்டு. நாமாக எதை கேட்பது? விட்டு பிடிப்போம்'

கணவன் மனைவிக்குள் மனசு இணையாவிட்டாலும், இந்த சரீரம் மட்டும் எப்படியும் இணைந்து விடுவதுதான் ஆச்சர்யம். யாரை ஏமாற்றினாலும் இயற்கையை ஏமாற்ற முடியாதே! லட்டு லட்டாய் மூன்று குழந்தைகள். விஸ்வம், ரஞ்சனி, ராதிகா.

விஸ்வத்திற்கு 12 வயதிருக்கும். அப்போதுதான் ரங்கசாமியின் நடவடிக்கையில் மாற்றம் தெரிந்தது. ஒரு நாள் அலுவலகம் முடிந்து வரும் போதே குடித்து விட்டு வந்திருந்தார். இது இத்தனை வருட தாம்பத்யத்தில் இல்லாத பழக்கம்.

குடிப்பதற்கு இரண்டு காரணங்கள் மட்டும்தான் இருக்க முடியும். ஒன்று அதிக சந்தோஷம். இரண்டாவது கவலை. நிச்சயம் அப்படியொன்றும் இங்கே பாலும், நெய்யும் வழிந்தோடவில்லை. சிரிப்பும், கும்மாளமுமாய் ஆட்டம் போடவில்லை. ரங்கசாமியைப் பொறுத்தவரையில் மரகதம் ரோபோட். அந்தளவு சந்தோஷத்திற்கு பஞ்சம். அதே சமயம் கவலைபடும்படி ஏதுமில்லை. அவர் பார்த்த கிளார்க் வேலைக்கு வந்த சம்பளம் குறைவுதான் என்றாலும் கடன் வாங்காமல் அடக்கமாகத்தான் குடும்பத்தை நடத்தி வந்தாள். இதற்கு மேல் பொறுக்க மாட்டாமல் மரகதம் கேட்டு விட்டாள். போதையில் மிதந்துக் கொண்டிருந்த ரங்கசாமியின் இதயமும் உண்மையைப் போட்டு உடைத்தது.

"சைராபானு தெரியுமா? உனக்கெங்கேடி தெரியப் போவுது? என் இதயத்தில அவளைத் தவிர யாருக்கும் நான் எடங்கொடுத்ததில்லே. உனக்கும்தான். நாங்க ரெண்டு பேரும் உயிருக்குயிரா பழகினோம். அவங்கப்பன் அபுபக்கர், ஜாதி, மதம், அந்தஸ்துன்னு பேதம் காட்டி எங்களை பிரிச்சிட்டான். பெரிய பணக்காரனுக்கு அவளை கட்டி குடுத்தான். வாழ்ந்தாளா? எப்படி முடியும்? என்னை மனசுல வச்சுக்கிட்டு அவனோட பட்டும் படாம குடும்பம் நடத்தி வந்திருக்கா. சண்டை சச்சரவுதான். தினமும் பாவி, அப்பனுக்கு பயந்து அவ வாழ்க்கையே கெடுத்துக்கிட்டா. எல்லாம் முடிஞ்சு போச்சு. புருஷனை விவாகரத்து பண்ணிட்டு வந்திட்டா. முந்தாநாள்

சைராபானு என்னை ஆபீஸ்ல வந்து பார்த்து ஒன்னு அழுதா. காலம் கடந்து போச்சு. என்னால என்ன செய்ய முடியும்? நேத்து அவ மருந்து குடிச்சு செத்துப் போய்ட்டா! என் பானு போய் சேர்ந்துட்டா. காரணம் நான்தான். என்னைத் தேடி வந்தவளை கையாலாகாத்தனமா அனுப்பிச்சேனே. என்னாலதான். நான் அப்பவே ஸ்டெடியா இருந்தா அவ செத்திருப்பாளா? என் மேல உயிரையே வச்சிருந்தாளே? மனசுக்கு கஷ்டமாயிருந்துச்சு. குடிச்சேன். என்னால அவளை மறக்க முடியல. எனக்கு அவ வேணும். அவளை பார்க்கணும். நானும் அவகிட்டே போகப் போறேன். பானு வர்றேம்மா, இனி யாரும் நம்மை பிரிக்க முடியாது. பொண்டாட்டியாவது புள்ளைங்களாவது. எனக்கு யாரும் வேணாம். என் பானு மட்டும் போதும். உளறலின் நடுவே தன் கணவர் சொன்னதை மரகதத்தால் ஜீரணிக்க முடியவில்லை.

'இத்தனை வருடமும் அவர் என் உடம்போடு மட்டும்தான் குடும்பம் நடத்தினாரா?' அவமானமும், வேதனையும் தாங்காமல் கொல்லைப்புறத்தில் அழுதழுது விடிகாலையில் உறங்கிப் போன மரகதத்திற்கு கண் விழித்தபோதுதான் தெரிந்தது. கணவர் போதையில் உளறவில்லை. நிஜத்தைதான் சொன்னார் என்று. நாலு முழகயிற்றில் நிரந்தரமாய் தூங்கி விட்டிருந்தார் ரங்கசாமி. உயிரோடிருப்பவர்களை விட்டு விட்டு, அரூபத்தை தேடிப் போய் விட்டார்.

அதன் பிறகு நடந்தவை கனவிலும் நினைத்து பாராதவை.

மரகதத்திற்கு சொந்தம் என்றிருந்தது. தூரத்து அத்தை தெய்வானை மட்டும்தான். ஓரளவு நிலம், நீச்சு என்று வசதியாக இருப்பவள். அவளிடம் தஞ்சம் புகுந்தாள். அவளும் ஊரார் முன்னிலையில் தன் தாராள மனப்பான்மையை காட்டிக் கொள்ள சேர்த்துக் கொண்டாள். இரண்டு வேளை சோற்றை போட்டு விட்டு நான்கு பேரையும் மாங்மாங்கென்று வேலை வாங்கினாள்.

மரகதத்திற்கு ரத்தக் கண்ணீரே வந்தது. அவள் எவ்வளவு வேலை வேண்டுமானாலும் செய்யத் தயார். விஸ்வத்தை கிணற்றில் இருந்து குடம் குடமாய் தண்ணீர் இறைக்க வைப்பாள். ஒரு கவளம் எடுத்து சாப்பிட முடியாமல் அவனின் கைகொப்புளித்து போயிருக்கும். ரஞ்சனி, அவளை விட சைஸில் பெரிய சாமான்களை தேய்ப்பதும், தோட்டத்தை பெருக்குவதுமாய் களைத்துப் போனாள். ராதிகா, ஐந்து வயது பிஞ்சு. அந்தக் குழந்தையைக் கூட விட்டு வைக்கவில்லை. சாணியை உருண்டை தட்டிக் காயப் போட்டு கொண்டிருந்ததுதான் பொறுக்கவில்லை. வயதுக்கு மீறிய உழைப்பு. அரையும் குறையுமாய் சாப்பாடு. எல்லாமுமாக சேர்த்து குழந்தையை விஷக் காய்ச்சலில் படுக்க வைத்து விட்டது. தெய்வானையின் கல்மனம் கரையவில்லை. வைத்திய செலவிற்கென்று ஒத்தை ரூபாக் கூட கண்ணில் காட்டவில்லை. கவர்ன்மென்ட் ஹாஸ்பிடலில் பத்து நாள் தங்க வைத்தும் ராதிகாவின் ஒரு கால் செயலிழந்து போனதுதான் மிச்சமாயிற்று.

இதற்கு மேல் பொறுக்க மாட்டாமல் இருட்டோடு இருட்டாக அந்த கிராமத்தை விட்டு நண்டும் சிண்டுமாய் இருந்த குழந்தைகளோடு பட்டணத்திற்கு வந்தாள். நாலு வீட்டில் வீட்டு வேலை செய்தாள். சிக்கனமாய் செலவழித்தாள். மரகதம் சமையலில் கெட்டி. வீட்டு விசேஷங்களுக்கு சமைக்க ஆரம்பித்தாள். நாலு காசு கையில் பிடிபட ஆரம்பித்தது. மூன்று

பேரையும் மறுபடி பள்ளியில் சேர்த்தாள். ரஞ்சனிதான் படிப்பில் கெட்டி யாக இருந்தாள். விஸ்வத்திற்கும், ராதிகாவுக்கும் ஏறவில்லை. ராதிகா ஒன் பதாவதோடு நின்று விட்டாள்.

விஸ்வத்தின் போக்கில் மாறுதல் தென்பட்டது. சாதாரணமாகவே அவன் கல்லுளிமங்கன். அம்மாவோடும் சரி, தங்கைகளோடும் சரி, அப்ப டியொன்றும் கலகலவென்று பேசுவதில்லை. ஒரு எல்லையோடு ஒதுங்கி இருந்தான். இட்டந்தட்ட ரங்கசாமியைப் போல. மரகதம் தான் வேலை செய்த வீட்டுக்காரரிடம் காலில், கையில் விழுந்து எப்படியோ, ஒரு பிரை வேட் கம்பெனியில் விஸ்வத்திற்கு கிளர்க்காக வேலை கிடைக்க செய்தாள். கொஞ்சமாவது பாரத்தை இறக்கி வைக்கலாமே என்று பெருமூச்சு விட்ட மரகதத்தை அடுத்துவந்த பாறாங்கல் ஒரேயடியாய் அமுக்கி விட்டது.

ஒரு நாள் மாலையில் விஷம் குடித்து மரித்துப் போயிருந்தான் விஸ் வம். அவனருகில் ஒரு லெட்டர்.

'என் சாவிற்கு யாரும் காரணமில்லை. என் இயலாமைதான் கார ணம். என் ஷீலாவை நான் உயிருக்குயிராக நேசித்தேன். அவளும் என்னை நேசித்தாள். ஆனால் இப்போது என் ஏழ்மையை காரணம் காட்டி அவளு டைய திருமண அழைப்பிதழை நீட்டுகிறாள். இதில் அவள் தவறு ஏது மில்லை. ஏழையின் வயிற்றில் பிறந்த பாவம் என் காதல் கருகிப் போய் விட்டது. அவளில்லாமல் எனக்கு வாழ்க்கையில்லை. இந்த ஏமாற்றத்தை தாங்கிக் கொள்ளும் சக்தியுமில்லை. அவள்தான் என் உலகம். உயிர், மூச்சு எல்லாமே! அவளே ஒதுக்கி விட்ட பிறகு இந்த அந்நிய உலகத்தில் வெறும் நடைபிணமாக வாழ என்னால் முடியவில்லை. போகிறேன். மன்னியுங்கள்!

இப்படிக்கு

அவளுக்கு மட்டுமே உரிய..

விஸ்வம்!

மரகதம் வயிற்றிலும், நெஞ்சிலும் அறைந்துக் கொண்டு அழுதாள்.

"போய்ட்டியேடா.. உன்னையே நம்பியிருந்தேனே.. நீயும் எங்கள ஏமாத்திட்டு போய்ட்டியேடா!"

பருவத்தின் வாசலில், கல்லூரியில் காலடி வைத்திருந்த ரஞ்சனிக்கு ஏனோ கண்ணீரே வரவில்லை.

இவனுக்கு உயிர் தந்த தாயை, உடன்பிறந்த தங்கைகளை ஒரேயடி யாய் உதாசீனப்படுத்தி, எவளோ நேற்று அறிமுகமான ஒரு பெண்ணுக்காக உயிர் விட்டவன் ஆண் மகன்தானா? சுயநலக்காரன்! தான், தனக்கு என்று மட்டுமே நினைக்க தெரிந்தவனுக்கு வாழ்க்கை என்பது எப்போதுமே எட் டாக்கனிதான்.

அம்மா, 'வாழ்க்கையே தொலைந்து விட்டதே' என்று அப்பாவை நினைத்து அழும்போதெல்லாம் ரஞ்சனிக்கு எரிச்சலாய் இருக்கும்.

'வாழ்க்கைய தொலைச்சிட்டேன்னு நீ செய்த தப்பை மறைக்கப் பார்க்காதே! வாழ தெரியலேன்னு சொல்லு. உன் மனசுல நான் இல்லா தப்ப எப்படி என் கழுத்தில் தாலிய கட்டினே. நீயெல்லாம் ஒரு ஆம்பிளை யான்னு கேட்டிருக்கணும். அதை விட்டுட்டு எவளுக்காகவோ உயிர் விட்ட உன் புருஷனையும், எவளுக்காகவோ எல்லாத்தையும் துறந்து பரலோகம் போய்ட்ட உன் பிள்ளையையும் நினைச்சு நீ அழுறதை நிறுத்து. இந்த

விஷயத்தில் மட்டும் அப்பனுக்கு பிள்ளை தப்பாம பிறந்திருக்கு. உனக்கு பிறந்தது ரெண்டு பேர்தான். அந்த ரெண்டையும் ஆம்பிளைன்னு நினைச்சிக்க. ஒரு மகனால தாய்க்கு என்னென்ன சந்தோஷங்கள் கிடைக்கனுமோ, அதையெல்லாம் நான் தர்றேன். உனக்கு கொள்ளி கூட நான் போடறேன். அழறதை மட்டும் நிறுத்து' என்பாள் ரஞ்சனி.

ஆனால் நினைவுகளை பூட்டி வைக்க முடியுமா என்ன? அம்மாவை தொந்தரவு செய்யாமல் ஆபீசிற்கு புறப்பட்டு போனான்.

"ஹலோ- குட் ஈவ்னிங்"

திடுக்கிட்டு திரும்பிய ரஞ்சனி ஆச்சர்யத்தில் கண்களை விரித்தாள்.

"ஓ- நீங்களா? குட் ஈவ்னிங். ஆமா. இதென்ன கார்ல? ரஞ்சனி பியட்டில் அமர்ந்திருந்த அர்விந்தனை சந்தேகமாய் பார்த்தாள்.

திடுக்கிட்டுப் போனான்.

'ச்சை! எப்படி மறந்து போனேன்? காரிலேயே இவன் முன் வந்து தொலைச்சிட்டேனே"

"நா- நான்தான். சொன்னேனே. ஆட்டோமொபைல் வொர்க்ஷாப் வச்சிருக்கேன்னு. சர்வீஸ்க்கு வர்ற காரை இப்படி ஒரு ரவுண்டு அடிச்சிட்டு வர்றது வழக்கம். சரளமாய் வந்து விழுந்த பொய்யில் சமாளித்தான்.

"அப்படியா? நான் என்னமோ இது உங்களோட கார்னு நினைச்சிட்டேன்"

"சரி- அப்படியே என் காரா இருந்தாதான் என்ன?"

"என்னவா? திரும்பிப் பார்க்காம போய்ட்டே இருப்பேன்"

"ஏன் அப்படி?"

"துஷ்டரை கண்டால் தூர விலகுன்னு சொல்வாங்க. பொதுவா. பணக்காரங்களுக்கு நெஞ்சுல இதயத்துக்கு பதிலா கரன்சியதான் வச்சு படைச்சிருக்கான் ஆண்டவன். அப்படிப்பட்டவங்க சகவாசம் எனக்கு தேவையில்லே"

"சரி- போரடிக்காதிங்க. கார்ல ஏறுங்க"

"கார்லேயா? ஐயோ- வேணாம்"

"நான் ஒண்ணும் உங்களை கிட்நாப் பண்ணிட மாட்டேன். தைரியமா ஏறுங்க"

"ஐயோ- நான் அதுக்கு சொல்லலை!

"நீங்க மறுக்கறது என்னை இன்ஸல்ட் பண்ற மாதிரி இருக்கு. என் மேல நம்பிக்கை இருந்தா ஏறுங்க. இல்லனா, திரும்பி பார்க்காம போய்ட்டே இருங்க. நானும் இனிமே இந்த பக்கம் தலைவச்சும் படுக்க மாட்டேன். அர்விந்தனின் முகம் இறுகிப் போனது. சரியான அஸ்திரத்தை வீசி விட்டான்.

ரஞ்சனிக்கு ஒரு மாதிரியாக ஆகி விட்டது. எதுவும் பேசாமல் காரின் முன் கதவை திறந்து அமர்ந்தாள்.

கார் கடற்கரை சாலை வழியாக ஓடி தமிழ்நாடு ரெஸ்டாரெண்டில் ந்து நின்றது.

"எதுக்காக... இங்கே?"

"என்னோட சேர்ந்து ஒரு பாசந்தி சாப்பிட மாட்டீங்களா? சாப்பிட்டுகிட்டே ஒரு நல்ல விஷயத்தைப் பத்தி உங்கிட்ட பேசிடணும்... அதுக்காகத்தான்" அர்விந்தன் சூட்சுமமாய் சொல்லிவிட்டு அவளையே பார்த்தான்.

'நல்ல விஷயம்னா... எதைப் பத்தி' ரஞ்சனியின் இதயம் எகிறி விழுந்து விடுமோ என்றளவிற்கு தாறு மாறாய் துடித்தது.

பேரர்... அவன் கேட்டவைகளை கொண்டு வந்தான்.

அர்விந்தன் ஒரு ஸ்பூன் பாசந்தியை ருசித்தவன் தொண்டையை செருமிக் கொண்டு, 'நான்..." என்று ஆரம்பித்தபோது...

"ஹல்லோ" என்ற குரல்!

இருவரும் திரும்பினர்.

அனிதா நின்றிருந்தாள்.

தோள்வரை வெட்டி விடப்பட்டு மருதாணி பூசி செம்பட்டையாக் கப்பட்ட கேசம். காற்றுக்கு தோதாய் புரண்டு கொண்டிருந்தது. முழங்கால் வரை கறுப்பு மிடி. மார்பு பகுதியின் வனப்பு தெரிய அணிந்திருந்த வெள்ளை டாப்ஸ். குதிகால் செருப்பு. லிப்ஸ்டிக் உதடுகள் அலட்சியத்தில் கோணியிருந்தது கூட படு கவர்ச்சியாய் இருந்தது.

அர்விந்தனுக்கு மட்டுமல்ல... ரஞ்சனிக்கு கூட திகைப்பாய் இருந்தது அவளைப் பார்த்து.

"நீ... யா?" ரஞ்சனி கேட்டாள்.

"நானேதான்! எதிர்பார்க்கலே இல்லே. நானும்தான். ஆமா... இவர் யாரு? உன் லவ்வரா? பரவாயில்லே... நல்லாவே இருக்கார்" என்றவள் ரஞ்சனி முகத்தை சுளித்து திருப்பிக் கொண்ட விநாடியில் அனிதா அர்விந்தனை பார்த்துக் கண்ணடித்தாள்.

"ஷட் அப்... மைண்ட் யுவர் பிஸினஸ்" ரஞ்சனி வெடித்தாள்.

"அஃப்கோர்ஸ்... அததான் பண்ணிட்டிருக்கேன்"

"திஸ் இஸ் டூ மச்! விமிட் யுவர் டங்!"

"வெல்... உங்க தனிமைக்கு கரடியா இனியும் நான் இருக்க மாட்டேன். ஹலோ ஜென்டில்மேன் நீங்க... காதலை தொடரலாம்... ஸீ... யூ அகெய்ன்! வரட்டுமா மிஸ்... அ... உங்க பேரென்ன?"

"இடியட்"

"ஓ... ஸ்வீட் நேம்"

ரஞ்சனிக்கு கோபத்தில் மூக்கு நுனி வியர்த்தது. அனிதா படு ஸ்டைலாய் தன் நீல நிற மாருதியை நோக்கிச் சென்றாள்.

"யாருங்க அது?" அர்விந்தன் சிரிப்பை அடக்கிக் கொண்டு அப்பாவியாய் கேட்டான்.

"பேய்... பண பேய்... திமிர் பிடிச்ச ராட்சசி"

"என்ன சொல்றீங்க?"

"இந்த மாதிரி பணத் திமிர் பிடிச்ச நாய்ங்களை ரோட்ல நிக்க வச்சு சுடணும். இவ கெட்ட கேட்டுக்கு மிஸ். மெட்ராஸ் பட்டம் வேற... சனியன்...

சலியன்.."

தன்னெதிரிலேயே அனிதாவை அவன் திட்டவும் அர்விந்தனுக்கு ரஞ்சனி மீது வெறுப்பு அதிகரித்தது.

'ஆயிரம் ரூபாய்க்கு அலையலையை இடித்து, பிடித்து பஸ்ஸில் போய், காலையிலேர்ந்து சாயந்திரம் வரைக்கும் ஆபீஸ்ல நாய் போல வேலை செய்ற நீ.. என் அனிதாவை திட்டுவதா? அவள் கால் தூசு பெறுவாயா நீ? அதான் ஆண்டவன் ஆட்டுக்கு வாலை அளந்து வச்சிருக்கான். கொஞ்சம் வசதியான குடும்பத்தில் பிறந்திருந்தால்..' யம்மாடி... என்ன போடு போடுவியோ! அனிதாவின் கோபம் நியாயமானது. உன்னை இப்படியே விடக்கூடாது. உன்னை ஒரு வழி பண்ணலே? என் பேரு அர்விந்தன் இல்லே' மனதுக்குள் சங்கல்பம் செய்து கொண்டான்.

"இவதான் மிஸ். மெட்ராஸ் அனிதாவா?"

"வேற எதையாவது பேசலாமே! அவளைப் பத்தி இப்போ வேண்டாமே ப்ளீஸ்.."

"இல்ல.. உங்களுக்கும்.. அவளுக்கும் என்ன..?"

"ப்ளீஸ்.." கெஞ்சலாய் அவனை பார்த்தாள்.

"ஓக்கே.. ஓக்கே! கம்.. டு.. த பாய்ண்ட்! நான்.. உங்களை.."

## 9

தெருவில் நுழைந்ததும் போலீஸ் தலைகள் தெரிந்தது. ரஞ்சனிக்கு புருவம் உயர்ந்தது.

'என்னவாயிற்று?'

"என்ன ராதிகா.. போலீஸெல்லாம் வந்திருக்கு?"

"அநியாயம் ரஞ்சனி. எதிர் வீட்டு மாடியிலே நாலஞ்சு மாதம் முன்னாடி குடிவந்தானே ரமேஷ்! அந்த வீட்டு ஓனரோட பொண்ணு வத்சலாவை லவ் பண்ணியிருக்கான். விஷயம் கேள்விப்பட்டு அவளோட அப்பா பொண்ணை விளாசி எடுத்திட்டார். ரமேஷையும் திட்டி வெளியே விரட்டிட்டார். இன்னிக்கு விடிகாலையிலே அவளோட ஓடிப் போய் கோவில்ல தாலி கட்டிக்கிட்டு ஒரு லாட்ஜில ரூம் எடுத்து தங்கி.. ரெண்டு பேரும் விஷம் குடிச்சி செத்துட்டாங்களாம்.."

"கடவுளே.."

"கல்யாணம்தான் பண்ணிக்கிட்டாங்களே.. இவளும் மேஜர்தானே? தைரியமா குடும்பம் நடத்தறதை விட்டுட்டு இப்படி கோழைத்தனமா தற்கொலை பண்ணிக்கிறதெல்லாம்.. பக்குவமில்லா காதல் ரஞ்சனி! இவங்களுக்கெல்லாம் காதலிக்க என்ன தகுதியிருக்கு? சரி.. சரி.. நீ முகம் கழுவிட்டு வா. காபி தர்றேன்"

ரஞ்சனி செலுத்தப்பட்டவளாய் பின் தொடர்ந்தாள்.

'காதல் என்பது அவ்வளவு தீவிரமானதா? உயிரை விடவும் மேலானதா? உயிரை மிஞ்சி எந்த விஷயமும் உயர்ந்ததில்லை. ஆனால் காதலை விட எதுவும் உயர்ந்ததில்லை என்று நேற்று அப்பா, அண்ணன் முதல்

இன்றைய ரமேஷ் வத்சலா வரை தொடர்கிறதே!'

'இது இயல்பானதா? அல்லது என் காதல் பெரிது என்று கவுரவத்திற்காக தங்களை பெருமைப்படுத்திக் கொள்ள முட்டாள்தனமாய் எடுக்கப்படும் முடிவா? ராதிகா சொல்வது போல் கோழைத்தனமா? ஆமாம். இருவரும் இணைய வேண்டும் என்று முடிவு செய்து கல்யாணமும் செய்து கொண்ட பின் இறந்து போவது எந்த விதத்தில் நியாயம்? வடிகட்டின முட்டாள்தனமல்லவா?'

'காதலிக்க தொடங்கும்போதே இருவரிடமும் மன உறுதி, அன்பு, தீவிரம், எதையும் எதிர்கொள்ளும் துணிவு, இதையெல்லாம் உறுதிபடுத்தி கொண்ட பின் காதலிப்பதுதான் நல்லது. கோபியிடம் அந்த உறுதி இருக்கிறதா? இன்று திடீரென்று 'நான் உன்னை கல்யாணம் பண்ணிக்க விரும்புகிறேன் ரஞ்சனி' என்ற போது, நான் ஏன் கோபப்படவில்லை? உள்ளுக்குள் எனக்கும் அந்த எண்ணம் இருப்பதாலா? இப்படியொரு வார்த்தைக்காக காத்திருந்ததாலா? நிஜமாகவே என்னை நேசிக்கிறாரா?'

'உன்னை காதலிக்கிறேன் என்று சொல்வது... பருவ கோளாறு என்று எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவர் என்னை கல்யாணம் பண்ணிக்கிறேன் என்றல்லவா கூறினார்? இது இதயத்தின் அடித்தளத்தில் இருந்து வந்த வார்த்தை. என்னை கடைசி வரை தன் மனச்சிறைக்குள் பிடித்து வைக்க உதிர்த்த உறுதி வார்த்தைகள். நாளை உன் முடிவை சொல் என்றாரே. நான் ஏன் அவரை இருபத்து நாலு மணி நேரம் காக்க வைக்கிறேன்? அவர் மனம் என்ன பாடுபடும்? சம்மதிப்பாளா? மாட்டாளா? என்ற தவிப்பிலேயே சாப்பாடுக் கூட இறங்காதே! சே! என்னைப் பற்றி நினைத்து தவிக்கட்டும் என்று துடிக்க வைக்கிற குரூர எண்ணம் என்னுள் எப்போது நுழைந்தது' அப்பாவி ரஞ்சனி தன் மனப்போராட்டத்தில் சிக்கி தவித்தாள்.

"என்ன ரஞ்சனி? எவ்வோ நேரமா கூப்பிட்றது? இந்த பிளவுஸுக்கு கொக்கி கட்டேன். என்ன யோசனை?"

"அ- ஒண்ணுமில்லே" சொல்லலாமா கோபியைப் பற்றி! வேண்டாம்- இவளுக்கு வாயில் தங்காது. அம்மாவிடம் போட்டு உடைத்து விடுவாள். அதனால் அம்மா சந்தோஷப்படுவாள்தான். இருந்தாலும் எனக்கு சங்கடம்தானே? மெதுவாய் சொல்லிக் கொள்ளலாம். இப்போது அவசரமில்லை. ஆனால் நாளை அவரிடம் சில விஷயங்களை பேசி தெளிவுப் படுத்திக் கொள்ள வேண்டும்" ராதிகாவிடம் இருந்து ஜாக்கெட்டை வாங்கி கொக்கி கட்டத் தொடங்கினாள்.

அப்புறம்... உங்க ஏரியாவுல மழை எப்படி பெஞ்சது? எங்க ஏரியாவுல தண்ணியாதான்... தென், ரேஷன்ல எண்ணெய், சர்க்கரை எல்லாம் ஒழுங்கா கிடைக்குதா? நெக்ஸ்ட்..."

"ஐயோ... நிறுத்துங்க... என்ன இது- இதையெல்லாம் பேசிக்கிட்டு- என்னை கிண்டல் பண்றீங்களா?"

"பின்னே என்னவாம்? நேற்று ஒரு கேள்விய மெனக்கெட்டு தைரியமா கேட்டு வைத்தானே- அதுக்கு பதிலை சொல்லி ப்ளட் பிரஷரை குறைக்கலாம்னு நல்ல எண்ணமே கிடையாதா? ரோட்ல போற, வர்றவங்கள பத்தி, நாட்டு நடப்பு பத்தி, இப்படித்தான் பேசி போரடிக்கிறே- ஸாரி-

போரடிக்கிறீங்க. பிடிக்கலையா! வெளிப்படையா சொல்லிடுங்க. சொல்றதுக்கு பயந்துக்கிட்டு எதையெதையோ பேசி நேரத்தைப் போக்க வேணாம். சரி.. இனி எனக்கு இங்கே வேலையில்லைன்னு நினைக்கிறேன். அப்ப நான் வர்றேங்க..." கையில் ஒட்டியிருந்த மணலை உதறி எழ முற்பட்டவனை அவசர அவசரமாய் தடுத்தாள்.

"இருங்க.. இருங்க.."

அர்விந்தன் தோளை குலுக்கியபடி அமர்ந்தான்.

"நான் யோசிச்சுப் பார்த்தேன்"

"ஒரு நாள் முழுக்க டைமிருந்திச்சே.. பின்னே தூங்கியா இருப்பீங்க?"

"எனக்கு..!"

"உங்களுக்கு?"

"உனக்குன்னு கேளுங்க!" தலையை கவிழ்த்துக் கொண்டாள்.

"அப்பமன்னா?"

"அப்படித்தான்?"

சூரியன் மேற்கில் ரத்தச் சகதியாய் இறங்கிக் கொண்டிருந்தான். கடற்காற்று கண்களை குறுகிப் பார்க்கச் சொன்னது. இருள் இன்னும் ஆழமாகாததால் ரஞ்சனியின் முகம் வெட்கத்தில் சாந்து பூசிக் கொண்டதை பார்க்க முடிந்தது. அர்த்தமற்றுப் போகப் போகும் அந்த வெட்கத்தை வேடிக்கையாய் பார்த்தான். 'அனிதா பார்க்காமல் போனாளே! அவள் ஜென்மம் சாபல்யம் அடைந்திருக்குமே"

"தாங்க் காட்! தாங்க்யூ ரஞ்சனி" குரலை கெகெப்பாக்கி லாட்டரியில் கோடி ரூபாய் விழுந்து விட்ட சந்தோஷத்தை குரலில் கலந்து.. சிவாஜி கணேசன் நடிப்பில் இவனிடம் பிச்சை வாங்க வேண்டும். அப்படி நடித்தான் அந்த அப்பாவி அபலைப் பெண்ணிடம்.

"இதுக்கெல்லாமா தாங்க்ஸ் சொல்லுவாங்க?"

"ஏன் சொல்லக் கூடாதா?"

"மனசால நெருங்கினவங்க சொல்லக் கூடாத வார்த்தைகள்தான் இந்த நன்றி. மன்னிப்பெல்லாம்.."

"அடேயப்பா.. அப்புறம்?"

"உங்க வீட்ல சம்மதிப்பாங்களா?"

"நான் ஒரு பொம்மைய காட்டி இவதான் உன் மருமகள்னு சொன்னாக் கூட போதும்.. அம்மா ஆரத்தி கரைச்சி எடுத்திட்டு வருவாங்க.. நான் மகாலட்சுமிய இல்லே காட்டப் போறேன்"

தன் அதிர்ஷ்டத்தை தனக்குள் சொல்லி சிலாகித்துக் கொண்டாள். 'நான் அதிர்ஷ்டக்காரி'

"உங்களால ரெண்டு வருஷம் காத்திருக்க முடியுமா?"

"ரெண்டு வருஷமா? ஏன் ரஞ்சனி?"

"என் குடும்பத்துக்காக நான் சில கடமைகள் செய்து முடிக்க வேண்டியிருக்கு"

"கேக்கவே மறந்துட்டேன் பாரு. உங்க வீட்ல மொத்தம் எத்தனை பேர்?" அக்கறையாய் கேட்பது போல் கேட்டான்.

"அம்மாவும், ஒரு தங்கையும் மட்டும்தான்"

"என்ன பண்றாங்க?"

"சொல்லவாயா? அம்மா ஒரு வீட்டில் வேலைக்காரியாய் இருப்பதை சொன்னால் எப்படி எடுத்துக் கொள்வான்?

வருங்கால மாமியார் ஒரு வேலைக்காரி என்பதை ஜீரணித்துக் கொள்வானா? வேண்டாம். சொல்ல வேண்டாம். முதல் காரியமாய் அம்மாவிடம் அந்த வேலையை விடச் சொல்ல வேண்டும்" காதலில் கவுரவம் எட்டிப் பார்த்தது.

"என்ன ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறே?"

"அது வந்து.. அம்மாவும் சிஸ்டரும் வீட்லதான் இருக்காங்க"

"சரி.."

"எங்க வீட்ல ஆம்பள துணையாருமில்லே.. நான்தான் குடும்பத்தை கவனிக்கிறேன். என் தங்கைக்கு ஒரு வரன் பார்த்து நிச்சயம் பண்ணிட்டோம். இன்னும் நாலைஞ்சு மாசத்திலே கல்யாணம் அவளுக்கு முடிச்சிட்டு. அம்மாவுக்குன்னு ஒரு தொகைய சேர்த்து பாங்க்ல போடணும். கடைசி வரைக்கும் அம்மாவுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்கக் கூடாது. இதையெல்லாம் முடிக்க எனக்கு ரெண்டு வருஷம் தேவை. அதுக்கப்புறம்தான் நான் என்னைப் பத்தி யோசிக்கணும்"

அர்விந்தனுக்கு கொட்டாவி வந்தது.

"அந்த கவலை உனக்கு வேணாம், ரஞ்சனி. உன்னை மட்டுமல்ல, உன் குடும்பத்தையும் நான் பொறுப்பு ஏத்துக்கறேன். உன் கஷ்டம், என் கஷ்டமல்லவா?"

"வெல்டன் அர்விந்த்! என்னமா அளக்கறே?" மானசீகமாய் அவன் முதுகில் தட்டிக் கொடுத்து கன்னத்தில் முத்தமிட்டு விட்டு போனாள் அனிதா.

சிலிர்த்து போய் நிமிர்ந்தாள் ரஞ்சனி.

"கோ..பி.." கண்களில் நீர் மினுமினுத்தது.

"நான் ரொம்ப கொடுத்து வச்சவ கோபி! இந்த காலத்துல பெத்த தாயைக் கூட சுமையா நினைக்கிற பிள்ளைங்களுக்கு மத்தியில், காதலிக்கறவளோட குடும்பத்தையும் காப்பாத்தறதா சொல்றீங்களே.. உங்களுக்கு நான் எப்படி.."

"தாங்க்ஸ் சொல்லப் போறியா? இப்பத்தானே.. மனசு ஒண்ணா சேர்ந்துட்டா இந்த வார்த்தைகள்லாம் வரக்கூடாதுன்னு சொன்னே"

"மன்னிச்சிடுங்க"

"பாரேன்.. இதுவும் நம்ம காதல் அகராதியிலேர்ந்து நீக்கப்பட்ட வார்த்தையாச்சே"

"இல்லைங்க கோபி!. நிஜமாகவே இப்படியொரு கண்ணியமும், உதவுற மனப்பக்குவமும் உள்ள ஆணை இப்பத்தான் பார்க்கறேன். ஆனா, அதை நான் விரும்பலைங்க. என்னை நேசிக்கிற ஒரே காரணத்துக்காக.. எங்க குடும்ப சுமைய உங்க தலைல சுமத்த நான் அனுமதிக்க மாட்டேன். எனக்காக ரெண்டு வருஷம் காத்திருக்க மாட்டீங்களா கோபி?

"நிச்சயமா.. ஆனா.."

"ஆனா, ஊனாங்கற பேச்சே வேணாம். ரெண்டே வருஷம். அதுக்கப்புறம் என் கடமைகளை முடிச்சிட்டு அக்கடான்னு உங்க மடியில வந்து விழுந்துட மாட்டேனா?" காதல் மிகுதியில் குரல் அடைத்துக் கொண்டது.

"ஏன் அதுக்கு ரெண்டு வருஷம்? இப்பவும் என் மடி காலியாதானே இருக்கு" கண்களில் குறும்பு மின்ன ரஞ்சனியை ஊடுருவிப் பார்த்தான்.

"ஐயோ.. என்ன இப்படியெல்லாம் பேசறீங்க?" வெட்கமும், பயமுமாய் கேட்டாள்.

"லவர்ஸ் இத பேசாம பின்னே, லவகுசா கதைய பத்தியா பேசுவாங்க? மண்டு.."

"ஆனாலும் இது தப்பில்லையா?"

"காதலிக்கறது தப்புன்னா இதுவும் தப்புதான்! காதல் தப்பா ரஞ்சனி?"

"இ- இல்லே!"

"அப்பட இன்னும் கொஞ்சம் பக்கத்துல வாயேன். பத்தடி தள்ளி உட்கார்ந்தா லவ் பண்ணுவாங்க? பேசறது கூட சரியா காதில் விழ மாட்டேங்குது"

"இது பத்தடியா?"

"ஆமாம்!" என்றவன் அவளை தோளோடு தோள் உரச நெருங்கி அமர்ந்தான்.

ரஞ்சனிக்குள் மத்தாப்பூ பூத்தது!

"வெரிகுட்.. மை பாய்! "சந்தோஷத்தில் அர்விந்தனின் கழுத்தை இறுக்கினாள் அனிதா.

"எப்படியோ.. கழுதை உன் வலைல விழுந்துட்டுது"

"சரி.. எப்போ நம்ம கல்யாணம்? சில சமயம் அவளைப் பாக்கறப்ப பரிதாபமா இருக்கு! விட்டுடுவோமே அனி!

அவ எக்கேடோ கெட்டு போகட்டும். நாம நம்மளபத்தி யோசிப்போம். நம்ம கல்யாணத்தைப் பத்தி.. பர்ஸ்ட் நைட் பத்தி.. ஹனிமூனுக்கு டார்ஜிலிங் போறது பத்தி, நம்ம குழந்தைய பத்தி.."

"ஸ்டாப்.. ஸ்டாப். இப்போதைக்கு இந்த பேச்சே எடுக்கப்படாது. இன்னும் ஒரு அஞ்சு மாசம் பொறுத்துக்க மாட்டியா ப்ளாக்கி? அதுக்கப்புறம் இந்த அவி உனக்கே உனக்கு"

"உன் எய்ம் என்ன? அவ என்னை காதலிக்கணும். அதான் காதலிச்சிட்டாளே! அப்புறமென்ன?"

"இது வெறும் பேஸிக்தானே? காதல்ல இன்னும் எவ்வளவோ இருக்கு? நீயில்லாம அவளால சுவாசிக்க கூட முடியாதுங்கற நிலைமைக்கு அவ வரணும். அவ தனக்கு சொந்தம்னு நினைக்கிற ஆத்மா.. எனக்கு மட்டுமே சொந்தமானதுன்னு தெரிஞ்சி துடிக்கணும். அந்த வலி இந்த ஜென்மத்துக்கும் மறக்காது"

"இது ரிஸ்க்! நீ சொல்றபடி பார்த்தா.. அவளோட செக்ஸ் கூட வெச்சுக்கன்னு சொல்லுவே போலிருக்கே"

"டேவா– அப்படியொரு எண்ணமா? பிச்சிபுடுவேன் பிச்சி! அந்த வேலையெல்லாம் வெச்சுக்காதே"

"வெரிகுட்– அப்படியொரு நல்ல எண்ணமா? மனசால கெட்டாலும் அவ உடம்பால கெட்டுக்கூடாதுன்னு அக்கறையா?"

"சேச்சே! கேவலம் அவனைத் தொட்ட உடம்பு என்னை தொடக் கூடாது. தட்ஸ் ஆல்"

பயமும் பிரமிப்புமாய் பார்த்தான் அர்விந்தன்.

## 10

"ங்கீ– ங்கீ–" என்று கூவிய போனை எடுத்து காதுக்கு கொடுத்தாள் ரஞ்சனி.

"ஹலோ–"

"ஹலோ– ரகு ஸ்பீக்கிங்–"

"குட் ஆப்டர்நூன் சார்"

"குட் ஆப்டர்நூன்– மிஸ். ரஞ்சனி. லஞ்ச் முடிச்சிட்டீங்களா?"

"ஆச்சு சார்"

"உங்கள ஒரு வேலையா வெளியே அனுப்பப் போறேன்"

"சொல்லுங்க சார்"

"டு–யூ–நோ அர்விந்தன். பார்ட்னர்! அன்ட் மைஃப்ரண்ட்"

"யெஸ் சார்"

"எங்க பிஸினெஸ் மேட்டர்ஸை நாங்க வீட்லதான் வெச்சுப்போம். பட், இன்னிக்கு அவசரமா ஒரு விஷயம் அவனுக்கு பாஸ் பண்ண வேண்டியி ருக்கு. இன்னிக்கு பார்த்து எனக்கு போர்ட் மீட்டிங் இருக்கு. ஏழு மணி வரைக்கும் அசைய முடியாது. போன்ல சொல்லக் கூடிய விஷயமில்லை. ரொம்ப சீக்ரெட். நான் அர்விந்தனுக்கு ஒரு லெட்டர் தரேன். அதை நீங்க அவனோட ஆபீசுக்கு போய் அவன்கிட்டே கொடுத்துடணும். தப்பித் தவ றிக் கூட மேனேஜர் கிட்டேயோ, வேற எந்த ஸ்டாஃப் கிட்டேயோ குடுத் துடாதீங்க. நீங்க வரப்போறதை நான் அர்விந்தனுக்கு தெரிவிச்சிடறேன். நம்ம ஆபீஸ் கார்லேயே போயிட்டு வந்துருங்க. ப்யூன்கிட்டே அந்த லெட் டரை குடுத்தனுப்பறேன். நாலு மணிக்கு போனா போதும்"

"சரி– சார்" போனை வைத்தவள் வாட்ச்சை பார்த்தாள். 2-30 எனக் காட்டியது.

மவுண்ட் ரோடு போய் விட்டு அந்த லெட்டரை ஒப்படைத்து விட்டு மீண்டும் ஆபீஸிற்கு வரணும். சில பைல்களை உடனடியாக முடிக்க வேண்டி உள்ளது. அஞ்சரைக்கெல்லாம் வீடு போக முடியுமா? கோபி காத்திருப்பாரே– இன்றைக்கு அவரை பார்க்க முடியாது போலிருக்கே"

கோபியை நினைத்த மாத்திரத்தில் உடம்பில் ரசாயன மாற்றங்கள் நிகழ்ந்தன. 'அவரை சந்தித்தது என் பாக்கியம். கடவுளே– எங்களை நல்ல படியாய் வாழ்க்கையில் இணைத்து வை"

பியூன் கொண்டு வந்த லெட்டரை ஹாண்ட் பேகில் பத்திரப்படுத்தி

னான்.

இந்த அர்விந்தன் பற்றி ரஞ்சனிக்கு ஓரளவு தெரியும். பெரிய பிஸ் ஸெல்ஃப்மேக்லைட் உட்கார்ந்த இடத்தில் இருந்தே எல்லாரையும் விரல் முனை யில் சுழற்றி வைக்கும் கோடீஸ்வரன். ரகுவின் பால்யகாலநண்பன். இரு பள்ளி, கல்லூரியில் மட்டுமல்ல. வெளிநாட்டிலும் இருவரும் சேர்ந்துதா படித்தார்களாம். நட்பில் மட்டுமல்ல, பிஸினஸிலும் தோள் கொடுத்து நி பவர்கள். ரகுவின் பார்ட்னர் என்றாலும் இதுவரை இந்த அலுவலகத்திற் வந்ததில்லை. தவிர, அம்மா வேலை பார்க்கும் வீட்டின் முதலாளியு இவன்தான். அவன் பெயரும் அர்விந்தன் என்று சொல்லியிருந்தாஎ அம்மா. அப்படிப்பட்ட பெரிய புள்ளியை பார்க்க ரஞ்சனிக்கும் நிறை ஆவலிருந்தது.

அவள் அர்விந்தனின் அலுவலகத்தை அடைந்தபோது சரியா நான்கு மணி. பிரமித்துப் போனாள்.

'ஆபீஸா இது?" நட்சத்திர ஓட்டலின் பந்தாவோடு இருந்தது. கத்து என்றால் படுசுத்தம். பளிங்குக் கல் பதிக்கப்பட்டிருந்ததால். மாலை நே சூரியக் கதிரில் தகதகவென கண்களை கூசச் செய்தது. ரிசப்ஷனில் இருந் பெண் கூட வெண்ணெய் தடவிய சருமத்தோடு குரலில் பால்கோவாவு கலந்திருந்தது. ஆங்கிலோ இந்தியப் பெண். க்யூட்டாக இருந்தாள்.

ரஞ்சனியின் வருகையின் நோக்கத்தை அறிந்ததும் அந்த பெண் நிஜ மாக வருத்தப்பட்டாள்.

'சார்- இப்பத்தான் வெளியே கிளம்பிப் போனார். எங்கே என்று தெரியாது. ஆட்சேபனை இல்லையென்றால் அவர் வரும்வரை காத்திருங் கள்''

காத்திருந்தாள்.

அர்விந்தன் ஃபுட் எக்ஸ்போர்ட்ஸ், அர்விந்தன் மோட்டார்ஸ், அர் விந்தன் ஆயில் மில்ஸ், அர்விந்தன் காட்டன் மில்ஸ் அண்ட் கிரானைட் பெர்ட்டிலைஸர்ஸ், எட்ஸெட்ரா, எட்ஸெட்ரா. முழு நீளத்துக்கு அர்விந்த னின் சாம்ராஜ்யம் சில்வர் எழுத்துக்களில் பளபளத்ததை படித்து வியந் தாள், ரஞ்சனி.

நேரம் 5-30.

எவ்வளவு நேரம்தான் அந்த ஹாலையே வெறிக்க, வெறிக்கப் பார்த் துக் கொண்டிருப்பது?

ரகுவிற்கு போன் செய்து விவரத்தை சொன்னாள்.

"ஓ- இவ்வளவு நேரமாவா வெய்ட் பண்ணீங்க? வேணாம். நானே அதை அவன்கிட்டே கொடுத்திடறேன். நீங்க உடனே கிளம்பி வாங்க''

அர்விந்தனைப் பார்க்க முடியவில்லையே என்ற சிறு ஏமாற்றம் அவ ளுக்கு தோன்றியது.

'இதை விதி என்பதா? ரஞ்சனியின் வாழ்க்கையை படுகுழியில் தள்ள ஆண்டவனும் கைகோர்த்து செயல்படும் சதி என்பதா?''

மேலும் சில மாதங்கள் உருண்டோடின. ரஞ்சனியின் நெஞ்சத்தில் ஆலமர வேராய் அழுத்தமாய் பதிந்துப் போயிருந்தான் அர்விந்தன். அவ னுடைய போலியான அன்பை கிஞ்சித்தும் உணர முடியாதபடி. காதல்

அவன் கண்களை மறைத்து விட்டது.

மரகதம் கேரட்டை நறுக்கியபடி ரஞ்சனியிடம் சொன்னாள்.

"உன்னை வீட்டுக்காரம்மா கூட்டிட்டு வரச் சொன்னாங்க ரஞ்சனி"

"என்னையா... ஏம்மா?" ஆச்சர்யமாய் கேட்டாள்.

"அவங்க மகனுக்கு கல்யாணம் ஆகப்போகுது"

"நான் வந்து பத்திரம் சொல்லணுமா?"

"உனக்கு எல்லாமே விளையாட்டுதான். பையன் ஜாதகத்துல ஏதோ கோளாறாம். மூணு மாசத்துக்கு தொடர்ந்து பவுர்ணமி நாள்ல காளஹஸ்தி கோவிலுக்கு போய் ஏதோ சாங்கியம் செய்யணுமாம். மேல் நாட்ல படிச்ச பையன். அதெல்லாம் முடியாதுன்னுட்டான். அதுக்கு பதிலா யாராவது ஒரு கன்னிப் பொண்ணுக்கு பட்டுச்சேலையும், மாங்கல்யமும் வெள்ளித் தட்டுல வச்சு கொடுத்தாலும் நிவர்த்தியாகுமாம். அதை உன் பொண்ணுக்கு குடுக்க விரும்பறேன், மரகதம், கூட அஞ்சு பவுன் நகையும் வெச்சுத் தர்றேன்னாங்க"

"கூட்டி கழிச்சிப் பார்த்தா பிச்சைன்னு சொல்லு"

"சேச்சே... அப்படியெல்லாம் சொல்லாதே ரஞ்சனி. தெய்வ குத்தமா விடும். அந்தம்மா நல்லவங்க. நமக்கு நல்லது பண்ணணும்னு நினைக்கிற வங்க. அவங்கக்கிட்டே போய் என் பொண்ணு கவுரவம் பாக்கிறவ, உங்க பிச்சையெல்லாம் வேணாங்கறான்னு சொன்னா... உன்னைப் பத்தி என்ன நினைப்பாங்க!"

"... ..."

"நல்ல மனசோட தர்றத விஷமா இருந்தாலும் வாங்கிக்கணும் ரஞ்சனி. அதுவும் அஞ்சு பவுன். தங்கம் விக்கிற விலைல... பிச்சை போடறவங்களா இருந்தா... தங்கத்தையா போடுவாங்க?"

"சரி... எப்ப வரட்டும்!" இறங்கி வந்தாள்.

மரகதம் மலர்ந்தாள்.

"இன்னும் ரெண்டு மூணு மாசத்தில கல்யாணம். அன்னைக்குத்தான் பையன் கையால குடுக்க வைப்பாங்க"

"அட... அந்த க்ரேட் பிஸினஸ் மேனை சந்திக்க இப்படியொரு வாய்ப்பா? அந்த கல்யாணம் முடிஞ்ச கையோட அம்மாவை வேலைய விட்டு நிறுத்திடணும்'

இன்றோடு பதினோராவது நாள்!

குழம்பிப் போயிருந்தாள் ரஞ்சனி.

'இவருக்கு என்ன ஆச்சு? ஏன் வரவில்லை? நான் ஏதேனும் அவரை கோபமாக பேசி விட்டேனா? இல்லையே? கடைசியாய் சந்தித்த அன்று கூட என் கையை பிடித்து அழுத்தி விட்டல்லவா விடைபெறது போனார்?'

'பிறகேன் வரவில்லை? உடம்புக்கு முடியலியா? ச்சே... என்ன மடத்தனம் செய்து விட்டேன்? அவர் முகவரியை வாங்கி வைத்துக் கொள்ளவில்லையே! எங்கே கேட்டால்... "வேணாம் ரஞ்சினி! நானிருப்பது வீடென்றால் தாராளமாய் அட்ரஸ் தருவேன். லாட்ஜ். பலவிதமான மனிதர்கள் உலவும் இடம். அங்கு ஒரு அழகான யங்லேடி வந்தால் பார்ப்பவர்கள்

நம்பவிதமாக நினைக்க மாட்டார்கள் ரஞ்சனி"

"சரி.. ஆபத்து அவசரத்திற்காக தொடர்பு கொள்வது எப்படியாம்? உங்க ஆட்டோ மொபைல் வொர்க்ஷாப் அட்ரஸாவது கொடுங்கள்"

"அட.. புரிஞ்சிக்க மாட்டேங்கறியே! அதில் வேலை செய்யும் அத்தனை பேரும் இளவட்டப் பயல்கள். அவர்கள் கண்ணெல்லாம் உன் மீது மொய்த்தால்.. உன் உடம்பில் எலும்புதான் மிஞ்சும். பார்வைக்கே அத்தனை பவர் உண்டு. உன்னை அங்கெல்லாம் என்னால் அனுமதிக்க முடியாது. என் ரஞ்சனியை என்னைத் தவிர வேறு யாரும் பார்வையால் தீண்டினால் கூட என்னால் தாங்கிக்க முடியாதுடா.. ப்ளீஸ்"

இது போதாதா? ரஞ்சனி போன்ற மெழுகு மனம் படைத்த பெண்மையை உருக்குவதற்கு?

இதுதான் எல்லை என்பதையெல்லாம் மீறி அவன் மீது காதல் வளர்ந்துக் கொண்டேப் போனது.

'அட்லீஸ்ட் வொர்க்ஷாப் பேரு என்னன்னு கூட கேட்டுக்க மறந்துட்டேனே.."

அந்த கவலையே அவளை அரித்து கொண்டிருந்தது.

"ஆஹ்.. மெதுவா.. அழுத்திப் பிடிக்காதே அனி"

"உன்னை இப்படி பாக்கறப்ப அசல் பிள்ளை பிடிக்கறவனாட்டம் இருக்கே அர்விந்த்"

"உனக்கு கிண்டலா இருக்கா?" அங்கங்கு உடம்பில் கட்டுபோட்டு, மழிக்கப்படாத முகத்தோடு, களைப்பிலும் ஆக்ஸிடன்ட் தந்த அடியிலும் முகம் மேலும் கறுத்திருந்தது, அர்விந்தனுக்கு.

"அடி. சொல்றியா? உன்னை யாரு அவ்வளோ ஸ்பீடில் காரை ஓட்டிட்டு போகச் சொன்னது? படு அவஸ்தையை.."

"என்னம்மா அனிதா? படுத்துகிடக்கிறவன்கிட்டே கரிசனமா நாலு வார்த்தை பேசவியா? அதை விட்டுட்டு.." வேணி வருத்தம் தோய்ந்த குரலில் கேட்டான்.

"இவர் கேர்லஸ்ஸா ஓட்டிட்டு அடிபட்டா நானா பொறுப்பு? என்ன ஆண்ட்டி நீங்க? சரி.. சரி.. எனக்கு டைமாச்சு. ஒரு முக்கியமான ப்ரோக்ராம் இருக்கு. நான் புறப்படறேன்.. அர்விந்த். நாளைக்கு நீங்க இப்படி படுத்து கிடக்கக் கூடாது. எழுந்து நடமாடணும், சீக்கிரமே ஆபீஸ் போகணும். அப்பத்தானே.. நாம நினைச்சதெல்லாம் நடக்கும். நான் சொல்றது புரியுதா அர்விந்த்?" அனிதா அவன் தலையை கலைத்து சூட்சுமமாய் கூறி விட்டு போய் விட்டான்.

கண்களை மூடிக்கொண்டான் அர்விந்தன். ஒரு கணம். ஒரே ஒரு கணம் அனிதா மீது வெறுப்பாய் வந்தது. உடனே மறைந்தும் போனது.

'அவள் என்னவள்.. எனக்குரியவள்.. எந்த ரகசியத்தையும் மறைக்காதவள்.. சிறு பிள்ளைத்தனமாய் நடந்து கொள்ளும் பிடிவாதம் தவிர்த்து அவள் மீது வேறென்ன குறை சொல்ல முடியும்?'

"ஆசையப் பாரேன்? சீக்கிரம் எழுந்து அவ கழுத்துல தாலிய கட்டணுமாம். இதோ பாரு அர்விந்த். இனி டிரைவர் இல்லாம நீ காரைத்

தொடர்லே கூடாது சொல்லிட்டேன். ஏதோ கொஞ்சம் பலமான அடி கோபி... தப்பிச்சிட்டே... இதுவே ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆகியிருந்தா- ஐயையோ... நினைச்சிக்கூட பார்க்க முடியலியே... சீக்கிரம் உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆகணும். அப்பத்தான் எல்லாம் ஒரு கட்டுக்கு வரும் முத காரியமா ஐயரை கூப்பிட்டு நல்ல நாள் பார்க்கப் போறேன்"

"இல்லே மம்மி... எதுக்கும் அனிதாவ ஒரு வார்த்தை கேட்டுட்டு"

"அவகிட்டே என்ன கேக்கறது? அதான் சொல்லாம சொல்லிட்டுப் போனாளே... இந்தக் காலத்து பசங்களுக்கு பெரியவங்க முன்னாடி எதைத பேசணும், பேசக் கூடாதுன்னு கூட தெரிய மாட்டேங்குது. நமக்கே கத்துக் குடுக்குறாங்க... சிரித்தபடி கண்ணாடியை துடைத்து மாட்டி... அறையை விட்டு வெளியேறினான்.

"கோபி! என்ன கோபி இது? என்னாச்சு எப்படி அடிபட்டுச்சு? முகமெல்லாம் கன்றிப்போய், கையெல்லாம் கட்டுப்போட்டு... ஐயோ... என்ன கோலமிது?" பதினைந்து நாளாய் கண்களில் அகப்படாதவன் இப்படி காயங்களோடு ரஞ்சனி முன் ஆஜரானபோது பஸ் ஸ்டாண்ட் என்றும் பாராது... பதறி... கண்களில் நீர்மின்ன துடித்தவளைப் பார்க்கும் போது முதன், முதலாய் குற்ற உணர்ச்சி தலைதூக்கியது.

'அனிதாவின் கேலிச் சிரிப்புக்கும், இவளுடைய அழுகைக்கும்தான் எத்தனை வித்தியாசம்?'

"என்ன கோபி? ஏன் எதுவுமே பேச மாட்டேங்கறீங்க? உங்களை காணாம நான் பதறிப் போய்ட்டேன். அதை விட அதிர்ச்சியா இப்படி அடிபட்ட காயத்தோட எதிர்ல வந்த நிக்கறீங்களே... என்னங்க ஆச்சு?"

"கடவுளே... இப்படித் துடிக்கிறாளே...? எந்தளவு என்னை நேசித்திருந்தால்... இப்படி பதறுவாள்? உண்மை தெரிந்தால் தாங்குவாளா? இது எவ்வளவு பெரிய பாவம்! நிலைமையின் விபரீதத்தை உணராமல், காயத்தின் வலியை அறியாமல் இவள் இதயத்தை கத்தியால் குத்துவது எந்த விதத்தில் நியாயம்? இவ்வளவு நாள் இதை பற்றி உணராமல் நானும் விளையாட்டுத்தனமாய் விபரீதம் புரிந்து விட்டேனே!

"கோபி... ஏன் இப்படி ஒண்ணுமே பேசாம... என்ன ஆச்சுன்னு சொல்ல மாட்டீங்களா?"

"ந... நத்திங்... ஒரு ஆக்ஸிடன்ட்"

"என்ன?"

"சர்வீஸ்க்கு வந்த காரை எடுத்துட்டு போனப்ப பிரேக் பிடிக்காம மரத்துல மோதி..."

"வேணாம்... இதுக்கு மேல எதுவும் சொல்லாதீங்க. கேட்டாலே நெஞ்சு வெடிச்சிடும் போலிருக்கு. ஐயோ... நான் ஒருத்தி இதெல்லாம் தெரிஞ்சுக்காம, நேரத்துக்கு சாப்பிட்டு, உறங்கிட்டு ஜாலியா இருந்திருக்கேன். வேணாங்க... இந்த மெக்கானிக் ஷாப்பெல்லாம் உங்களுக்கு வேணாம். உங்களுக்கு ஏதாவதொண்ணு ஆச்சின்னா... என்னால தாங்கிக்க முடியாது" குரல் உடைந்து போனது.

"ர... ஞ்... ச...னி"

அவன் வானத்துக்கும் பூமிக்குமாய் உயர்ந்திருந்தாள். பெற்ற தாயின்

அவளின் அன்பும், பரிவும் அவன் முன் நான் நெஞ்சுக்கு இணையாக அவனில் அன்பும், ... போல் உணர்ந்தான். அசிங்கமாகி விட்ட 'புழுவை' போல. குப்பையைப் போல் ... போல் இருந்தது.

'என்ன படிச்சு என்ன! பண்பு தவறி விட்டேனே! இவளையா ஏமாற்றினோம்! இப்படிப்பட்ட அன்பான பெண்ணின் இதயமா சிதறிப் போகப் போகிறது! அனிதா மீது கொண்டு உள்ள பாசத்தால் இப்படி ஒரு வேஷம் போட்டேன்! ஆனால் அந்த வேஷம் இவளுக்கு விஷமாக மாறி விடுமோ! நோ- இதுவரை செய்ததெல்லாம் தவறுதான். அந்த தவறை இனியும் செய்தால்- நான் மனிதனே அல்ல! இவளை பார்க்க இனி வரக்கூடாது. காதலை வளர்க்க கூடாது'

"ரஞ்சனி- வண்டிக்கு நேரமாச்சு. நான் புறப்படறேன்"

"வண்டியா! எங்கே போறீங்க கோபி!"

"அ- அம்மாக்கூட கொஞ்ச நாள் இருந்துட்டு வரலாம்னு..."

"அதுவும் நல்லதுதான். போயிட்டு வாங்க. உடம்பை பத்திரமா பார்த்துக்குங்க. அப்படியே இங்கே ஒரு மருமக இருக்கறது பத்தியும் என் மாமியார் காதுல ஒரு வார்த்தை போட்டு வையுங்க!"

அவளை பரிதாபமாய் பார்த்தான்.

'பாவம்.. எவ்வளவு பெரிய மனக்கோட்டை கட்டியிருக்கிறாள்?'

"பத்து பதினைஞ்சு நாள்ல திரும்பிடுவீங்க இல்லே?" ஆர்வமாய் கேட்டாள்.

"இ- இல்லே. ஒன்னு ரெண்டு மாசமாகும்"

"அவ்ளோ நாளாகுமா? அட்ரஸ் குடுத்துட்டு போங்க கோபி! நான் லெட்டர் போட்டாவது சந்தோஷப்பட்டுக்குவேன்"

"அது- வந்து"

"எது வந்தாலும், போனாலும் அட்ரஸ் குடுங்க. நான் ஒன்னும் லாட்ஜ் அட்ரஸை கேக்கலே. என் மாமியார் வீட்டு அட்ரஸைதான் கேக்கிறேன்" வெட்கத்துடன் அவனை பார்த்து சிரித்தாள்.

செய்வதறியாது திகைத்த அர்விந்தன்- வேறுவழியின்றி இல்லாத ஒரு முகவரியை பேப்பரில் எழுதி கொடுத்ததை பொக்கிஷம் போல் வாங்கிக் கொண்டாள்.

"உடம்பை கவனமா பார்த்துக்குங்க கோபி! நீங்க தனியா போகலை. என் உயிரையும் கையோட அழைச்சிட்டுப் போறீங்க! திரும்பி வர வரைக்கும் நான் நடைப்பிணம்தான்"

"நோ- நோ.. ஐ காண்ட்! இதுக்கு மேல ஒரு அப்பாவி பெண்ணை ஏமாத்த என்னால முடியாது. முடியல. அனிதா- அவ எனக்கு ஒரு சின்ன அடிபட்டாக் கூட துடிச்சிபோய் அழறதை பார்க்க சகிக்கல. இது ரொம்ப பாவம்"

"அர்விந்தன் நான் என்ன சொல்றேன்னா-"

"நீ என்ன சொன்னாலும் சரி. இனி அவளை பார்க்க மாட்டேன்" முகம் இறுகிப் போயிருந்தது.

"அர்விந்த் எனக்காக-"

"உனக்காக இதுவரை செஞ்சதே போதும். இதுவே என்னை அரிச்சிக் கிட்டிருக்கு. நீ என்னை கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்கலைன்னாலும்.. பரவாயில்லை. இனி அவனோட முகத்தை பார்க்கற தைரியம் எனக்கில்லே"

சற்று நேரம் யோசித்த அனிதா அவன் புஜத்தை பிடித்து இறுக்கினாள்.

"கூல் டவுன் மை பாய்! ஓக்கே.. ஓக்கே! இனி நீ அவனை பார்க்க போக வேணாம். நம்ம கல்யாணம் சீக்கிரம் நடக்கணும். ஆன்ட்டிகிட்ட சொல்லி நாள் பார்க்கச் சொல்லு" அனிதா சொன்னதும் விசுக்கென கழுத்தை வெட்டிப் பார்த்தான்.

"ஹேய்!" ஆச்சர்யமும், சந்தோஷமுமாய் போட்டி போட கூவினான். "நீயா சொல்றே!"

"யெஸ்.. நானேதான்"

"என்ன திடீர்னு ஞானோதயம்"

"இந்த கறுப்பன் எனக்குத்தான்னு ஆண்டவன் நான் பிறந்தபோதே சொல்லிட்டான்லியா? அதை நிறைவேத்தணுமே"

"நான் கேட்டப்பல்லாம் ஆறுமாசம் டைம் சொல்லுவியே! அதுக்கு இன்னம் மூணுமாசம் டைமிருக்கே"

"என்னமோ.. இப்பவே பண்ணிக்கணும்னு தோணிச்சு.. கூடாதா?" என்றாள் கொஞ்சலாய்.

"ஹய்யோ.. ஏன் கூடாது! எல்லாமே கூடணுமே..?"

அனிதாவை இரு கைகளாலும் அள்ளி ஒரு சுற்று சுற்றி இறக்கினான். இந்த சந்தோஷத்தில் சோப்பு நுரையைப் போல.. ரஞ்சனி வழித்தெறியப் பட்டாள் அவன் மனதிலிருந்து.

அனிதாவின் உதட்டோரம் ஒரு மர்ம புன்னகை உதயமானது.

## 11

பிரசவிக்கும் வேதனையில் கிழக்கு வானம் முகம் சிவந்திருந்தது.

சாம்பிராணி புகையும், ஊதுபத்தி புகையுமாய் அறையை நிரப்பியிருக்க..

'ஓம்பூர்.. ஓம்புவ..
ஓம் புவர் பவஸ்வ!
ஓம் தத் சவி தர்வரேண்யம் பர்கோ!
தேவஸ்யதீ..'

வேணி கண்மூடி காயத்ரி மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் பூஜை முடித்து வரும் வரை காத்திருந்தான் அரவிந்தன்.

"கிளம்பறேம்மா"

"என்னமோப்பா.. இப்படி கல்யாணத்துக்கு நாளெல்லாம் குறிச் சிட்ட பிறகு, உடனடியா மலேசியா போனாதான் ஆச்சுன்னு விடாப்

பிடிவா செய்யறியே"

"புரியாம பேசாதேம்மா! நாமும் மலேசியா பார்ட்டியும் சேர்ந்து அங்கே புதுசா ஒரு தொழிற்சாலை கட்ட எல்லா அடிப்படை வேலைகளும் முடிச்சிட்டோம். இப்ப திடீர்னு மலேசியா பார்ட்டியோட எனிமி ஸ்டே ஆர்டர் வாங்கிட்டாங்களாம். உடனே என்னை வரச் சொல்லி பஷீர் தகவல் அனுப்பி இருக்கார். நான் போகலைன்னா ப்ராஜெக்ட் அம்பேலாயிடும். இவ்வளவு நாள் பாடுபட்டதுக்கு பலனே இல்லாம போயிடும். பல கோடி நஷ்டம் ஏற்படும். நான் அங்கே இருந்து பிரச்சினைகளை முடிச்சாக வேண்டிய நிலை. எப்போ வருவேன்னு சொல்ல முடியாது. இப்ப என்ன கல்யாணத்தை ஒரு ரெண்டு மாசம் தள்ளி வைங்க. என்ன ஆகிப் போயிடும்"

"என்னமோப்பா! எல்லா ஏற்பாடும் பண்ணி, தாலி கூட ஆர்டர் பண்ணி வந்தாச்சு. இப்ப திடீர்னு தள்ளி வைக்கிறது மனசுக்கு கஷ்டமாயிருக்கு அர்விந்தா!

அனிதாவை சமாதானப்படுத்துறதுக்குள்ள நான் பட்ட பாடு.. இப்ப உங்கிட்டேயும் பட வேண்டியிருக்கு" அர்விந்தன் அம்மாவின் தோளை அன்போடு அணைத்துக் கொண்டான்.

"உங்கிட்ட அனிதாவை பத்தி ஒரு விஷயம் சொல்லணும்"

"என்னம்மா?"

"அவளை இனிமே அழகிப் போட்டி, பார்ட்டி, மாடலிங்னு கலந்துக்க வேணாம்னு சொல்லிடுப்பா. அரைகுறை டிரஸ்சோட அவ போட்டோ பத்திரிகைல வர்றது ஆபாசமா இருக்கு"

"எல்லாம் கல்யாணம் ஆகற வரைக்கும் தானேம்மா. அப்புறம் தன்னால அவளுக்கு மவுசு குறைஞ்சிடும். இதைப் போய் பெரிசா நினைச்சு கவலைப்படாதேம்மா. நான் வர்றேம்மா"

"நல்லபடி போய் வாப்பா" வேணி கண்கள் கசிய வாழ்த்தினாள்.

"பிசினஸ் எப்படி போகுது ரகு?"

"அதுக்கென்ன? அமோகம்!" என்றபடி அர்விந்தனின் கிளாசை தன் கிளாசால் மோதி 'சியர்ஸ்' என்றான்.

"நானே எதிர்பார்க்கலே ரகு. மலேசியாவுல சிக்கல் பெரிசாயிடுச்சு. ஒரு மாசம் அங்கேயே இருந்து எல்லா பிரச்சினைகளையும் சால்வ் பண்றதுக்குள்ள பத்து வருஷம் ஓடிப் போன மாதிரி ஒரு பீலிங்" அலுத்துக் கொண்டான் அர்விந்தன்.

"எப்படியோ பிராப்ளம் தீர்ந்ததே. அதுவரைக்கும் சந்தோஷம்! இந்த பேச்சை விடு. உன்னை பத்தி சொல்லு. எப்போ கல்யாணம்?"

"அநேகமா அடுத்த மாசம்"

"உன் ஹனி யாரு? அதே அனிதாதானே?"

"பின்னே? இதிலென்ன டவுட்?"

"நத்திங்- சும்மா கேட்டேன்"

"நீ எப்போ பண்ணிக்கப் போறே? உனக்கு கல்யாணம் புதுசில்லே- ஜமீன் சாந்தி கல்யாணம். வித விதமா ருசி பார்த்தவன். ஆனாலும் கல்யாணம்னு பண்ணிதானே ஆகணும்?"

"யூ ஆர் ராங் அர்விந்த்! நான் ஒரு வுமனைசரா இருந்தது ஒரு காலம். பாஸ்ட் டென்ஸ். ஆனா நான் மாறி ஆறு மாசமாகுது"

"நீயா? நம்பச் சொல்றியா?"

"நம்பலேன்னா என் ஆபீஸ்ல வேலை செய்ற ரஞ்சனிய வந்து கேட்டுப் பாரு. என் மனசுல உள்ள அழுக்கையெல்லாம் போக்கினதே அவள் தான்"

"ரஞ்சனியா!" சடாரென நினைவில் உதயமானாள்.

'எப்படி எளிதாய் மறந்து போனேன்? ஒரு மாதம் ஆபீஸ்-பிரச்சினையில் சிறு இறகாய் கூட அவளின் நினைவு வரவில்லையே! ஒருவேளை அவளை விளையாட்டாய் காதலித்ததாலா!'

"ஆமாம்! ஷி இஸ் மட். எப்படி சொல்றதுன்னே தெரியலைடா. ஆனா ஒரு பொண்ணு எப்படியெல்லாம் இருக்கணும்னு இலக்கியமும், சாமுத்ரிகா லட்சணமும் சொல்லுதோ, அதெல்லாம் அவகிட்டே இருக்கு"

"ஏதேது சொல்றதை பார்த்தா- நீ அவகிட்டே அம்பேலாயிட்டேன்னு சொல்லு"

"அவ மட்டும் பணக்காரியா இருந்தா எப்பவோ என் மனைவியா ஆக்கியிருப்பேன். ஒரு ஏழைய மனைவியா நினைக்க நான் மகாத்மா இல்லே. அவ மேல காதல், கீதல் ஏதுமில்லை. அவளை பிடிச்சிருந்தது- தட்ஸ் ஆல்! ஆனா பாவம்டா அவ"

"ஏன்- என்ன?"

"இந்த ஒரு மாசத்துல ஆள் பாதியா அடையாளமே தெரியாம ஆகிட்டா. பாவம் இந்த இளம் வயசுல அவ்வளவு துன்பங்களை அனுபவிச்சிட்டா!"

அர்விந்தன் துணுக்குற்றான். விஸ்கி நடுத்தொண்டையில் சிக்கிக் கொண்டது.

"எ- என்ன ஆச்சு? ரஞ்சனிக்கு என்ன ஆச்சு?"

"ஏன்டா பதர்றே? என்னமோ ரொம்ப நான் பழகினவன் மாதிரி! அவளோட அம்மாவும் தங்கையும் இறந்துட்டாங்களாம்"

"எ-ன்-ன!"

உணவு வகைகள் ஆவி பறக்க காத்திருந்தது. கிரிஸ்டல் போன்ற டம்ளரில் தண்ணீர் மிதந்தது. புதிதாய் வேறு ஒரு பெண்மணி உணவு வகைகளை கொண்டு வந்து வைத்தாள். வேணி அர்விந்தனுக்கு பரிமாறினாள்.

"என்னப்பா- ரெண்டு வாய் கூட சாப்பிடலை- அதுக்குள்ளே எந்திரிச்சிட்டே!" வேணி மகனை ஆச்சரியமாய் பார்த்தாள்.

"பிடிக்கலை-" அவனுக்கு நினைவெல்லாம் ரஞ்சனியின் மீதிருந்தது- எதுவுமே இறங்க மறுத்தது.

"புது சமையல்காரம்மா- அதான்! பழகிட்டா சரியாப் போயிடும்"

"ஏன்- மரகதம் இருந்தாங்களே. போயிட்டாங்களா?"

"வந்ததும் வராததுமா ஒரு கெட்ட செய்தியை சொல்லக் கூடாதுன்னு நினைச்சேன். அந்தம்மா இறந்துட்டாங்கப்பா"

"ஏன்? எப்படிம்மா?" அதிர்ந்து போனான்.

"அவளோட சின்ன பொண்ணு.. நீ வைச்சு தற்கொலை பண்ணிட்டாளாம். அது தாங்க முடியாம இவளும் போய் சேர்ந்துட்டா" நிஜமான வருத்தம் குரலில்.

அர்விந்தனுக்கு வேகமாய் ஏதோ தட்டுப்பட, பதற்றத்துடன் கேட்டான்.

"அந்தம்மா வீடு எங்கே இருக்கு?"

"திருவான்மியூர்ல.. ஏம்ப்பா கேக்கறே?"

"சும்மா.. சும்மா.."

"ஒன்னுமில்லேம்மா.. தலைவலிக்கறாப்பல இருக்கு. நான் தூங்கப் போறேன். பால் கொடுத்தனுப்ப வேண்டாம்" கூறி விட்டு தன்னறைக்குப் போய் தொப்பென்று படுக்கையில் விழுந்தவன் நெருப்பில் விழுந்தவன் போல் துடித்தான்.

'ரஞ்சனி மரகதம் மகளா? ஐயோ.. என்ன காரியம் செய்து விட்டேன்? இப்படி என்று தெரிந்திருந்தால்.. ரஞ்சனியின் நிழலைக் கூட பார்த்திருக்க மாட்டேனே! ஐயோ.. ரஞ்சனி எப்படியெல்லாம் துடிக்கிறாயோ? என்னையும் காணாமல், சொந்த பந்தங்களையும் இழந்து விட்டு எப்படி தவிக்கிறாயோ? என்னை மன்னிச்சிடு ரஞ்சனி! இந்த பணக்கார நாயை மன்னிச்சிடு! ஒரு பொம்மை போல நினைச்சி உன்னிடம் விளையாடிய இந்த கிராதகனை மன்னிச்சிடு தாயே' அரற்றிக் கொண்டேயிருந்தான்.

## 'ரஞ்சனியா இவள்!'

கழுத்தெலும்பு துருத்திக் கொண்டு, நிறம் தப்பி, கண்களில் நிரந்தர சோகம் ஒட்டிக் கொண்டு, பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தவளை பார்க்க, பார்க்க மனம் ஆற்றாமையால் பதறியது.

அவள் போகும் பஸ் நாலைந்து வந்தும் ஏறவில்லை. அர்விந்தன் அவள் அருகில் சென்றான்.

"ரஞ்சனி" மெல்ல அழைத்தான்.

படக்கென்று நிமிர்ந்தவளின் கண்களில் இன்ஸ்டண்ட்டாய் கண்ணீர் முத்துக்கள்!

"வந்துட்டீங்களா?" குரல் கூட கிணற்றுக்குள்ளிருந்து கேட்பது போல் வந்தது. கடலில் தத்தளித்தவளின் கைகளுக்கு பற்றிக் கொள்ள ஒரு மூங்கில் கிடைத்த நிம்மதி அவள் மூச்சில்.

"வா.. முதல்ல கார்ல ஏறு" ஏறினாள்.

கார் பீச் ரோட்டில் நின்றதுதான் தாமதம். ஓவென்று கதறியபடி அவன் மார்பில் சாய்ந்தாள்.

"எங்கே போயிட்டீங்க கோபி? நான் அனாதையா ஆயிட்டேன் கோபி. தனி மரமா ஆயிட்டேன். எங்கம்மாவும் தங்கச்சியும் என்னை விட்டு போயிட்டாங்க கோபி"

"கேள்விப்பட்டேன். மனசை தளர விடாதே.. முதல்ல கண்ணை துடைச்சிக்க. என்ன ஆச்சி. நிதானமா சொல்லு" அவளை பார்க்கவே அவனுக்கு பரிதாபமாய் இருந்தது.

புடவை தலைப்பில் முகத்தை அழுந்த துடைத்தும் கண்ணீர் சுரந்தது. நெஞ்சடைக்க நடந்தவைகளை கூறினாள்.

'போட்ட கடிதத்திற்கு பதிலே இல்லையே.. ஏன்? அவருக்கு உடல் நிலை மீண்டும் சரியில்லாமல் போயிருக்குமோ?' ரஞ்சனிக்கு அரவிந்தன் நினைப்பில் கவலை சூழ்ந்து கொண்டது. பஸ் தாமதமாகவே வர, வீடு போய் சேர எட்டானது.

வீட்டில் நிசப்தம்.. வேண்டாத நிசப்தம்!

இவள் செருப்பை கழற்றி முன்பே டாவென்று எதிரில் நின்று வர வேற்று வாயாடும் ராதிகாவின் கனீர் குரல் இன்னும் ஆஜராகவில்லை.

"ராதிகா.. ராதிகா.." அழைத்தபடி அறைக்குள் சென்றாள்.

மூலையில் சுருட்டி வைக்கப்பட்ட துணியாய் ஒடுங்கி படுத்திருந்தாள் அவள்.

"என்னடி? கல்யாண பொண்ணு.. அதுவும் லட்சணமா இல்லாம இப்படி கிடக்கறே? மாப்பிள்ளை வீட்லேருந்து இப்ப யாராவது வந்து பார்க்கணும் உன்னை.. ஏய்.. ராதிகா.. என்னடி அழறியா என்ன?" ராதிகாவின் முதுகு குலுங்கி கொண்டிருந்ததை பார்த்து திடுக்கிட்டாள் ரஞ்சனி.

"என்னடி? உடம்புக்கு என்ன செய்யுது? ராதிகா"

ராதிகா பதிலேதும் பேசவில்லை. அவளின் அழுகை அதிகரித்தது.

"ஏய்.. ஏன் அழறே? இப்ப சொல்லப் போறியா, இல்லையா?" அவளை நிமிர்த்தி கன்னத்தில் ரப்பென்று அறைந்தாள்.

"அடி ரஞ்சனி.. அடி. அப்படியாவது என் உடம்பில பட்ட அழுக்கு மறைஞ்சு போகுதான்னு பார்க்கலாம்"

"ராதிகா.."

"நல்லா அடி ரஞ்சனி! ஏண்டி நொண்டியா பொறந்து தொலைச்சேன்னு அடி! அந்த நாலு சண்டாளங்க வந்து என்னை பிச்சி பிச்சி எடுத்தப்ப ஏண்டி ஓடி தப்பிக்கலைன்னு அடி"

"ராதிகா!" நெருப்பு கொட்டிய அதிர்வு ரஞ்சனியிடம். உடம்பு ஒடு ஒடுவென ஆடியது.

"என்னம்மா சொல்றே?"

"நான் நாசமாயிட்டேன் ரஞ்சனி.. நாசமாயிட்டேன்!" பட் பட்டென்று முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள்.

"கடவுளே.." நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

"எப்படி? யார்? சொல்லுடி.. யாரவங்க?"

"தெரியலியே.. நாலு பேர்! மூணு மணி இருக்கும். கதவை தட்டினாங்க. நீதான் வந்திருக்கியோன்னு கதவை திறந்தேன். அவனுங்க என்னை தள்ளிக்கிட்டு உள்ளே நுழைஞ்சி கதவை சாத்தி.. மொத காரியமா என் வாயில துணிய அடைச்சி"

"ம்!" ரஞ்சனிக்கு மூச்சு முட்டியது.

"நான் போராடினேன், பிறாண்டினேன். அப்பக் கூட என்னை காப் பாத்திக்க முடியலியே.. என்னால ஓடக் கூட முடியலியே.. நாலு பேரும்

மாத்தி- மாத்தி-"

"ஐயோ- என் கண்ணே- நான் என்ன பண்ணப் போறேன்?" ரஞ்சனி அவளை சேர்த்தணைத்துக் கொண்டு கதறினாள்.

"தெருவே நிசப்தமா இருந்தது. நடந்த விஷயம் யாருக்குமே தெரியாது ரஞ்சனி. தெரிய வேண்டாம். தெரிஞ்சா நான் எப்படி அவங்க முன்னால- அம்மா" கேவினாள்.

"யார் அந்த தெரு நாய்ங்க?"

"தெரியலை. ஆனா அதுல ஒருத்தன் சொல்லிட்டுப் போனான். 'உங் கக்காவுக்குத்தான் ஆள் வெச்சி ஒதைக்க தெரியுமா? என்னை ஜெயிலுக்கு அனுப்பி வைச்சானே! ஆனா நான் யாருடி? என்னை சீண்டினா நான் சும்மாயிருப்பேனா? நான் பதிலுக்கு சாப்பிட்டே பார்த்துட்டேன்! அதுவும் நாலு பேரோட பகிர்ந்தே சாப்பிட்டேன். என் மனசு போல யாருக்குடி வரும்? இந்த ஒரு தண்டனையே போதும்டி உங்கக்காவுக்கு' சொல்லி விட்டுப் போயிட்டான்"

ரஞ்சனியால் எதுவுமே பேச முடியவில்லை. 'ராதிகா- என் அன்பு தங்கையே- பூத்துக் குலுங்க வேண்டிய மலரை பறித்து, காலில் போட்டு நசுக்கி எறியப்பட்ட அவளின் வாழ்க்கை- இனி?'

'என்ன செய்யப் போகிறேன்? எதற்காக அடுக்கடுக்காய் இத்தனை அவலங்கள்? எதற்காக இந்த தண்டனை? யார் வம்புக்கும் போகாமல், எறும்பு போல் செல்வம் சேர்த்து மகிழ்ந்து, எதிர்கால நலன்களுக்காக எதிர்பார்ப்போடு காத்திருந்து, பிரத்யேக சாமர்த்தியம் ஏதுமில்லாத இந்த சாதாரண ஏழை குடும்பத்தை சின்னாபின்னமாக்கி பார்த்து அந்த நெருப்பில் குளிர்காய நினைக்கும் சூத்திரதாரிகள் என் குடும்பத்தில் மட்டும் ஏன் இத்தனை பேர்?'

மரகதம் வழக்கம்போல் ஒன்பது மணிக்கு வந்து அறிந்து- மார்பில் அறைந்து கொண்டு கதறினாள்.


"அம்மா- சத்தம் போட்டு அழாதேம்மா- வெளியே எல்லார்க்கும் தெரிஞ்சரப் போகுது. எனக்கு உடம்பெல்லாம் மண்புழு மேயற மாதிரி இருக்கும்மா! எனக்கு அசிங்கமாயிருக்கு. பயமாயிருக்கு. உங்க முகத்தில விழிக்கக் கூட வெக்கமா இருக்கே. என்ன பண்ணப் போறேன்? அம்மா வெளியில யார்ட்டேயும் சொல்லிடாதேம்மா- போலீஸ்ல கம்ப்ளைண்ட் குடுக்காதேம்மா" ராதிகா நடு இரவு வரை இதையேதான் அரற்றிக் கொண்டிருந்தாள்.

அன்றிரவு அடுப்பு எரியவில்லை. எல்லோருமே நடுக்கடலில் சிக்கிக் கொண்டிருப்பது போல் தவித்துக் கொண்டிருந்தனர். மூவரும் உறங்கும் போது அதிகாலை 3 மணியாகி விட்டிருந்தது.

ரஞ்சனிக்குத்தான் அந்த வித்தியாசமான வாசனை நாசியைத் தொட்டது. சட்டென்று கண் விழித்தாள்.

எதுவோ தீய்ந்து கருகும், பொசுங்கி... ராதிகா- பக்கத்தில் படுத்திருந்த ராதிகா எங்கே? பரபரப்பாய் அம்மாவை எழுப்பினாள். பாத்ரூம் கதவு இடுக்கின் வழியே நெருப்பும் புகையும் கசிய..

"ராதிகா-" என்று கத்தினர் இருவரும்.



தெரு மொத்தமும் விழித்து கதவை உடைத்து ராதிகாவை மீட்ட போது, ஒரு கன் வெடித்து, கற்றை முடிகள் காணாமல் போய் தலை நொச நொசப்பாய், சதைகள் பாளம் பாளமாய் வெடித்திருந்தன.

மரகதம் படுத்த பாயை விட்டு அசையவில்லை. ரஞ்சனி சாய்ந்தது சாய்ந்ததுதான். ஏது வந்தாள். அனுதாபமாக ஊழியர்கள் வந்தார்கள். வேலி வந்தான். ஆறுதல் சொன்னார்கள். அவர்கள் இருவருக்கும் துக்கத்தில் கலை கொஞ்சமும் இறங்கவில்லை.

மூன்றாம் நாள்! ஜன்னல் வழியே கசிந்த சூரிய கதிர்கள் ரஞ்சனியின் கண்களை கூச செய்தது. அழுதழுது தலை கனத்து, கண்கள் வீங்கிப் போய், கவிட்ச் போட்டது போல் ராதிகாவின் நினைவு எழ, எங்கேயோ ஒளிந்திருந்த கண்ணீர் அந்த வறண்ட விழிகளில் மீண்டும் எட்டிப் பார்த்தது.

தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு அம்மாவை பார்த்தாள். நிச்சலனமாய் தூங்கிக் கொண்டிருந்தாள். பாவம் இத்தனை நாட்களாக தாங்கவே இயலாத சோகம். ரொம்பவே உடைந்து விட்டாள். பரிதாபமும், அன்பும் மேலோங்க அம்மாவையே பார்த்தாள்.

லேசாய் வாய் பிளந்து, லேசாய் குறட்டை விட்ட திடுக்.. ரஞ்சனி அம்மாவை உற்றுப் பார்த்தாள். குறட்டை சத்தம் வரவில்லையே!

"அம்மா"

மூச்சு விட்டு ஏறி இறங்கும் மார்புகூடு அசையவில்லையே!

"அம்மா!" தூக்கி வாரிப் போட நடுங்கும் கரங்களோடு அம்மாவை அசைத்தாள்.

"அம்மா.."

"அம்மா.."

"அம்மாாா.." வீறிட்டலறினாள்.

ஹார்ட் அட்டாக்கில் ரஞ்சனியை நிராதரவாக்கி விட்டு அம்மாவும் போய் விட்டிருந்தாள்.

இருபது நாள் ஓடிப் போனது! கிட்டத்தட்ட நடைப்பிணமாகி விட்டிருந்தாள் ரஞ்சனி! அந்த வீட்டில் இருந்தால் ரணம் அதிகரிக்கவே, காலி செய்து விட்டு வுமன்ஸ் ஹாஸ்டலில் சேர்ந்து கொண்டாள். தனிமை அவளை கொன்றது. தான் ஒரு அனாதை! எந்த உறவும் இல்லாத அபாக்கியவதி என்பது உறுத்த உடைந்து போனாள்.

'இல்லை கோபி இருக்கிறார்! எனக்காகவே கோபி இருக்கிறார்' தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டாள். தன் குடும்பத்தில் விழுந்த இடி பற்றி விரிவாக எழுதி, உடனடியாக வரச் சொல்லி எழுதினாள். பதில் வரவில்லை. அனுப்பிய கடிதம் திரும்பி வந்தது. குழம்பிப் போனாள். நேரில் சென்று பார்க்கலாமா? வேண்டாம் அது முறையல்ல. ஆனால் எப்படியும் அவன் திடீரென வருவான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையோடு தினமும் பஸ் ஸ்டாண்டில் காத்திருந்தாள் ரஞ்சனி! அவள் நம்பிக்கை வீண் போகவில்லை.

"என்னை விட்டு எல்லோருமே போயிட்டாங்க கோபி! எனக்குன்னு இப்ப உங்கள விட்டா யாருமே இல்லைங்க" அர்விந்தன் இதயம்

கலந்துப் போயிருந்தது.

"அவனை– அந்த வைரவனை போலீஸ்ல பிடிச்சி குடுக்கலியா?"

"சாட்சி? பயன்! அப்புறம் என்னையும் சிதைக்க வருவான். யார் வருவார் என்னை காப்பாத்த?"

"சாரி ரஞ்சனி– என்னாலதானே இதெல்லாம்? நான் அன்னைக்கு பல்ல அமைதியா இருந்திருந்தா–" சட்டென அவன் வாயைப் பொத்தினாள்.

"அப்படியெல்லாம் பேசாதீங்க கோபி! நீங்க மனிதாபிமானத்தோட அவனை அடிச்சீங்க– ஆனா என் ராதிகா செத்ததுக்கு காரணம்– அவளோட மன உறுதியை போக்கினதுதான். இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளக்சை விதைச்சதுதான். அதனால தனக்குத்தானே ஒரு சிறைய உண்டாக்கி அதுக்குள்ளேயே வாழ்ந்ததுதான்! இதுக்கெல்லாம் மூலக்காரணம் யார் தெரியுமா?"

"யார்?"

"அனிதா? மிஸ் மெட்ராஸ் அனிதா! அன்னைக்கு ரெஸ்டாரண்ட் வந்து வம்பிழுத்தாளே– அந்த பணக்கார நாய்தான்"

"நிஜமாவா?" சத்தியமாய் அதிர்ந்து போனான் அர்விந்தன்.

"ஆமாங்க– சில மாதங்கள் முன்பு என் தங்கைய கட்டாயப்படுத்தி ப்ளஸ் 2 எழுத வைக்க முயற்சி பண்ணி டுடோரியல்ல சேர்த்து விட்டிருந்தேன். படிப்பும், அனுபவமும் அவளுக்கு இன்னொரு காலா பயன்படுமேங்கற நப்பாசையில! எக்ஸாம் பீஸ் கட்டிட்டு நாங்க திரும்பி வந்திட்டு இருந்தப்ப, எதிரே வந்த மாருதி கார் என் தங்கை மேலே மோதி விட்டுப் போனது. நல்லவேளை ராதிகா பிளாட்பாரத்தில விழுந்துட்டா! அப்படியும் முட்டியில, நெத்தியில பலமான அடி! முழங்கையில சிராய்ப்பு! அப்பவும் நிறுத்தாம கார் போயிட்டிருந்தது. அங்கிருந்த சில ஆண்கள் பைக்ல விரட்டிப் போய்– காரோட அவளை அழைச்சிட்டு வந்தாங்க. அதிலிருந்து அனிதாவும் இன்னும் மூணு பெண்களும் இறங்கினாங்க! சுத்தி இருந்தவங்க எல்லாரும் திட்டினாங்க! நானும் திட்டினேன். அவளுக்கு கோபம் வந்திட்டது. 'இந்த நாட்ல நொண்டி, குருடு, செவிடெல்லாம் ரோட்ல நடமாடக் கூடாதுன்னு சட்டம் வரணும்– அப்பத்தான் நிம்மதியா கார் ஓட்ட முடியும்னு ஏளனமா சொன்னா– என்னால தாங்க முடியலை! அவளை அறைஞ்சிட்டேன்–

'என்னையா அடிச்சே? பதிலுக்கு உன்னை நான் துடிதுடிக்க வைக்கலே– ஐ'ம் நாட் அனிதான்னு சொன்னா! அவளை பேப்பர்ல பார்த்திருக்கேன். மிஸ். மெட்ராசாம். மனசு அசிங்கமாயிருக்கு. இவளெல்லாம் அழகியா இருந்து என்ன பயன்? இந்த சம்பவத்துக்கப்புறம் என் தங்கை வீட்டை விட்டு வெளியே வரவேயில்லை. அந்த கிராதகி சொன்ன வார்த்தைகள் அவன் மனசை ரொம்பவே புண்படுத்தி விட்டது. எக்ஸாம் கூட எழுத மாட்டேனுட்டா"

"பாதடிக்" என்றான் நிஜமான வருத்தத்தோடு.

'இவ்வளவு நடந்திருக்கிறதா? அனிதா தன் தவறுகளை மறைத்து, நியாயப்படுத்தி சொன்னதை நம்பி– எப்பேர்ப்பட்ட தவறினை இழைத்து விட்டேன்? அவளால்தானே நான் வைரவனை அடித்தேன்? அதனால்

தானே அவன் ராதிகாவை கற்பழித்தான். அதனால்தானே தாலி மாட்டாமல் உடலுக்கு நீ வைத்துக் கொண்டாள்? அதனால்தானே அவன் அம்மாவும் இறந்து போனாள்! இன்று யாருமில்லா அனாதையாய்.. ரஞ்சனி! எல்லாவற்றிற்கும் நானுமல்லவா காரணம்!" மனசாட்சி அரித்தது.

"கோபி.. நான் ஒன்னு கேப்பேன் தருவீங்களா?"

"சொல்லும்மா"

"எனக்கு நிம்மதி வேணும். நான் அனாதை இல்லைங்கற உணர்வு நிஜமாகணும். வறண்டு போயிருக்கிற இதயத்துக்கு உங்க அன்பு வேணும் கோபி! என்னை நீங்க உடனடியா கல்யாணம் பண்ணிக்கணும் கோபி! தனிமை என்னை கொஞ்சம் கொஞ்சமா கொன்னுட்டு இருக்கு கோபி" குரல் உடைந்திருந்தது.

"ரஞ்சனி.." இதை அவன் எதிர்பார்க்கவில்லை.

"உடைஞ்சு போயிருக்கேன் கோபி. எனக்கு உங்க மடி வேணும். மனசு விட்டு அழ உங்க மடி வேணும் எனக்கு! சத்தியமா உடம்பு சுகத்துக்காக கேக்கலை கோபி! அம்மா, அப்பா, அண்ணன், தங்கைன்னு ஒட்டுமொத்தமா உறவுகளை இழந்துட்டு நிக்கற எனக்கு சாஞ்சுக்க ஒரு தோள் வேணும். உங்க அம்மாகிட்டே பேசி சீக்கிரமே எனக்கு உயிர் குடுங்க.. ப்ளீஸ்!" ரஞ்சனி கண்களில் பெருக்கோட.. அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

அர்விந்தனின் கை அனிச்சையாய் அவள் தலையை தடவிக் கொடுத்தது.

## 12

"இந்த டிசைன் பிடிச்சிருக்கா பாரு? இன்னைக்குத்தான் பிரிண்டாகி வந்திருக்கு" அனிதா சோபாவின் கைப்பிடியில் அமர்ந்து அர்விந்தன் மீது சாய்ந்து இடக்கையில் அவன் கழுத்தை வளைத்து பிடித்து வலக்கையால் இன்விடேஷனை நீட்டினாள்.

அசுவாரசியமாய் பார்த்தான்.

"என்ன ஒன்னுமே சொல்ல மாட்டேங்கறே?"

"அனிதா.."

"ம்.."

"நான் ஒன்னு சொல்வேன்.. கேப்பியா?"

"என்ன?"

"இந்தக் கல்யாணத்தை இன்னும் ரெண்டு மாசம் கழிச்சி வெச்சுக்கலாமே?"

"வாட்?"

"ப்ளீஸ்.."

"வொய்?"

"மனசு சரியில்லே"

"பேத்தல்" அலட்சியமாய் சொன்னாள்.

"புரிஞ்சுக்கோ ப்ளீஸ்! உனக்கு தெரியுமா? ரஞ்சனியோட அம்மாவும் தங்கையும் செத்துட்டாங்க"

"ஸோ வாட்...!" என்றான் சர்வ சாதாரணமாக.

"அனிதா உன் மனசுல கொஞ்சம் கூட ஈரமே இல்லையா? அந்த உயிர் பலிகளுக்கு நாமும் ஒரு காரணமா இருந்திருக்கிறோம்"

"நோ.. நோ! விதி முடிஞ்சது. போய் சேர்ந்தாச்சு. இதுக்கு நாமதான் காரணம்னு சொல்றது பிக் ஜோக்"

"உங்கிட்டே இதையெல்லாம் பேசி பிரச்சினையை தீர்க்க முடியாது. இந்த பேச்சு வேண்டாம். கல்யாணத்தை போஸ்ட்போன் பண்ணலாம்"

"அதான் ஏன்?"

"எனக்கு உறுத்தலா இருக்கு"

"நோ.. நான் நம்பலை. நிஜத்தை சொல்லு அர்விந்த்! என் முகத்தைப் பார்த்து சொல்லு! நீ அந்த ரஞ்சனிய லவ் பண்றியா?"

"நான்சென்ஸ்! ஏன் இப்படி பேசறே! இதுவரைக்கும் நான் அவளை அந்த மாதிரி நினைச்சிக் கூடப் பார்த்ததில்லை! ஒரு சிம்பதி தட்ஸ் ஆல்"

"நீ சொல்றது நிஜம்னா.. குறிச்ச தேதியில நம்ம கல்யாணம் நடக்கணும்"

"அனி.. நான் சொல்றதை.."

"நோ மோர் டாக்ஸ்! நீ என்னை நேசிக்கிறது நிஜம்னா.. இப்ப நம்ம கல்யாணம் நடந்தாகணும். அதுவரைக்கும் நாம மீட் பண்ண வேண்டாம்" முகம் கடுமையாக இருந்தது.

"அனிதா.."

"அட்லீஸ்ட், பதினைஞ்சி நாளாவது. நீ என்னை பிரிஞ்சிருந்தா.. என் அருமை உனக்குத் தெரியும். என் பிரிவு உன்னை வருத்தும்"

"தண்டனையா?"

"ஆமாம்! நீ என் மனசை ஹர்ட் பண்ணினதுக்கு"

"இந்த பிரிவு எனக்கு மட்டும்தான் வருத்தத்தை தருமா? உனக்குத் தராதா?"

"ஐ லவ் யூ' பட், அதை நிரூபிக்க என்னால் இதயத்தை பிளந்து காட்டிட்டு இருக்க முடியாது. என் மூடை அவுட் பண்ணிட்டே! லீவ் மீ அலோன்" அனிதா அவனுக்கு முதுகை காட்டினாள்.

அர்விந்தன் தொய்ந்து போய் வெளியேறினான்.

மேற்கே ஆதவன்.. கொஞ்சம் கொஞ்சமாய் அமிழ்ந்து கொண்டிருந்தான்.

ரஞ்சனி அந்த அழைப்பிதழையே வெறித்துப் பார்த்தாள். அர்விந்தன் வெட்ஸ் அனிதா என்றிருந்தது. மிகச் சிறிய கார்டு! பெயர் மற்றும் திருமண நேரம், இடம் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது. 'எத்தனை திமிர் இருந்தால்.. எனக்கு திருமண அழைப்பிதழை அனுப்புவான்? இவனுக்கு கல்யாணம் ஆனால் என்ன? ஆகாமல் போனால் எனக்கென்ன? எதற்காக அனுப்பினான்? இந்த ஹாஸ்டல் முகவரி எப்படிக் கிடைத்தது? என்ன அவன்

நோக்கம்" குழம்பிப் போனாள் ரஞ்சனி.

"ரஞ்சனி.. யாரோ ஒரு அம்மா.. வேணின்னு சொல்றாங்க! உன்னை பார்க்கணுமாம். ரிசப்ஷன்ல வெயிட் பண்றாங்க!" பக்கத்து அறை விஜி சொன்னாள்.

"அட.. அந்தம்மா! என்னைத் தேடி இங்கேயா!" சடக்கென்று எழுந்து சென்றாள்.

"வணக்கம்மா" கைகூப்பினாள்.

வேணி அவளை கருணை பொங்க பார்த்தாள்.

"எப்படிம்மா இருக்கே?"

"இருக்கேன்மா" விரக்தியாய் சொன்னாள்.

"மரகதத்தை நான் வேலைக்காரியா என்னைக்குமே நினைச்சதில்லே. எங்க குடும்பத்துல ஒருத்தியாதான் இருந்தா. நீ ஏம்மா இப்படி அனாதை மாதிரி ஹாஸ்டல்ல தங்கணும்! நானில்லையா உனக்கு? பாத்துக்க மாட்டேனா! எங்க வீட்ல கூட வேணாம். அவுட் ஹவுசிலாவது தங்கிக்க. இப்படி தனித்தனியா கன்னிப் பொண்ணு இருக்கக் கூடாதும்மா"

"உங்க அன்புக்கு நன்றிம்மா! எப்படி இருந்தாலும் உங்களுக்கு பாரமா இருக்க விரும்பலே! இங்க நான் நல்லாதான் இருக்கேன். என்னை மாதிரி நிறைய பெண்கள் இருக்காங்க"

"ரொம்ப பிடிவாதம் உனக்கு"

"அப்படியெல்லாமில்லேம்மா! கேக்க மறந்திட்டேனே.. எங்கேம்மா என்னைத் தேடி இவ்வளவு தூரம்?"

"நல்ல விஷயமாதான். என் பையனை தெரியுமில்லையா?"

"கேள்விப்பட்டிருக்கேன். பார்த்ததில்லை"

"அவனுக்கு கல்யாணம். என் தம்பி பொண்ணு அவிதாவைதான் கட்டறோம்"

"யாரு! மிஸ் மெட்ராஸ்.."

"அவளேதான்"

ஷாக்கடித்தது.

"போயும் போயும் அவருக்கு அவளா?"

"நீ கண்டிப்பா வரணும். அது மட்டுமில்லே. என் பையன் ஜாதகத்திலே தோஷம். அதனால கல்யாணமாகாத ஒரு கன்னி பொண்ணுக்கு.."

"அம்மா சொல்லியிருக்காங்கம்மா"

"வந்துடும்மா.. வராம இருந்துடாதே" அழைப்பிதழ் தந்தாள்.

"அம்மா வந்து.. நான்.." தடுமாறினாள்.

"இதுக்கென்ன சாக்குபோக்கு சொல்லி தப்பிக்க பாக்கறே? பெரிய மனுஷி.. தேடி வந்து அழைக்கிறாளேன்னு கூட நினைக்க மாட்டியாம்மா?" வேணி வருத்தமாய் சொல்லவும் தன்னையே கடிந்து கொண்டாள்.

"வர்றேம்மா.. நிச்சயம் வர்றேன்"

"கொஞ்சம் சீக்கிரமாவே வாம்மா! நீ வந்தபிறகுதான் என் பையன் மணவறைக்கே போகணும்"

"கண்டிப்பா வர்றேம்மா" சிரித்தபடி சொன்னாள்.

"மகாலட்சுமி மாதிரி இருக்கே. சீக்கிரம் உனக்கொரு நல்ல வாழ்க்கை அமையட்டும். வரட்டுமா?"

கைகூப்பி வழியனுப்பி வைத்தாள் ரஞ்சனி.

'யாருக்காக இல்லாவிட்டாலும் இந்த அன்பு உள்ளத்துக்காகவாவது நான் போய்த்தான் ஆகணும்' தீர்மானித்தாள்.

## 13

சந்தன பேழைக்குள் அழகிய கண்ணாடி வேலைப்பாடுகளுடன் வெள்ளி முலாம் பூசப்பட்ட தாஜ்மகால் மனதை கவ்வ, மணமகனுக்கு திருமண பரிசாக தர, உடனே பேக் செய்து எடுத்துக் கொண்டாள்.

கல்யாணம் மணமகள் வீட்டிலேயே! மாலை ரிசப்ஷன் சோழாவில்!

ஆட்டோவில் போய் இறங்கினாள்.

வீடா அது? அடேயப்பா! மைசூர் பேலஸ் மாதிரி பிரமாண்டமாய் இருந்தது. அந்த பெரிய பங்களா முதல் சின்ன குரோட்டன்ஸ் செடி வரை சீரியல் விளக்கு அலங்காரங்கள். நுழைவாயிலில் அந்த கால மன்னர் திருமணத்தை நினைவுபடுத்தும் அலங்காரத் தூண்கள். ஷாமியானா பந்தலின் கீழ் பாலிமர் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. எங்கு திரும்பினாலும் உடல் முழுக்க வைரங்களும், தங்கங்களும் டாலடிக்க அலங்கார பெண்கள். ஒரு பக்கம் ஏ.ஆர். ரகுமான் இசைக் கச்சேரி நடக்க... பிரமிப்பாய் இருந்தது ரஞ்சனிக்கு.

தான் வர தகுதியில்லாத இடம்! கூச்சமாய் இருந்தது. நாதஸ்வர வாத்தியம் காதை மோதியது. இந்த இசைக்கென்று என்ன ஒரு மகத்துவம்? உடம்பை சிலிர்க்க வைக்கிறதே! இதேபோல் எனக்கும் கோபிக்கும் விரைவில் திருமணம் நடக்கும். பெண்களுக்கு வாழ்க்கை துணை நிச்சயம் அவசியம். திருமணம் ஒரு பெண்ணை பாதிதான் முழுமையாக்குகிறது. அன்பான கணவன்தான் அவளை முழுப் பெண்ணாக்குகிறான். என் கோபி இல்லாத வாழ்வு இனி எனக்கில்லை. விரைவில் நல்ல செய்தியுடன் அவர் வருவார்! ஏதேதோ எண்ணங்கள்.

"என்ன ரஞ்சனி இங்கேயே நின்னுட்டே! நல்ல பொண்ணும்மா நீ! உனக்காகத்தான் நான் காத்திருந்தேன்" வேணி அவள் கையை பற்றியதும் தான் ரஞ்சனி மீண்டாள்.

"வாம்மா உள்ளே வா" வேணி முன்னால் நடந்தாள்.

வாசலில் கால் வைத்தபோது புதிய உலகில் நுழைவது போன்ற ஆச்சரியங்கள் புலப்பட்டன. பனிக்கு போன்ற ஷாண்ட்லியர்கள். போன்சாய் மரங்கள். சுவர்களில் சுத்தம்.. மகா சுத்தம்! கார்பெட்டில் கால் வைக்க தயக்கமாக இருந்தது. பணம், சகட்டு மேனிக்கு எங்கும் இறைக்கப்பட்டிருந்தது. கிரிக்கெட் விளையாடலாம் போல பரந்து விரிந்த ஹால். அதன் நடுவில் பூக்களால் அழகாக, நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தது மணவறை! இங்கெல்லாம் அம்மா நடமாடியிருப்பாள் அல்லவா? அம்மாவின் நினைவு எழ சட்டென இறுகிப் போனது இதயம். வேணி அவளை ஒரு

அறைக்கு அழைத்துச் சென்றாள். அந்த அறையின் ஏகப்பட்ட பெண்கள் [illegible]. அவர்களின் நடுவே தேவதை போல் கல்யாண ராணியாய் அதி அழகோடு அமர்ந்திருந்தாள் அமிதா!

"இதுதான் என் மருமக..."

அமிதா குரல் கேட்டு திரும்பி நிறுத்திவிட்டு பின் சிரித்தாள்.

"ஹலோ.. நீங்க வரமாட்டீங்களோன்னு நினைச்சேன். பரவாயில்லை.. வந்து கலக்கிட்டீங்க"

"என்ன அமிதா! ரஞ்சனியை உனக்கு முன்னாடியே தெரியுமா?"

"அப்ப உங்களுக்கும் தெரியுமா ஆன்ட்டி!" திருமாலினியை ஆச்சரியப்பட்டாள்.

"நல்லா கேட்டே போ! நான் குரல் கொடுத்துட்டா நீ ரெடியாயிடு. இரு ரஞ்சனி.. என் பிள்ளையை அழைச்சிட்டு வந்திடறேன்" வேணி பரபரப்பாய் அகன்றாள்.

"டியர் பிரெண்ட்ஸ்.. நான் இவங்ககிட்டே கொஞ்சம் பர்சனலா பேச வேண்டியிருக்கு" அமிதா சொன்னதும்.. தோழியர் படை அகன்றது.

"மிஸ் ரஞ்சனி! என் கல்யாணத்துக்கு உங்களை நான் மறக்காம ஏன் அழைச்சேன் தெரியுமா?"

"..."

"நான் எதையும் மறக்கலே.. அதனாலதான்! கண்டு விருந்துக்கும், கட்டை விருந்துக்கும் ஏகப்பட்ட வித்தியாசமிருக்கு. உன் தகுதியை மறந்து என்னை நாலு பேர் முன்னிலையிலே அடிச்சேயில்லை. நான் யாருன்னு உனக்கு காட்ட வேணாமா!"

"அதனால!" புரியாமல் பார்த்தாள் ரஞ்சனி.

"சும்மா விடுவேனாடி உன்னை? நீ நினைச்சி நினைச்சி குமுறணும். அந்த அழுகை நீ சாகறவரை தொடரணும். நான் வெட்டி வைச்ச பள்ளத்துல உன்னை உனக்கேத் தெரியாம விழ வைச்சேன். இன்னும் கொஞ்ச நேரத்துல உனக்கே எல்லாம் புரியும். எனக்கு நீ கண்ட ஷாக் குடுத்தே! பதிலுக்கு நான் கொடுக்கணுமில்லையா! ஆனா இது கண்ட இல்லை. வெறும் ஷாக்தான்"

சத்தியமாய் அவள் சொல்வது எதுவும் ரஞ்சனிக்கு புரியவில்லை.

ஆனால் நடக்கக் கூடாத ஏதுவோ ஒன்று நடக்கப் போவது போல் இதயம் படபடவென அடித்துக் கொண்டது.

"வா.. அர்விந்த்.. நம்ம மரகதம் இல்லே.. அவ பொண்ணுதான் இது" மகனை அழைத்து வந்த வேணி சொல்லிக் கொண்டே வந்தாள்.

"வணக்க..." வணங்கிய ரஞ்சனியின் கைகள் பரத்து போக.. கையில் இருந்த பரிசு பெட்டி கீழே விழுந்து 'ச்சலீர்' என உடைந்து நொறுங்கியது. மணக்கோலத்தில் அவன்!

"நீங்களா...?" ரஞ்சனியின் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

"அட... என் பையனை தெரியாதுன்னு சொன்னியே" வேணியின் குரல் அவள் செவியைத் தொடவில்லை.

'பட்டு வேட்டியும், சட்டையும் பளபளக்க மணமகனாய் என் எதிரில் நிற்பது என் கோபியா? இந்தம்மா அரவிந்தன் என்கிறாரே! ஐயோ.. இதெல்லாம் என்ன?'

அரவிந்தன் கூட இவளை இங்கு எதிர்பார்க்கவில்லை. [illegible] பெண் என்றுதான் நினைத்து வந்தான்.

"ரஞ்சனி.." குரல் வெளியே வரவில்லை.

அனிதா இந்த நாடகத்தை சந்தோஷமாய் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் எதிர்பார்த்து காத்திருந்த நொடி இதுதான். அந்த ஏழைப் பெண் அணு-அணுவாய் துடித்து வெடித்து சிதறுவதை கண்குளிர ரசித்தாள்.

அரவிந்தனுக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. அருகில் அம்மா வேறு! குட்டு உடைந்து விடுமோ என்கிற பயம்.

"சாரி ரஞ்சனி" என்றான்.

"சாரியாமே! இவன் என்னடாவென்றால் அதிர்ச்சி[illegible]றேன் என்றான். இவரானால் மாப்பிள்ளை கோலத்தில் வந்து நிற்கிறார். இவர் பெயர் கோபி இல்லையா? அன்று ரெஸ்டாரெண்டில் இவன் வந்த போது தெரியாதது போல் நடித்தது ஏன்? இந்த கோடீஸ்வரன், கோபியாக, மெக்கானிக்காக நடித்தது ஏன்? அப்படியானால்.. அப்படியானால்.. இவர் என்னை காதலிப்பது போல் நடித்தாரா? ஐயோ.. அதெல்லாம் நடிப்பா? என்னிடம் பாசம் பொழிய பேசியதெல்லாம்.. எழுதி பேசிய வசனங்கள் தானா? என் ஜீவனை விடவும் மேலாக நேசித்தேனே.. அதெல்லாம் அர்த்தமில்லாதவையா? எல்லாமே வேஷம்தானா? கடவுளே, ஏழையாக பிறந்தது என் பாவமா? பணக்காரர்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம். சட்டம் கூட கண் பொத்திக்கலாம். நாங்கள் நியாயமாய்க் கூட வாயைத் திறக்கக் கூடாது? என்ன நீதி இது? அப்படியே என்னை வெட்டிப் போட்டிருக்கலாம். சுட்டு பொசுக்கி இருக்கலாம். அதையெல்லாம் விட்டு என்னை பழிவாங்க காதலையா கருவியாக்க வேண்டும்? ஐயோ.. என்ன செய்யப் போகிறேன்? பற்றியது கயிறல்ல.. பாம்பு! அம்மா.. என் கதிய பாரும்மா.. சீரழிஞ்சி நிக்கறேம்மா! சபையில நிக்க வச்சு என்னை எல்லோரும் ஏமாத்தறாங்கம்மா! என்னால இதை தாங்கிக்க முடியலியே.. அம்மா..'

ரஞ்சனியால் அழ முடியவில்லை. பலமான அதிர்ச்சி.. அவள் உணர்வுகள் மொத்தத்தையும் செயலிழக்க வைத்து விட்டன.

வேணிக்கு எதுவும் புரியவில்லை.

முதன் முதலாய் அறியா வயதில் பள்ளிக்கு போனது. அப்பா கை நிறைய சாக்லேட்டையும், பலப்பத்தையும் கொடுத்து சமாதானப்படுத்தியது.. சைக்கிள் ஓட்ட கத்துக்கிறேன் பேர்வழி என்று கை காலையெல்லாம் உடைத்துக் கொண்டு வந்தது..

முதன் முதலாய் தான் மலர்ந்ததை.. பயமும், திகிலுமாய் மறைத்து இரண்டு நாள் கழித்து அம்மாவிடம் அழுதபடியே சொன்னது.. பத்தாவது படிக்கும்போது ஒரு ரோமியோ ரோடிலேயே வழிமறித்து லவ் லெட்டரை கொடுத்தபோது, செய்வதறியாது ஓவென்று அழுதது..

அப்பா இறந்தது. அண்ணன் இறந்தது. தங்கையை கரியாய் எரிந்து போய் பார்த்தது. அம்மா இறந்தது– இது எதுவுமே மறக்கவில்லையே. என்

உயிரோடு கலந்து விட்ட இவனை எப்படி மறப்பேன்? இவன் காட்டிய அன்பெல்லாம் கடலில் கொட்டிய பால் போல் அர்த்தமேயில்லாத பழி வாங்கல் என்பதை எப்படி ஜீரணிக்கப் போகிறேன்! ஐயோ.. என்னால் எதையும் செய்ய முடியவில்லையே.. கடவுளே.. கடவுளே.. எனக்கு இந்த வஞ்சிக்கப்பட்ட உயிர் வேண்டாம்.. வேண்டவே வேண்டாம்' உடல் வெட வெடவென்று நடுங்க, கண்கள் மூடிக் கொண்டன.

'இதென்ன உலகமெல்லாம் இவ்வளவு பீதி நிறைந்ததாய் இருக்கிறதே! இலைகள் எல்லாம் ஏனிப்படி உதிர்ந்து போய்க் கொண்டிருக்கின்றன? பூமி ஏனிப்படி சுழன்று கொண்டேயிருக்கிறது! இயற்கை பிரளய தாண்டவம் பண்ணுகிறதா? எங்கே மிதந்து போய் கொண்டிருக்கிறேன் நான்? உயிரும் உடலும் தள்ளாடுகிறது. பிடித்துக் கொள்ள ஏதாவது ஆதாரம் கிடைத்தால் நன்றாயிருக்கும். எங்கே ஆதாரம்?"

ரஞ்சனியின் மூளைப் பகுதியில் கசமுசாவென்ற குழப்பம். இருள் சூழ்ந்தது. எங்கும் இருள். அவள் கால்கள் மெல்லிய ஒரு கயிற்றின் மேல் நடந்து சென்றன. இடதுபக்கம் காட்டாறு கரைபுரண்டு ஓட— வலதுபுறம் கோபுரமாய் பூக்குவியல். ரஞ்சனியின் கால்கள் தடுமாறின.

வேரறுந்த மரமாய் சரிந்தாள் ரஞ்சனி. சட்டென்று தாங்கி பிடித்தான் அர்விந்தன். அடுத்தகணம் கண்கள் செருக, கையும் காலும் வெட்டிக் கொண்டன,

வேணி அலறி விட்டாள்.

"என்ன நடக்குது இங்கே? என்ன அர்விந்த் இதெல்லாம்... ஐயோ இந்த பொண்ணுக்கு என்ன ஆச்சு?"

அனிதாவின் முகம் கூட வெளிறி போனது.

'நிலைமை மோசமாகி விட்டதே! இப்போது என்ன செய்வது?'

"ரஞ்சனி.. ரஞ்சனி.." அவளை தன் மடியில் கிடத்தி கன்னங்களில் பட்பட்டென்று தட்டினான். அர்விந்தனின் கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு நின்றது.

"முதல்ல அவளை ஹாஸ்பிடலுக்கு தூக்கிட்டு போகணும். இந்த நிலைல இங்கேயே வச்சிருக்கறது ஆபத்து" வேணி சொல்லவும், தாமதிக்காமல் அவளை அப்படியே தூக்கி வந்து காரில் கிடத்தினான்.

திருமணத்திற்கு வந்திருந்த கூட்டம் மொத்தமும் புரியாமல் வேடிக்கை பார்த்தது. அப்போதுதான் காரிலிருந்து இறங்கிய ரகு கூட அதிர்ந்து போனான்.

பின்னாடியே ஓடி வந்த அனிதாவைக் கூட லட்சியம் செய்யாமல் காரை ஸ்பீடாய் செலுத்தினான் அர்விந்தன்.

அனிதாவின் பற்கள் நறநறத்தன.

'சனியனை இவர்தான் தூக்கிட்டு போகணுமா? எத்தனை வேலைக் கார நாய்கள் இருக்கிறார்கள். அதோடு நிற்காமல் இவரே காரை ஓட்டிக் கிட்டு போகிறாரே! வரட்டும் பேசிக்கறேன்'

"என்ன வேணி? யாரந்த பொண்ணு? அர்விந்தன் தூக்கிட்டு எங்கே போறான்?" வயதான மூதாட்டி கேள்வியை துவக்கி வைக்க.. அடுத்தடுத்து கேள்விகணைகள். தாங்க முடியாத வேணி அனிதாவின் கையை பிடித்து

ஒரு அறைக்குள் சென்றாள். கூடவே அனிதாவின் பெற்றோரும். கதவு தாளிடப்பட்டது.

"சொல்லு அனிதா! எனக்கு எதுவுமே புரியல. ரஞ்சனிய உனக்கெப்படி தெரியும்? என்ன பண்ணீங்க அவளை?"

வேணியின் பார்வை அனிதாவுக்கு புதியது. அதில் தெரிந்த கோபமும், வெப்பமும் அவளை எல்லாவற்றையும் சொல்ல வைத்தது.

## 14

சுகம் ஹாஸ்பிடல்!

ஐ.சி. யூனிட்டில் இருந்து வெளிப்பட்டார் டாக்டர் ராஜேந்திரன்.

"டாக்டர்!" தவிப்போடு நெருங்கினான் அர்விந்தன். அவன் பின்னே ரகு! அர்விந்தனின் கார் பின்னாடியே இவனும் காரில் தொடர்ந்து வந்து விவரங்கள் அறிந்து திகைத்துப் போனான். ரஞ்சனிக்காக அவன் இதயமும் அழுது கொண்டிருந்தது.

கண்ணாடியை கழற்றி கர்ச்சிப்பால் முகத்தை துடைத்துக் கொண்டவர் அர்விந்தனின் முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

"என்ன டாக்டர்?" இவன் பல்ஸ் வேகமாய் துடித்தது.

"ஷீ இஸ் கவுண்டிங்.."

"நோ... நோ.. நோ டாக்டர்" அர்விந்தன் அவரை முழுதும் சொல்ல விடாமல் அலறினான்.

"அவ பிழைக்கணும் டாக்டர்! கண்டிப்பா பிழைக்கணும்"

"இட்ஸ் கிரிட்டிக்கல் கேஸ்"

"நோ... நோ.. எனக்கு நம்பிக்கை இருக்கு அவ பிழைச்சுப்பா"

"அப்படி ஒரு அதிசயம் நடந்தா, உங்களை விட நான்தான் அதிகமா சந்தோஷப்படுவேன் மிஸ்டர் அர்விந்தன். அந்த பெண் பலமான அதிர்ச்சியால தாக்கப்பட்டிருக்கா! மெண்டலி ஷி இஸ் ப்ரோக்! கோமா ஸ்டேஜுக்கு போயாச்சு. இலை நுனியில ஒட்டிக்கிட்டிருக்கிற பனித்துளிப் போல.. அவ உயிர் எந்த நேரமும் பிரியலாம்"

"ரஞ்சனீ.." சேரில் அமர்ந்து கைகளால் முகத்தைப் பொத்தி அழுதான்.

பரந்து விரிந்த கம்பெனிகளின் சாம்ராஜ்ய தலைவன், ஒரு பெண்ணுக்காக அழுது கொண்டிருந்தான். அருகே ரகு ஆறுதல் சொல்ல வார்த்தைகளின்றி தடுமாறினான்.

"அர்விந்தா.. என்னப்பா? அந்தப் பொண்ணு எப்படியிருக்கா?" வேணி மூச்சு வாங்க மகனை நோக்கி ஓட்டமும் நடையுமாய் வந்தாள். அவள் பின்னே அனிதா, அவளின் பெற்றோர்.

எச்சிலை கூட்டி விழுங்கிக் கொண்ட அர்விந்தனால் பேச முடியவில்லை.

"என்னப்பா?" மகனின் தலையை பாசமாய் கோதி விட்டாள்.

"அவ.. ரஞ்சனி.. என்னாலதாம்மா.. என்னாலதான்"

"எல்லாம் அனிதா சொன்னா! பஞ்சிலே படியும் தீப்பொறிய விட மனதிலே படியற நுனிவேஷம் வேகமா பரவும். அப்படி அனிதாவோட நுனிலே ஒத்தாளை, ஒரு பொண்ணோட 'உயிர் விளையாட்டு' பொருளாயிட்டது! இதிலே உன் தப்பு எதுவும் இல்லை.. எந்திரிப்பா! போகலாம். அந்தப் பொண்ணை டாக்டர் பார்த்துப்பார்"

"இல்லம்மா.. அவ ரொம்ப சீரியஸா இருக்கா"

"அதுக்கு நாம என்ன பண்ண முடியும் அர்விந்தா? எதுவும் நம்ம கையில இல்லேப்பா! போற உயிரை தடுத்து நிறுத்தற சக்திய ஆண்டவன் மனுஷனுக்கு குடுக்கலே. அந்தப் பொண்ணோட விதி எப்படியோ.. அப்படித்தான் நடக்கும். அவ மரணத்துக்கு காரணமா அனிதாவை விளையாட வெச்சுட்டான். நீ எந்திரிச்சி வாப்பா"

"அம்மா.." அதிர்ச்சியாய்ப் பார்த்தான்.

'அம்மாவா பேசுவது! இதுவே அவள் மகளாயிருந்தால் இப்படி பேசுவாளா! அல்லது அனிதாவாயிருந்தால்.. இந்த இடத்தை விட்டுதான் அசைவாளா! பணம்.. பணக்காரர்களுக்கே உரிய குணம் பேச செய்கிறது. ஏன் நான் கூட அந்த திமிரிலதானே ரஞ்சனியிடம் விளையாடினேன்? மன்னிக்க முடியாத தவறையல்லவா இழைத்து விட்டேன்?' அர்விந்தன் இறுகிப் போனான். அதே முகபாவத்தோடு "இல்லேம்மா.. அவளை இந்த நிலையில விட்டுட்டு என்னால வர முடியாது"

"என்ன மாப்பிள்ளை சொல்றீங்க? அவ எப்ப சாகறது? நீங்க எப்ப வர்றது! முகூர்த்தத்துக்கு இன்னும் அரை மணி நேரம்தான் இருக்கு வர மாட்டீங்கன்னா எப்படி?" அனிதாவின் அப்பா லேசாய் கோபப்பட்டார்.

"நிறுத்திடுங்க.. இந்த கல்யாணத்தை நிறுத்திடுங்க"

"அர்விந்த்!"" அதட்டினாள் வேணி.

"ஹேய் வாட் ஹாப்பன்ட்?" அனிதாவும் திடுக்கிட்டு அவன் தோளில் கை வைத்தாள். 'என்னாயிற்று இவனுக்கு?'

அதை நாசூக்காய் விலக்கினான்.

"ப்ளீஸ்.. யாரும் என்னை கம்பெல் பண்ணாதீங்க! லீவ் மீ அலோன்.. எல்லோரும் போங்க"

"அர்விந்தா.. உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?"

"இல்லேம்மா இப்பத்தான் தெளிஞ்சிருக்கு"

"நீ குழப்பத்திலே இருக்கே. வா போகலாம்! அந்த பொண்ணு பிழைச்சுக்குவா! எவ்வளவு பணமானாலும் பரவாயில்லை. ஸ்பெஷல் டாக்டர்சை வரவழைச்சு காப்பாத்திடலாம். நீ வாப்பா"

அர்விந்தன் கையெடுத்து கும்பிட்டான்.

"என்னை மன்னிச்சிடுங்க! என்னால அனிதாவை கல்யாணம் பண்ணிக்க முடியாது. அவளை ஆழமா நேசிச்சேன். ஆனா, அந்த அன்பை இன்னொரு பெண்ணை மனசை பழிவாங்க பயன்படுத்திக்கிட்டா! அனிதா எனக்கு வேணுங்கறதுக்காக.. அவளுக்காக.. அதையும் செய்தேன். தலையாட்டி பொம்மையாய்.. அவ சொன்னபடியெல்லாம் கேட்டேன். ஆனா ரஞ்சனி என் அன்பை உண்மையா எண்ணி பாசத்தை பொழிஞ்சா..

அதெல்லாம் எனக்கு விளையாட்டா இருந்துச்சு. பொழுதுபோக்கா நினைக்க ஆரம்பிச்சேன். ஆனால் அந்த விளையாட்டே... அவளை அநாதையாக்கிட்டது. ஒரு பெண்ணிடம் எப்படி வேணாலும் விளையாடலாம். காதலை மட்டும் விளையாடவே கூடாது. ரஞ்சனிய நான் நேசிக்கலே. ஆனா அவளுக்கு நான் இல்லேன்னு தெரிஞ்சதும்... இதயமே வெடிச்சு போய், உணர்வுகளை தொலைத்து, மரணத்தை எதிர்நோக்கி படுத்திருக்காளே... அவளோட அன்பு எவ்வளவு மகத்துவமானது? அந்த பாசத்துக்கு முன்னாடி அவிதா தூசுதாம்மா! எனக்கு ரஞ்சனி வேணும். அவ உயிரோட வந்தாலும் சரி, செத்தே போனாலும் சரி, அவளோட கள்ளம் கபடில்லாத காதலுக்கு மட்டுமே நான் சொந்தக்காரன். என் வாழ்க்கையில் திருமணம் என்றால்... அது ரஞ்சனியோடதான். அவள் பிழைக்கணும்... பிழைப்பா! எனக்கு நம்பிக்கையிருக்கு! ஃபாரின்லே போய் படிச்சி, பகட்டோடும், திமிரோடும் வாழ்ந்த அர்விந்தன் செத்துப் போயாச்சி! நான் கோபி! என் ரஞ்சனி பிழைச்சி எழுந்து வரணும். என் தவறுகளை மன்னிச்சி... என்னை ஏத்துக்கறவரை அவளுக்காக காத்திருப்பேன். போயிடுங்க... அவிதாவுக்கு என்னை விட நல்ல மாப்பிள்ளை கிடைப்பான். ஆனா என் ரஞ்சனிக்கு என்னை விட்டா... வேற யாருமேயில்லை. அவ அனாதைம்மா... என்னால உறவுகளை பறிகொடுத்துட்டு நிக்கறவ! இந்த நிமிஷத்திலேருந்து அம்மாவா, அப்பாவா, புருஷனா, எல்லாமுமே அவளுக்கு நான்தான். ப்ளீஸ் என்னை என் போக்குல விட்டுருங்க. உங்களை கெஞ்சி கேட்டுக்கறேன்'' கன்னத்தில் வழிந்த நீரினை சுண்டியெறிந்து விட்டு ஆவேசமாய் ஒரு அறைக்குள் புகுந்து கொண்டான் அர்விந்தன்.

நடந்தவைகளை கிரகித்துக் கொள்ளும் சக்தியற்று, பிரமை பிடித்து நின்றிருந்தாள் அவிதா. அங்கிருந்த அனைவருமே அதிர்ச்சியில் வாயடைத்துப் போயினர்.

"ரகு... நீயாவது அவனுக்கு நல்ல புத்தி சொல்லக் கூடாதா?" வேணி தழுதழுப்பாய் கேட்டாள்.

"வாழ்நாளிலேயே அவன் செய்யப் போற நல்ல காரியத்துக்கு... நான் போய் புத்தி சொல்றதா? வேணாம்மா! அர்விந்தனை இனி யாராலும் அசைக்கவே முடியாது. ரஞ்சனி பிழைக்கணும்னு கடவுளை நிர்ப்பந்திக்கறதை தவிர வேற வழியே இல்லைம்மா" என்றான் ரகு பொறுமையாய்.

தனியறைக்குள் அர்விந்தன் கண்மூடி, கை குவித்து பிரார்த்தித்துக் கொண்டிருந்தான்.

"ரஞ்சனியை எனக்கு கொடுத்து விடு இறைவா! அவளை உயிரோட எனக்கு கொடுத்து விடு''

(முற்றும்)

Deviyin KANMANI Tamil Monthly October 1996 TNMS(C) 10[illegible]

நினைத்துப் பார்க்கிறேன் என் நெஞ்சம் இனிக்கின்றது.

என் இனிய கண்மணி ப்ரியர்களுக்கு! முதல்பரிசு பெற்ற நாவல் என்றதும் அதிகமாய் எதிர்பார்த்து— ஒருவேளை அந்தளவு இந்த நாவல் அதை ஈடு செய்யாவிட்டால்.. மன்னியுங்கள்.

இத்தருணத்தில் சட்டென்று என் நினைவிற்கு வருபவர் உமா மகேஸ்வரி அவர்கள்தான். நான் வெறும் சிறுகதை எழுத்தாளராக மட்டுமே இருந்த நேரத்தில் 'பச்சைக்கிளி ரெண்டு' என்கிற அவரின் அறிமுக நாவலைப் படித்த பின்பே 'நாமும் நாவல் எழுதினால் என்ன!' என்கிற எண்ணம் ஏற்பட்டது. அந்த ஆர்வ விதையே இன்று இந்த[illegible] என்னை உயர்த்தியி[illegible]ருக்கிறது என்பதால் அவரை நன்றி[illegible] நினைவு கூர்கிறேன்.



உங்கள் சி[illegible]

ஆர். மணி[illegible]

